# மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

# குடிமக்கள் சாசனம்

# 2019–2020

# பொருளடக்கம்


| வ. எண் | அத்தியாயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 01 – 03 |
| 2. | மருத்துவக் கல்வி இயக்ககம் | 04 – 14 |
| 3. | மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் | 15 – 21 |
| 4. | பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை | 22 – 36 |
| 5. | குடும்ப நல இயக்ககம் | 37 – 40 |
| 6. | இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம் | 41 – 56 |
| 7. | தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு துறை | 57 – 60 |
| 8. | மருந்து கட்டுப்பாட்டு நிர்வாகத் துறை | 61 – 70 |
| 9. | தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை | 71 – 73 |
| 10. | மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் | 74 – 78 |
| 11. | தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரத் திட்டம் | 79 – 80 |
| 12. | தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் (TNMSC) | 81 – 85 |
| 13. | தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் | 86 – 94 |
| 14. | தமிழ்நாடு மாநில பார்வை இழப்பு தடுப்பு சங்கம் | 95 – 101 |
| 15. | இதர இனங்கள் | 102 – 104 |

## அத்தியாயம் - 1

### அறிமுகம்

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் கீழ் இயங்கும் இயக்குநகரங்கள் பொது மக்களுக்கு அளிக்கும் மருத்துவ சேவைகள் பற்றிய விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளது. மக்கள் சாசனம் பொது மக்களுக்கு அளிக்கப்படும் மருத்துவ சேவைகள், மருத்துவத்துறைச் சார்ந்த மக்களின் உரிமைகளும் மற்றும் அவர்களின் பொறுப்புகளும் இம்மக்கள் சாசனத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மருத்துவம் மற்றும் குடும்ப நலச் சேவைகள் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பல்வேறு இயக்குநகரங்களின் விபரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | அலுவலகத்தின் பெயர் | முகவரி | தொலைபேசி எண். |
|---|---|---|---|
| 1. | இயக்குநர்,<br>மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை,<br>சென்னை. | DMS வளாகம்<br>அண்ணா சாலை,<br>தேனாம்பேட்டை,<br>சென்னை-6 | 044-2434 3271<br>044-2436 4755 |
| 2. | இயக்குநர்,<br>மருத்துவ கல்வி துறை,<br>சென்னை. | 162, இ.வே..ரா. பெரியார் சாலை,<br>கீழ்ப்பாக்கம்,<br>சென்னை-10. | 044-2836 4501<br>044-2836 4502 |
| 3. | இயக்குநர்,<br>பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து துறை,<br>சென்னை | DMS வளாகம்<br>அண்ணா சாலை,<br>தேனாம்பேட்டை,<br>சென்னை-6 | 044-2432 0802<br>044-2433 5075 |
| 4. | இயக்குநர்,<br>குடும்ப நலத்துறை,<br>சென்னை | DMS வளாகம்<br>அண்ணா சாலை,<br>தேனாம்பேட்டை,<br>சென்னை-6 | 044-2432 1021<br>044-2432 0933 |
| 5. | இயக்குநர்,<br>இந்திய முறை மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவ துறை<br>சென்னை | அரும்பாக்கம்,<br>சென்னை-106. | 044-2621 4718<br>044-2621 4929 |
| 6. | இயக்குநர்,<br>மருந்து கட்டுப்பாடு துறை<br>சென்னை | DMS வளாகம்<br>அண்ணா சாலை,<br>தேனாம்பேட்டை,<br>சென்னை-6 | 044-2432 1830 |

| | | | |
|---|---|---|---|
| 7. | தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரத் திட்டம் | DMS வளாகம்<br>அண்ணா சாலை,<br>தேனாம்பேட்டை,<br>சென்னை-6 | 044-2434 5990<br>044-2433 6476 |
| 8. | தேசிய நலக்குழுமம் | DMS வளாகம்<br>அண்ணா சாலை,<br>தேனாம்பேட்டை,<br>சென்னை-6 | 044-2432 0563<br>044-2432 1310 |
| 9. | உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை ஆணையரகம் | DMS வளாகம்<br>அண்ணா சாலை,<br>தேனாம்பேட்டை,<br>சென்னை-6 | 044-2435 1014<br>044-2435 1051 |
| 10. | தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் | எண்.417, பாந்தியன் சாலை,<br>2வது மாடி,<br>எழும்பூர்,<br>சென்னை-8. | 044-2819 1891 |
| 11. | தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துறை | கிண்டி,<br>சென்னை-32 | 044-2436 1108<br>044-2230 0420 |
| 12. | இயக்குநர்,<br>மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை (ESI),<br>சென்னை. | DMS வளாகம்<br>அண்ணா சாலை,<br>தேனாம்பேட்டை,<br>சென்னை-6 | 044-2432 7953<br>044-2432 7954 |
| 13. | தமிழ்நாடு பார்வையிழப்பு தடுப்புச் சங்கம் | எழும்பூர்,<br>சென்னை-8. | 044-2852 6873<br>044-2852 0799 |
| 14. | தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் | எண்.417, பாந்தியன் சாலை,<br>2வது மாடி,<br>எழும்பூர்,<br>சென்னை-8. | 044-2818 0261<br>044-2819 0469 |
| 15. | மருத்துவப்பணிகள் தேர்வு வாரியம் | DMS வளாகம்<br>அண்ணா சாலை,<br>தேனாம்பேட்டை,<br>சென்னை-6 | 044-2435 5757<br>044-2435 9393 |

## இணைய தளம்

www.tnhealth.org என்ற இணைய தளம் சுகாதாரத்துறையால் தொடங்கப்பட்டு தமிழக அரசின் மருத்துவ சேவைகள் மக்களைச் சென்றடையவும், சுகாதார செய்திகளை மக்களுக்கு அளிக்கவும் மற்றும் மக்களுடன் கலந்துரையாடவும் பயன்பாட்டில் உள்ளது.

மக்கள் மருத்துவம் சார்ந்த செய்திகளைப் பரிமாறிக் கொள்ள ‘தகவல் பலகை’ (Bulletin Board) என்ற வசதியும், பொதுமக்கள் அரசாங்க மருத்துவமனையில் உள்ள மருத்துவ வல்லுநர்களுடன் கலந்துரையாட ‘சுகாதார பரிமாற்றம்’ (Health Chat) என்ற வசதியும் மற்றும் மக்கள் தங்களுடைய கேள்விகளையும், ஆலோசனைகளையும், அனுப்ப ‘கருத்துகளை அறிய’ (Feed back) என்ற வசதியும் மேற்படி இணையதளத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இணையத் தளத்தில் துறையின் (Performance) செயல் திறன் குறித்த விபரங்கள், மருத்துவ தேர்வாணைக்குழு பற்றிய விவரங்கள் அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ கல்லூரிகள் பற்றிய விவரங்கள், ஸ்கேன் வசதி இருக்குமிடங்கள், இந்திய மருத்துவ சிகிச்சை முறை மற்றும் மனநலம் பற்றிய விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் - 2

## மருத்துவக் கல்வி இயக்ககம்

**முன்னுரை:** மருத்துவக் கல்வி இயக்ககமானது ஒரு தனி இயக்ககமாக 1966 ஜுலை முதல் மருத்துவ மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்திலிருந்து பிரிந்து பொது மக்கள் அனைவருக்கும் உயர் நிலை மருத்துவமனைகளில் உலக தரம் வாய்ந்த மருத்துவ சிகிச்சை அளிப்பதோடு மருத்துவ கல்லூரிகள் மற்றும் அம்மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த மருத்துவமனைகளை நிர்வகிப்பதுடன் படிப்பு,
பயிற்சி மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றை மேம்படுத்த முக்கிய கவனம் செலுத்துகிறது.

இம்மருத்துவ கல்வி இயக்குநரகத்தால் தமிழ்நாட்டிலுள்ள 24 மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைகளில் திறன் வாயந்த மனித வளம் மற்றும் உட்கட்டமைப்புடன் கூடிய உயர் தர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் சிறப்பு சிகிச்சைகளான இருதயவியல், நரம்பியல், சிறுநீரகவியல் மற்றும் புற்றுநோய் சிகிச்சை ஆகியவை சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டதத்திலுள்ள தமிழ்நாடு அரசு பன்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் விபத்து கால அவசர சிகிச்சை, தீக்காய மருத்துவ சிகிச்சை, புற்றுநோய் தடுப்பு சிகிச்சை, மூப்பியல் சிசிக்சை, நீரிழிவு நோய் சிகிச்சை, இருதய சிகிச்சை பக்கவாதம் மற்றும் மனநல சிகிச்சை போன்றவை இவ்வியக்ககத்தின் பிற முக்கிய சேவைகளாகும்.

தமிழ் நாட்டில் உள்ள அரசு மற்றும் சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் பல்வேறு மருத்துவ மற்றும் மருத்துவம் சார்ந்த படிப்புகளின் சேர்க்கையானது இவ்வியக்கத்தை சேர்ந்த தேர்வுக் குழு மூலம் பரிசீலனை செய்யப்பட்டு மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

இவ்வியக்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைகள் அனைத்தும் மருத்துவ தகவல் தொடர்பு மூலமாக மருத்துவமனை மேலாண்மை தகவல் தொடர்பு மையம் மூலம் இணைக்கப்பட்டு அன்றாட தகவல்களான புறநோயாளிகள் மற்றும் உள்நோயாளிகள் சிகிச்சைகள், ஆய்வக பணிகள், மருந்தக பணிகள், செவிலியர் பணிகள் மற்றும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவுகள் போன்ற அனைத்து பணிகளும் இணையதளம் மூலமாக நேரடியாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**1. இவ்வியக்கத்தின் குறிக்கோள் மற்றும் தொலை நோக்கு பார்வை:** தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மருத்துவமனைகளில் தரமான மேம்படுத்தப்பட்ட நவீன சிகிச்சை அளிப்பது மற்றும் புதுமையான முறையில் மருத்துவக் கல்வியை கற்பிப்பது இவ்வியக்கத்தின் தொலைநோக்கு பார்வையும் மற்றும் முக்கிய குறிக்கோள் ஆகும். தமிழ் நாட்டில் உள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அதனுடன் இணைந்த நிலையங்கள் மூலமாக பொது மக்களுக்கு உயர்ரக மருத்துவ சேவை வழங்குவதே இம்மாநிலத்தின் பிரத்யேக சேவையாகும்.

**தொலைநோக்கு:** பொது மக்களுக்கு தரமான மருத்துவ சேவை வழங்குதல் மற்றும் சிறப்பு மருத்துவர்களை எளிதாக அணுகுவதே இவ்வியக்ககக் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் முக்கிய தொலைநோக்கு பார்வையாகும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவ நிறுவனங்களில் நவீன மருத்துவத் துறையில் பல் ஒழுக்காற்று ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதன் மூலம் ‘‘பொது மக்களுக்கு புதுமையான மருத்துவ சிகிச்சை‘‘ வழங்குவது மற்றொரு அம்சம் ஆகும்.

**பணிகள்:** பொது மக்களுக்கு கீழ்க்கண்ட நவீன மருத்துவ சேவை வழங்குவதே இவ்வியக்ககத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.

i. தரம் வாய்ந்த மருத்துவ சிகிச்சை அளிப்பது

ii. நோய் தடுப்பு சிகிச்சை

iii. தொற்றா நோய் தடுப்பு

iv. எச்.ஐ.வி / எய்ட்ஸ் தடுப்பு

v. பச்சிளம் குழந்தை இறப்பு சதவிகித குறைப்பு

vi. பேறுகால தாய்மார்களின் இறப்பு விகிதம் குறைப்பு

vii. தாய் சேய் நலன் சிறப்பு சிகிச்சை

viii. போதை மீட்டெடுப்பு மையம்

ix. திறன் மையம்

x. தீப்புண் மற்றும் விபத்து கால சிகிச்சை

xi. தேசிய மூப்பியல் மையம்

xii. புற்றுநோய், நீரிழிவு, பக்கவாதம் மற்றும் இருதய தமனி நோய் சிகிச்சை

xiii. மருத்துவ கல்வியில் ஆராய்ச்சி மற்றும் அதி நவீன சிகிச்சை

xiv. உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை

xv. சென்னையில் உள்ள அரசு இராஜீவ் காந்தி மருத்துவமனையிலும் மற்றும் மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் திருநங்கைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு மருத்துவப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

**2. பரிவர்த்தனை செய்யப்பட்ட விவரங்கள்:** இம்மருத்துவ கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கி வரும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பொது மக்களுக்கு திறன் வாய்ந்த மனித வளம் மற்றும் உட்கட்டமைப்புடன் கூடிய உயர்தர மருத்துவ சேவைகள் அளிக்கப்பட்டு வருகிறது.

**இம்மருத்துவ கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கி வரும் மருத்துவ கல்லூரி மருத்துவமனை தொடர்பான விவரங்கள் பின்வருமாறு**

| | |
|---|---|
| அரசு மருத்துவக் கல்லூரிகள் | 24 |
| அரசு பல் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை | 1 |
| மருத்துவமனைகள் மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்கள் | 36 |
| பன் நோக்கு சிறப்பு மருத்துவமனைகள் | 1 |
| மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனைகள் | 4 |
| குழந்தைகள் மருத்துவமனை | 1 |
| கண் மருத்துவமனை | 1 |
| காசநோய் மருத்துவமனை | 5 |
| மனநல மருத்துவமனை | 1 |
| புனர் வாழ்வு மருந்துகள் | 1 |
| கிங் நிறுவனம் | 1 |
| மருந்தகங்கள் | 13 |
| **மொத்தம்** | 89 |

**மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளின் செயல்திறன் (2018-19 ஆம் ஆண்டில்)**

| | |
|---|---|
| புறநோயாளிகள் / நாள் ஒன்றுக்கு | 86199 |
| உள் நோயாளிகள் கணக்கெடுப்பு / நாள் ஒன்றுக்கு | 31670 |
| பிரசவங்கள் / மாதம் ஒன்றுக்கு | 15229 |
| பெரிய அறுவை சிகிச்சைகள் / மாதம் ஒன்றுக்கு | 28529 |
| சிறிய அறுவை சிகிச்சைகள் / மாதம் ஒன்றுக்கு | 60678 |
| டயாலிசிஸ் செய்யப்பட்டது / மாதம் ஒன்றுக்கு | 12839 |
| சி.டி. ஸ்கேன் / மாதம் ஒன்றுக்கு | 59603 |
| அல்ட்ரா சோனோகிராம் / மாதம் ஒன்றுக்கு | 81310 |
| எம்.ஆர்.ஐ ஸ்கேன் / மாதம் ஒன்றுக்கு | 8102 |

**தேர்வுக் குழு:** இவ்வியக்ககத்தை சார்ந்த தேர்வுக் குழுவில் ஒவ்வொரு வருடமும் அரசு மற்றும் சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவ பட்டப்படிப்பு, பல் மருத்துவ படிப்பு, மருத்துவ பட்ட மேற்படிப்பு, பட்டய மேற்படிப்பு, மருந்தாக்கியல் பட்ட மேற்படிப்பு, செவிலியர் பட்ட மேற்படிப்பு, ஆகிய பட்டப்படிப்புகளுக்கு மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

இம்மருத்துவ கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் கீழ் வரும் அரசு மருத்துவ கல்வி நிறுவனங்களில் பட்டம் மற்றும் பட்டைய படிப்பிற்கான மாணவச் சேர்க்கைக்கான இடங்கள் (2019-2020) பின்வருமாறு:

| வ.எண் | படிப்புகளின் பெயர்கள் | மொத்த இடங்கள் |
|---|---|---|
| 1 | மருத்துவ பட்டப்படிப்பு | 3350 |
| 2 | பல் மருத்துவ பட்டப்படிப்பு | 100 |
| 3 | செவிலியர் பட்டப்படிப்பு | 250 |
| 4 | போஸ்ட் பேசிக் செவிலியர் படிப்பு | 90 |
| 5 | கதிரியல் நோயறிதல் பட்டப்படிப்பு | 160 |
| 6 | இளங்கலை பிசியோதெரபி | 70 |
| 7 | காட்டியோ பல்மனரி பர்ப்யூசன் தொழில்நுட்ப பட்டப்படிப்பு | 40 |
| 8 | மருந்தாக்கியல் பட்டப்படிப்பு (108+10) (Lateral Entry) | 118 |
| 9 | செவித்திறன் மற்றும் பேச்சு மொழி நோய்க் குறியியல் பட்டப்படிப்பு | 25 |
| 10 | கண் பரிசோதனை பட்டப்படிப்பு | 60 |
| 11 | மருத்துவம் சார்ந்த பட்டப்படிப்பு | 7,876 |
| 12 | கதிரியக்க கதிர்வீச்சு பட்டப்படிப்பு | 20 |
| 13 | இருதய பட்டப்படிப்பு | 49 |
| 14 | தீவிர பாதுகாப்பு பட்டப்படிப்பு | 80 |
| 15 | டயாலிஸ் பட்டப்படிப்பு | 105 |
| 16 | அறுவை அரங்கம் மற்றும் அரங்கவியல் பட்டப்படிப்பு | 170 |
| 17 | மருத்துவ உதவியாளர் பட்டப்படிப்பு | 120 |
| 18 | சுவாசவியல் பட்டப்படிப்பு | 40 |
| 19 | செவிலியர் பட்டயப்படிப்பு | 2,000 |
| 20 | மருந்தாக்கியல் பட்டயப்படிப்பு | 240 |
| 21 | விபத்து மற்றும் அவசர சிகிச்சை பட்டப்படிப்பு | 130 |
| 22 | ஆய்வக தொழில்நுட்ப பட்டப்படிப்பு | 120 |
| 23 | தொழில் முறை பட்டப்படிப்பு | 10 |

அரசு மருத்துவ நிலையங்கள் தவிர, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட தனியார் சுயநிதி மருத்துவக் கல்லூரிகள், அரசுக்கு ஒப்புவிப்பு செய்து அரசால் 2019-2020 கல்வியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களின் எண்ணிக்கை விவரம் கீழ்வருமாறு:

| வ.எண் | படிப்புகளின் பெயர்கள் | கல்லூரிகளின் எண்ணிக்கை | இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | எம்.பி.பி.எஸ் | 14 | 1850 |
| 2 | பி.டி.எஸ் | 19 | 1842 |
| 3 | பி.எஸ்.சி (நர்ஸிங்) | 163 | 5921 |
| 4 | பி.பார்ம் | 51 | 2242 |
| 5 | பட்டய படிப்பிலிருந்து மருந்தாக்கியல் பட்ட படிப்பு | 33 | 180 |
| 6 | இயன்முறை சிகிச்சை பட்டப்படிப்பு | 30 | 1625 |
| 7 | தொழில் வழி சிகிச்சை பட்டப்படிப்பு | 4 | 225 |
| 8 | போஸ்ட் பேசிக் செவிலியர் பட்டப்படிப்பு | 49 | 1050 |

தமிழ்நாட்டில் அரசு மருத்துவக் கல்வி நிலையங்களில் பட்ட மேற்படிப்பு மற்றும் சிறப்பு பிரிவுகள் மற்றும் அவற்றிற்கான இடங்களின் விவரங்கள் (2019-2020) கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வ.எண் | படிப்புகள் | சிறப்பு பிரிவுகளின் எண்ணிக்கை | மொத்த சேர்க்கை இடங்கள் |
|---|---|---|---|
| 1 | உயர் சிறப்பு மேற்படிப்புகள் | 19 | 334 |
| 2 | பட்டய மேற்படிப்பு | 1 | 3 |
| 3 | பல் மருத்துவ பட்ட மேற்படிப்பு | 8 | 42 |
| 4 | பட்ட மேற்படிப்பு (மேற் சிறப்பு) | 24 | 1758 |
| 5 | பட்ட மேற்படிப்பு (Dip N.B) | 1 | 4 |
| 6 | மருந்தாக்கியல் பட்ட மேற்படிப்பு | 4 | 58 |
| 7 | செவிலியர் பட்ட மேற்படிப்பு | 5 | 65 |
| 8 | எம். பில் மருத்துவ சமூகப் பணி | 1 | 15 |
| 9 | எம்.எஸ்.ஸி அணுத்திறமம் நோய் நுண்ணியியல் | 1 | 21 |
| 10 | எம். பில் மனநல மருத்துவம் | 1 | 8 |

**3. குடிமகன் / பயனாளர் பற்றிய குறிப்பு:** மேம்படுத்தப்பட்ட மருத்துவ நிலையங்கள் மூலமாக தரமான மருத்துவ சிகிச்சையை அணுகுவதிலும் பெறுவதிலும் நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் சமமாக கருதப்படுகிறார்.

**4. ஒவ்வொரு குடிமகனும் தராமான மருத்துவ சிகிச்சை பெற வேண்டிய சேவைகள்:** இவ்வியக்ககமானது மேம்படுத்தப்பட்ட மருத்துவ சேவைகளை பல்வேறு திட்டங்கள் மூலமாக விபத்து அவசர கால சிகிச்சை திட்டம், தீப்புண் சிகிச்சை பிரிவு, அம்மா முழு உடல் பரிசோதனை திட்டம், புற்று நோய் தடுப்பு, நீரிழிவு நோய், இருதய தமனி, பக்கவாதம் நோய்க்கான சிகிச்சை, பல்வகை பிரிவு ஆராய்ச்சி சம்பந்தமான நடவடிக்கைகள்.

மேற்கண்ட மருத்துவ சேவைகளை தவிர கீழ்க்கண்ட கூடுதல் சிறப்பு மருத்துவம் மற்றும் பல்நோக்கு சிறப்பு மருத்துவ சேவைகளும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனைகளிலும் வழங்கப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| 1. நோய் கண்டறிய அதி நவீன சாதனங்களுடன் கூடிய ஆய்வகம் | 9. சுவாச கருவி வசதி |
| 2. நெஞ்சு ஊடுகதிர் படம் | 10. டயலசிஸ் இயந்திரம் |
| 3. அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் | 11. ஃபைபர் ஆப்டிக் ப்ரோன்கோஸ்கோப் |
| 4. சிடி ஸ்கேன் | 12 . சிஸ்டோஸ்கோபி |
| 5. எம்.ஆர்.ஐ. ஸ்கேன் | 13. வீடியோ த்ரோஸ்கோஸ்கோப் |
| 6. மாமோகிராம் | 14. வீடியோ கொலோனாஸ்கோப் |
| 7. பெட் சிடி ஸ்கேன் | 15. லித்தோடிரிப்ஸி |
| 8. சி.ஆர்ம் வசதி | 16. லினியர் அஸ்லிட்டர் மற்றும் கோபால்ட் தெரபி |

**அரசு மருத்துவமனைகளில் தற்போது செயல்பட்டு வரும் சேவைகள் பின்வருமாறு**

i. புறநோயாளி பிரிவு மற்றும் உள்நோயாளிகள் பிரிவு

ii. பச்சிளம் சிசு மற்றும் குழந்தை நலத்திற்கான பிரத்யேக சிகிச்சை, குழந்தைகள் நலமருத்துவமனையில் வழங்கப்பட்டு வருகிறது.

iii. பச்சிளம் குழந்தைகள் மற்றும் குழந்தைகளின் சேவைகள் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் வழங்கப்படுகிறது.

iv. தரமான மகப்பேறு சிகிச்சை, சீமாங் நிலையங்கள் மூலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் வழங்கப்படுகிறது.

v. மகப்பேறு மற்றும் அவசரகால குழந்தைகளின் சிகிச்சை – அரசு தாய்சேய் நலம் மற்றும் மகளிர் நோயியல் மருத்துவமனையில் வழங்கப்படுகிறது.

vi. உயர்ரக சிகிச்சையான இருதயவியல், சிறுநீரக அறுவை சிகிச்சை இயல், சிறுநீரக மருத்துவ இயல், நரம்பியல் மருத்துவ இயல், எலும்பு முறிவு சிகிச்சை, விளையாட்டு மருத்துவப் பிரிவு, புற்றுநோய் மருத்துவம், புற்றுநோய் அறுவை சிகிச்சை மற்றும் கதிர்வீச்சு மருத்துவம்.

vii. பிரத்யேக பல்நிலை சிகிச்சையின் அனைத்து பிரிவுகளும் தமிழ்நாடு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மூலமாக.

viii. சிறுநீரகம் மற்றும் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைப் பிரிவு.

ix. காத்லேப் மற்றும் இருதய மாற்று அறுவை சிகிச்சை.

**5. பொது மக்கள் குறைதீர்க்கும் மனு தொடர்பான விவரங்கள் மற்றும் அக்குறைகளை களையும் முறை தொடர்பாக.**

i. ஒவ்வொரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் புகார் / ஆலோசனைப் பெட்டி வைக்கப்பட்டு, பொதுமக்கள் மற்றும் நோயாளிகளின் குறைகள் பெறப்படுகிறது.

ii. 104/108 தொலைத் தொடர்பு மூலம் பெறப்படும் புகார்களுக்கு உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

iii. முதலமைச்சரின் தனிப்பிரிவு மற்றும் அம்மா தொலை தொடர்பு மூலம் பெறப்படும் மனுக்கள் / புகார்களுக்கு உடனடியாக தகுந்த நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது.

iv. விரிவான விசாரணை மற்றும் விசாரணைக்கு உத்தரவாதம் அளிக்கும் எந்தவொரு சம்பவமும் சம்பந்தப்பட்ட துறையின் நிபுணருடன் விசாரணை அதிகாரிகளை நியமிப்பதன் மூலம் நடத்தப்படுகிறது. தேவைப்பட்டால் நடைமுறையில் உள்ள விதிகளின்படி தவறு செய்யும் அதிகாரிகளின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மேலும், பொதுவான விசாரணைகள் மற்றும் அவசர கால மருத்துவ சிகிச்சை தொடர்பான விவரங்கள் பெற கீழ்க்கண்ட தொலைபேசி எண்கள் மற்றும் மின் அஞ்சல் முகவரி அளிக்கப்பட்டுள்ளது.**

| வ. எண் | மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவமனைகள் பெயர்கள் | பதவியின் பெயர் | தொலைபேசி எண் | மின் அஞ்சல் |
|---|---|---|---|---|
| 1 | மருத்துவக் கல்வி இயக்ககம் | மருத்துவக் கல்வி இயக்குநர் | 044-28366890-234<br>044-28364501 | dme@tn.gov.in |
| 2 | சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை | முதல்வர் | 044-25305301 (C)<br>04425305111 (H)<br>044-25305112 (H) | deanmmc@tn.gov.in |
| 3 | ஸ்டான்லி மருத்துவக் | முதல்வர் | 044-25280900 | deansmc@tn.gov.in |

| | | | | |
|---|---|---|---|---|
| | கல்லூரி, சென்னை | | (D)<br>044-25281347-53 | |
| 4 | கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை | முதல்வர் | 044-28364949 (D)<br>044-28364951,52 (B) | dean@gkmc.in |
| 5 | செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கல்பட்டு | முதல்வர் | 044-27431225 (C)<br>044-27431287 (H)<br>044-27431221(B-H) | chemdean006@gmail.com |
| 6 | வேலூர்மருத்துவக் கல்லூரி, வேலூர் | முதல்வர் | 0416-2260900 (D) | dean.tnvlr@nic.in<br>dean_vellore@yahoo.com |
| 7 | தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர் | முதல்வர் | 04362-240854 (C)<br>04362-240851 (H) | deantmctnj@gmail.com |
| 8 | கி.ஆ.பெ. விஸ்வநாதம்அரசு மருத்துவக் கல்லூரி, திருச்சி | முதல்வர் | 0431-2401011/13 (C)<br>0431-2770114 (H) | deantrichy@gmail.com<br>kapvgmctry@yahoo.in |
| 9 | மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை | முதல்வர் | 0452-2534242 (H)<br>0452-2533230,31 (C) | deanmdumc@gmail.com<br>maduraimedicalcollege@ ymail.com |
| 10 | கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர் | முதல்வர் | 0422-2574375 (C)<br>0422-2300345 (H) | deancbe@tn.gov.in |
| 11 | அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனை, சேலம் | முதல்வர் | 0427-2385513 (C)<br>0427-2210965 (H) | deangmkmcslm@gmail.com |
| 12 | திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி , திருநெல்வேலி | முதல்வர் | 0462-2572944 (C)<br>0462-2579785 (H) | dean@tvmc.ac.in |
| 13 | தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி, தூத்துக்குடி | முதல்வர் | 0461-2392698 (B-C)<br>0461-2321051 (B-H) | deantut@tn.gov.in |
| 14 | கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி, கன்னியாகுமரி | முதல்வர் | 04652-223201 (B)<br>04652-223202 (B) | deankgmch@yahoo.com |
| 15 | தேனி மருத்துவக் கல்லூரி, தேனி | முதல்வர் | 04546-263666 (C)<br>04546-263677 (H) | deangtmc@gmail.com |
| 16 | விழுப்புரம் மருத்துவக் | முதல்வர் | 04146-232400 | vpmmc_tn@yahoo.com |

| | | | | |
|---|---|---|---|---|
| | கல்லூரி, விழுப்புரம் | | (H)<br>04146-232300<br>(C) | |
| 17 | திருவாரூர் மருத்துவக் கல்லூரி, திருவாரூர் | முதல்வர் | 04366-220040<br>(C)<br>04366-222486<br>(H) | deantvr@tn.gov.in |
| 18 | தர்மபுரி மருத்துவக் கல்லூரி, தர்மபுரி | முதல்வர் | 04342-233033 (B) | gdmchdpi@gmail.com<br>gdmchdpi793@gmail.com |
| 19 | சிவகங்கை மருத்துவக் கல்லூரி, சிவகங்கை | முதல்வர் | 04575-245560 (B) | abi_nofear2003@yahoo.com<br>deangsmch@gmail.com |
| 20 | திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி, திருவண்ணாமலை | முதல்வர் | 04175-233315<br>(C)<br>04175-233314<br>(H) | deantvmmedicalcollege@gmail.com ghthiruvannamalai@gmail.com |
| 21 | அரசு ஓமந்தூரார் மருத்துவக் கல்லூரி , சென்னை | முதல்வர் | 044 25333317/19 | gmcomandurar@gmail.com<br>tngmssh@gmail.com |
| 22 | கரூர் அரசு மருத்துவக் கல்லூரி, கரூர் | முதல்வர் | 04324-274280 | deangmchkarur@gmail.com |
| 23 | புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி, புதுக்கோட்டை | முதல்வர் | 04322-221333 | deanpdktmc@gmail.com |
| 24 | அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் தொழிலாளர் ஈட்டுறுதி கழக மருத்துவமனை, கோயம்புத்தூர். | முதல்வர் | 0422-2574300,01,02 (D) | deangmcesiccbe@gmail.com |
| 25 | IRT பெருந்துறை மருத்துவக் கல்லூரி, ஈரோடு | முதல்வர் | 04294-220910-14 | irtpmcdean@gmail.com |
| 26 | தமிழ்நாடு அரசு பல் மருத்துவமனை சென்னை | முதல்வர் | 8825785573<br>25340681 | tngdch11@gmail.com |

**6. குடிமகன் / பயனாளர் எதிர்பார்ப்பு:** இந்நாட்டில் வசித்துவரும் ஒவ்வொரு குடிமகன்களுக்கும் தரமான சிகிச்சை அனைத்து வசதிகளுடன், அவர்கள் இருப்பிடத்திற்கு மிக அருகாமையில் அவர்கள் தேவைக்கு ஏற்படும், திருப்தி அடையும் வகையிலும் இருப்பது அவர்களது உரிமையாகும்.

தமிழ்நாடு அரசு 24 x 7 மணி நேரமும் உயர்ரக மருத்துவ சேவை மற்றும் அவசர கால சிகிச்சையினை பொது மக்களுக்கு உடனுக்குடன் அளிப்பதில் ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. மேலும் மக்களுக்கு இதர சேவைகளான ஆய்வக சேவைகள் மற்றும் அவசர ஊர்தி சேவைகள் மற்றும் CT Scan / MRI Scan / PET Scan / Flexible Video Bronchoscope போன்ற நவீன கருவிகளை கொண்டு உயர்ரக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அனைத்து

மருத்துவமனைகளிலும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், நோயாளிகளின் உறவினர்கள் தங்குவதற்கு இடவசதி, மருத்துவமனையில் சுகாதாரம் மற்றும் தூய்மையான இடவசதி, குழந்தை திருட்டை தடுப்பதற்கும் RFID பேட்ஜ் மற்றும் குற்றங்கள் நடைப்பெறாமல் தடுக்க 24 மணிநேர கண்காணிப்பு கேமிராவுடன் செயல்பட்டு வருகிறது.

**7. கூடுதல் வசதிகள்:** எந்தவொரு மருத்துவ முறைகேடு மற்றும் பொதுமக்களுக்கு மருத்துவ சேவையை வழங்குவதில் தோல்வி ஏற்பட்டால், அரசு / நீதிமன்றத்தின் உத்தரவுகளின்படி தனிநபருக்கு உரிய இழப்பீடு சுழல் நிதியிலிருந்து வழங்கப்படும்.

**8. அம்மா முழு உடல் பரிசோதனை மற்றும் அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனை திட்டம்:** சென்னை இராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில், அம்மா முழு உடல் பரிசோதனை மற்றும் அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனை திட்டம் 01.03.2016 முதல் துவங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், மேற்கொள்ளப்படும் பரிசோதனை மற்றும் அவற்றிற்கான கட்டண தொகுப்பு விவரம் பின்வருமாறு:

| தொகுப்பு – **1 (ரூ.1,000/-)** | தொகுப்பு – **2 (ரூ.2,000/-)** | தொகுப்பு – **3 (ரூ.3,000/-)** |
|---|---|---|
| முழு, இரத்த பரிசோதனை, இ.எஸ்.ஆர், சிறுநீரக பரிசோதனை, இரத்த சர்க்கரை அளவு பரிசோதனை, சிறுநீரக செயல்பாடு அறியும் பரிசோதனை, இரத்த கொழுப்பு பரிசோதனை, கல்லீரல் செயல்பாடு பரிசோதனை, ஹெப்படைடிஸ் பி இரத்த பரிசோதனை, இரத்த வகை மற்றும் ஆர்.எச். பரிசோதனை, நெஞ்சக சுருள் படம் (இ.சிஜி), நெஞ்சு ஊடுகதிர் படம், மிகையொலி பரிசோதனை, கருப்பை முகைப் பரிசோதனை | தொகுப்பு ஒன்றுடன் கூடுதலாக இதய மீள் ஒலி பரிசோதனை, தைராய்டு ரத்த பரிசோதனை, மற்றும் சர்க்கரை நோய் சிறப்பு பரிசோதனை, பிஎஸ்ஏ (பிராஸ்டேட் ஆண்டிஜன் செய்யப்படும்) | தொகுப்பு இரண்டுடன் கூடுதலாக கருப்பை முகைப் பரிசோதனை, மார்பக எண்ணியல் ஊடு கதிர்ப்பட பரிசோதனை, எலும்பு திறனாய்வு பரிசோதனை, இரத்த வைட்டமின் டி, கால்சியம், பாஸ்பரஸ் மற்றும் பாரா தைராய்டு ஹார்மோன் பரிசோதனை ஆகியவை செய்யப்படும். |

அம்மா முழு உடல் பரிசோதனை திட்டம் மற்றும் அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனை திட்டம் பொதுமக்களிடையே மிகந்த வரவேற்பை பெற்றதால், தென்மாவட்ட மக்களுக்கும், இந்த பரிசோதனை திட்டத்தை விரிவுபடுத்தும் நோக்கத்தில், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மூன்று அரசு மருத்துவக் கல்லூரி மத்துவமனைகளில் தலா 10 கோடி ரூபாய் செலவில் (மொத்தம் 30 கோடி ரூபாய்) அரசால் அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில் 08.06.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

அம்மா முழு உடல் பரிசோதனை தொகுப்பு 3ல் உள்ள பரிசோதனைகளுடன், பார்வை பரிசோதனை, கண் நீர் அழுத்த நோய் பரிசோதனை, பார்வை குறைபாடு பரிசோதனை ,விழித்திரை பரிதோனை, வண்ண பார்வை பரிசோதனை, டிரெட் மில் நுரையீரல் பரிசோதனை ஆகியவற்றை உள்ளடக்கிய அம்மா முழு உடல் பரிசோதனை தொகுப்பு 4 ( ரூ.4000)-னை சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில் துவக்க ஆணையிடப்பட்டுள்ளது.

## அத்தியாயம் - 3

## மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககமானது மருத்துவ துறையின் அடிப்படை அலகாகும். பொது மக்களின் மருத்துவ சேவை தேவைகளை கருத்தில் கொண்டு அதனை நிறைவு செய்வதற்கு ஏதுவாக இத்துறையிலிருந்து பிற இயக்குநரகங்கள் உருவாக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ள சுகாதார அமைப்பின் இரண்டாம் நிலையில் செயல்படும் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் சுமார் 95 ஆண்டுகளுக்கு மேலான வரலாறு உடைய அடிப்படை அலகாக அமைந்துள்ளது. மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநரகத்தின் கீழ் செயல்படும் இரண்டாம் நிலை மருத்துவமனைகள் மக்களின் பல்வேறு விதமான சிறப்பு மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்ய ஏதுவாக தேவையான மாற்றங்களுடன் தரம் உயர்த்தப்பட்டு மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்ட, வட்டம் சாரா மருத்துவமனைகள், மருந்தகங்கள், மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனைகள், காசநோய் மருத்துவமனை / சானடோரியம், தொழுநோய் மருத்துவமனை மற்றும் 1 மறுவாழ்வு மற்றும் புனரமைப்பு மனநலம் காப்பகம் ஆகியவைகள் மூலம் பொது மக்களுக்குத் தேவையான மருத்துவ சேவைகளை வழங்கி வருகிறது. மேலும் மகப்பேறு மற்றும் குழந்தை நல்வாழ்வினை மேம்படுத்துவதை முக்கியத்துவமாக கொண்டு 104 அரசு மருத்துவமனைகளில் (அனைத்து மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கு உட்பட ) ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்பு (CEmONC) மையங்கள், 114 அரசு மருத்துவமனைகளில் உள்ள பச்சிளம் குழந்தை பராமரிப்பு மையங்கள் (NBSU) மற்றும் அரசு மருத்துவமனைகளில் உள்ள 42 நோயுற்ற பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் (SNCU) ஆகியவை இவ்வியக்ககத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது.

இதனைத் தவிர , மருத்துவம், அறுவை சிகிச்சை, மகப்பேறு மற்றும் மகளிர் நலம், கண், காது, மூக்கு மற்றும் தொண்டை, பால்வினை நோயியல், எலும்பு முறிவு, மயக்கவியல், குழந்தை நலம், பல் மருத்துவம், மனநல மருத்துவம், அவசரகால ஊர்தி சேவை, ஆய்வுக்கூட சேவை, தொழு நோய், காசநோய், நீரிழிவு நோய், இதய நோய் மற்றும் தொற்றா நோய் போன்ற சிறப்பு மருத்துவ சிகிச்சைகள் உயர்தொழில் நுட்ப கருவிகள் கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

### 1. இவ்வியக்குநரகத்தின் தொலைநோக்கு பார்வை மற்றும் குறிக்கோள்

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வத்திற்கான அடிப்படையாகும்.** இந்த வாசகத்தின்படி சிறப்பான மற்றும் தரமான மருத்துவ சேவையை வழங்குவதே இவ்வியக்குநரகத்தின் தொலைநோக்கு பார்வை மற்றும் குறிக்கோளுக்கான அடிப்படையாகும்.

**தொலைநோக்கு பார்வை:** மருத்துவமனைகளின் தரத்தினை ஒரு அங்கீகாரம் பெற்ற அமைப்பின் ஒப்புதலை பெறும் அளவிற்கு உயர்த்துதல் மூலம் (தேசிய தர நிர்ணயச் அமைப்பு) இம்மாநிலத்தில்

இவ்வியக்குநரகத்தின் கீழ் செயல்பட்டு வரும் இரண்டாம் நிலை அரசு மருத்துவமனைகளை குடிமக்கள் மனதிற்குகந்த மருத்துவ சேவையகமாக தெரிவு செய்யக் கூடியதாக திகழ்வது.

**குறிக்கோள்:** தமிழக மக்களின் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் மற்றும் ஆயுட்காலம் அதிகரித்தல் ஆகியவற்றால் அவர்கள் மிக உயர்ந்த உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை அடைந்து, 2023 ஆம் ஆண்டில் மாநிலத்தின் வளர்ச்சிக்கு சிறந்த பங்களிக்க செய்தல்.

**இக்குறிக்கோளை அடைவதற்கு பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன:**

i. தரமான மருத்துவ சேவையை வழங்குதல்.

ii. நோய்தடுப்பு மற்றும் நோய் நீக்கும் சிகிச்சை வழங்குதல்

iii. கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பிற்கு முந்தைய கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் (பாலின தேர்வை தடை செய்தல்) சட்டம், 1994 ஐ நடைமுறைப்படுத்துதல் மூலம் குழந்தை பாலின விகிதாசாரத்தை மேம்படுத்துதல்.

iv. டெங்கு மற்றும் பன்றிக்காய்ச்சல் போன்ற தொற்று நோய்களை கட்டுப்படுத்துதல்.

v. தொற்றா நோய்களை கட்டுப்படுத்துதல்.

vi. எய்ட்ஸ் மற்றும் எச்ஐவி கட்டுப்படுத்துதல்

vii. பச்சிளங் குழந்தைகள் இறப்பு விகிதத்தை குறைத்தல்

viii. கருவுற்ற தாய்மார்களின் இறப்பு விகிதத்தை குறைத்தல்

ix. மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலனை மேம்படுத்துதல்

x. மருத்துவ முகாமைத்துவ சட்டத்தை அமல்படுத்துவதன் மூலம் தனியார் மருத்துவமனைகள், மருந்தகங்கள் மற்றும் சுகாதாரம் சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களின் செயல்பாடுகளை கண்காணித்தல்

xi. மாநிலத்தில் சுகாதாரம் தொடர்பான ஒழுங்கு முறை ஆணைகளை முறையாக அமல்படுத்துதல். (PCPNDT, மனித உறுப்பு மாற்று சட்டம் (HOTA), Clinical Establishment Act)

xii. மாவட்ட மனநல திட்டத்தின் மூலம் மக்களின் மனநலனை மேம்படுத்துல்

xiii. இளம் பருவத்தினரின் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல்.

xiv. இந்திய மருத்துவ துறை இயக்குநரகத்துடன் ஒருங்கிணைந்து மாவட்ட மற்றும் பிற அரசு மருத்துவமனைகளில் ஆயுஷ் திட்டத்தினை செயல்படுத்துதல்.

xv. போதை மறுவாழ்வு மையம்

xvi. போலி மருத்துவர்களை ஒழித்தல்

**2. இவ்வியக்குநரகத்தின் கீழ் இயங்கி வரும் மருத்துவ நிலையங்கள்:** இவ்வியக்குநரக கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் இரண்டாம் நிலை மருத்துவமனைகள் பொது மக்களுக்கு இரண்டாம் நிலை சிகிச்சைகளை வழங்குவதற்கான பொறுப்புடன் பின்வரும் மருத்துவமனைகளுடன் செயல்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| மாவட்ட தலைமை மருத்துவமனைகள் | 29 |
| வட்ட மருத்துவமனைகள் | 206 |
| வட்டம் சாரா மருத்துவமனைகள் | 68 * |
| மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனைகள் | 7 |
| காசநோய் மருத்துவமனைகள் | 2 |
| தொழுநோய் மருத்துவமனைகள் | 7 |
| மறுவாழ்வு மற்றும் புனரமைப்பு மனநலம் காப்பகம் | 1 |
| மருந்தகங்கள் | 11 |
| மொத்தம் | 331 |

* நீலகிரி மாவட்டம் எமரால்டில் புதிதாக 1 வட்டம் சாரா மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது.

**மேற்படி மருத்துவமனைகளின் செயல்பாடுகள்**

| | |
|---|---|
| வெளிநோயாளிகள் நாளொன்றுக்கு | 2.34 இலட்சம் |
| உள் நோயாளிகள் நாளொன்றுக்கு | 22,500 |
| பிரசவம் மாதமொன்றுக்கு | 15900 |
| அறுவை சிகிச்சை பிரசவம் மாதமொன்றுக்கு | 8600 |
| பெரிய வகை அறுவை சிகிச்சை மாதமொன்றுக்கு | 50000 |
| சிறிய வகை அறுவை சிகிச்சை மாதமொன்றுக்கு | 1.2 இலட்சம் |
| இரத்த சுத்தீகரிப்பு மாதமொன்றுக்கு | 4800 |
| சிடி ஸ்கேன் மாதமொன்றுக்கு | 14500 |
| இரத்த சேகரிப்பு மாதமொன்றுக்கு | 9300 |
| இரத்த மாற்றம் மாதமொன்றுக்கு | 8100 |

மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் வட்ட மருத்துவமனைகளில் உள்ள சீமாங் பிரிவில் 24x7 மகப்பேறு மருத்துவர், குழந்தை மருத்துவர் மற்றும் மயக்க மருத்துவர் கொண்ட மருத்துவ குழுவின் மூலம் மகப்பேறு சிகிச்சை வழங்கப்படுகிறது. உயர் ஆபத்தில் உள்ள தாய்மார்கள் கண்டறிதல் மற்றும் அவர்களை உள்நோயாளிகளாக அனுமதித்தல் அவசர மற்றும் தேர்வு முறையில் அறுவை சிகிச்சை பிரசவங்கள் ஆகியவை சிறப்பாக நடைபெறுகிறது.

இளம் சிசு பராமரித்தல், நோயுற்ற பச்சிளங் குழந்தைகளுக்கான சிகிச்சை, பச்சிளங் குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை ஆகியவை பச்சிளங் குழந்தை பராமரிப்பு பிரிவு மற்றும் இளம் சிசு பராமரிப்பு பிரிவுகளில் குழந்தை நல மருத்துவர்களால் வழங்கப்படுகிறது.

மேல் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் மூன்றாம் நிலை சிகிச்சை வழங்கக் கூடிய மருத்துவமனைகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

**3. குடிமக்கள் அல்லது பயனாளிகளின் விவரம்:** தமிழ்நாட்டின் அனைத்து குடிமக்களுமே பயனாளிகள் ஆவார். தமிழகத்தை தவிரவும் நாட்டின் பிற மாநிலங்களில் வசிக்கும் மற்றும் பிற நாட்டில் இருந்து வரும் நோயாளிகளுக்கும் இவ்வியக்குநரக கட்டுப்பாட்டில் உள்ள இரண்டாம் நிலை மருத்துவ நிலையங்களில் உரிய மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது. எனவே, அனைத்து பொது மக்களும் பயனாளிகளே.

4. **வழங்கப்படும் சேவைகள் மற்றும் அதன் தரம்:** மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரக இரண்டாம் நிலை மருத்துவ சிகிச்சையுடன் திருத்திய காசநோய் திட்டம், மாவட்ட மனநல திட்டம், விபத்து மற்றும் அவசர சேவை, தலைக்காய சிகிச்சை, தொழில்சார் சமூக சுற்றுச்சூழல் சுகாதார பிரிவு ஆகியவற்றின் மூலம் பல்வேறு சுகாதார சேவைகளை செய்து வருகிறது. மேலும், மாநிலத்தில் சுகாதாரம் தொடர்பான ஒழுங்கு முறை ஆணைகள் முறையே கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பிற்கு முந்தைய கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் (பாலின தேர்வை தடை செய்தல்) சட்டம், 1994, மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சட்டம் 1994, தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் முறைப்படுத்தும் சட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தி வருகிறது.

**அரசு தலைமை மருத்துவமனைகளில் வழங்கப்படும் மருத்துவ சிகிச்சைகள்**

- பொது மருத்துவம் மற்றும் பொது அறுவை சிகிச்சையில் உள் மற்றும் வெளி நோயாளிகளுக்கான சிகிச்சை
- ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்பு (CEmONC) சிகிச்சை
- குழந்தைகளுக்கான சிகிச்சை
- தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்கான சேவை.

**சிறப்பு சேவைகள்**

❖ காது மூக்கு தொண்டை சிகிச்சை

❖ கண் சிகிச்சை

❖ எலும்பு சிகிச்சை

❖ குழந்தைகளுக்கான சிகிச்சை

❖ பல் சிகிச்சை

- ❖ தோல் சிகிச்சை
- ❖ மனநல திட்டம்
- ❖ ஆர்என்டிசிபி
- ❖ ஐசிடிசி
- ❖ தொற்றாநோய் சிகிச்சை
- ❖ தொழுநோய் சிகிச்சை
- ❖ வலி மற்றும் நோய் தடுப்பு பாதுகாப்பு சிகிச்சை
- ❖ பகல் நேர கீமோதெரபி
- ❖ விபத்து மற்றும் அவசர சிகிச்சை
- ❖ தலைக்காய சிகிச்சை (சில மருத்துவமனைகளில் மட்டும்)

**வட்ட மருத்துவமனைகள்**

- ❖ பொது மருத்துவம் மற்றும் பொது அறுவை சிகிச்சையில் உள்நோயாளிகள் மற்றும் வெளிநோயாளிகளுக்கான சிகிச்சை
- ❖ மகப்பேறுக்கான சிகிச்சை
- ❖ குழந்தைகளுக்கான சிகிச்சை
- ❖ பல் சிகிச்சை
- ❖ தொற்றா நோய்களுக்கான சிகிச்சை
- ❖ எலும்பு முறிவுக்கான சிகிச்சை சில மருத்துவமனைகளில் மட்டும்
- ❖ காது மூக்கு தொண்டைக்கான சிகிச்சை சில மருத்துவமனைகளில் மட்டும்
- ❖ விபத்து மற்றும் அவசர சிகிச்சை /தலைக்காய சிகிச்சை சில மருத்துவமனைகளில் மட்டும்

**வட்டம் சாரா மருத்துவமனைகள்**

- ❖ பொது மருத்துவம் மற்றும் பொது அறுவை சிகிச்சையில் உள் மற்றும் வெளி நோயாளிகளுக்கான சிகிச்சை.
- ❖ மகப்பேறுக்கான சிகிச்சை
- ❖ குழந்தைகளுக்கான சிகிச்சை
- ❖ அவசர கால சிகிச்சை

**சிகிச்சை அளிக்கும் நேரம்**

- ➢ அனைத்து அவசர சிகிச்சைகளும் 24x7
- ➢ வெளி நோயாளிகளுக்கான சிகிச்சை

காலை– 7.30 முற்பகல் முதல் 12.00 நண்பகல் அனைத்து நாட்களும்

மாலை– 3.00 பிற்பகல் முதல் 5.00 பிற்பகல் (அரசு விடுமுறை மற்றும் ஞாயிற்று கிழமை தவிர)

- பரிந்துரைக்கப்பட்ட சிகிச்சைகள் 24x7
- உள் நோயாளிகள் சிகிச்சை 24x7
- பிரசவ சிகிச்சை24x7
- மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் ஆய்வக வசதி 24x7

  வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளில் –வெளிநோயாளிகள் சிகிச்சை நேரங்களில் மட்டும்.

- நோய் கண்டறிதலுக்கான ஆய்வுகள் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் 24x7

  வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளில் – வெளிநோயாளிகள் சிகிச்சை நேரங்களில் மட்டும்.

**5. குறைகள் நிவர்த்தி செய்ய வழிமுறைகள் குறித்த விவரங்கள்**

- ஒவ்வொரு மருத்துவமனைகளிலும் குடிமக்களிடமிருந்து மற்றும் நோயாளிகளிடம் இருந்து புகார்கள் பெறுவதற்கு புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. நோயாளிகளின் திருப்தி குறித்த கணக்கெடுப்பும் தேசிய தர நிர்ணய திட்டத்தின் படி மேற்கொள்ளப்படுகிறது.
- 104/108 தொலைபேசி அழைப்புகள் மூலம் பெறப்படும் புகார்களுக்கு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.
- முதலமைச்சரின் தனிப்பிரிவு மற்றும் அம்மா அழைப்பு மையம் மூலமும் இவ்வியக்குநரகத்திலும், இவ்வியக்குநரக கட்டுப்பாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளிலும் புகார்கள் பெறப்பட்டு குறைகள் நிவர்த்தி செய்யப்படுகிறது.
- மருத்துவ சிகிச்சையில் தவறு ஏற்பட்டதாகவோ மகப்பேறு இறப்பு போன்ற புகார்கள் பெறப்பட்டால் இதற்காக இயக்குநரால் உரிய விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டு அதன் பேரில் தவறு கண்டறியப்பட்டால் நடைமுறையில் உள்ள அரசாணைகளின் படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**6. குடிமக்கள் அல்லது பயனாளிகளின் எதிர்பார்ப்பு:** அருகாமையில் தரமான மருத்துவ சேவை என்பதே குடிமக்கள் அல்லது பயனாளிகளின் எதிர்பார்ப்பாகும்.

குடிமக்களின் எதிர்ப்பார்ப்பினை நிறைவு செய்வதற்கு ஏதுவாக தமிழகத்தில் உள்ள இரண்டாம் நிலை அரசு மருத்துவமனைகளுக்கு சிடி ஸ்கேன், எம்ஆர்ஐ, டையாலிசஸ் மற்றும் மேமோகிராம் போன்ற நவீன மருத்துவக் கருவிகள், விசாலமான படுக்கை வசதிகளுடன் கூடிய புதிய பிரிவுகள், கட்டுமான வசதிகள் மற்றும் மருத்துவமனைகளுக்குள் சிறப்பான சுகாதார வசதி ஆகியவற்றை தொடர்ந்து வழங்கி வருகிறது.

மேலும், சிறப்பு சிகிச்சைகளான தலைக்காய சிகிச்சை, மனநல சிகிச்சை, போதை மறுவாழ்வு சிகிச்சை, முதியோர் நலனுக்கான சிகிச்சை, கீமோதெரபி சிகிச்சை, டையாலிசிஸ் போன்ற சிகிச்சை

வசதிகள் இவ்வியக்குநரக கட்டுப்பாட்டில் உள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் துவக்கப்பட்டுள்ளது. மேற்காணும் சிகிச்சைகள் தேவையின்அடிப்படையில் பிற இரண்டாம் நிலை மருத்துவமனைகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

**7. மேற்படி சேவைகளில் ஏதேனும் தவறு ஏற்பட்டால் அதற்கான இழப்பீடு போன்ற கூடுதல் கடமைகள்:** மேற்படி சேவைகளில் ஏதேனும் தவறு நிகழ்ந்து அது நிரூபிக்கப்பட்டால் உரிய நீதிமன்ற ஆணைப்படி / அரசாணைப்படி சுழல் (corpus fund) நிதியிலிருந்து உரிய இழப்பீடு வழங்கப்படுகிறது.

## அத்தியாயம் - 4

### பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை

**1. தொலை நோக்கு:** தேசிய மற்றும் உலகளாவிய சமுதாய அளவில், நோய் கண்காணிப்பு மற்றும் நோய் தாக்க நிலை மூலம், சுகாதார தேவைகள் மற்றும் போக்கை கண்டறிந்து அதனுடைய அளவிற்கு ஏற்ப செயல்படுவதே பொது சுகாதாரம்.

**2. பணிகள்:** சுகாதாரமான வாழ்க்கை முறைகள் மற்றும் பழக்கங்கள் மூலம் நோய் பரவுதலை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல், பாதுகாப்பான குடிநீர் மற்றும் உணவுகள் உட்பட சுகாதார மற்றும் சுத்தமான சூழ்நிலையை ஏற்படுத்துதல், சுகாதாரக் கல்வி மற்றும் சமூக இடம் பெயர்தல், பொதுமக்கள் குறிப்பாக பெண்கள் சுகாதார முடிவுகள் எடுக்கும் திறன் வளர்த்தல், நோய் எதிர்ப்பு திறன் வளர்த்தல், கண்காணித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகிய தடுப்பு நடவடிக்கைகளை எடுத்தல், சமுதாயம் சார்ந்த தரமான சுகாதார சேவைகளை ஏற்பாடு செய்தல், முகாம்கள் மற்றும் இயக்கங்கள், தொற்று நோய்கள் உள்ளிட்ட சுகாதார சிக்கல்களை புலனாய்வு செய்தல், இயற்கையான மற்றும் மனிதர்களால் ஏற்படும் பேரிடர்களை மேலாண்மை செய்ய திட்டமிடல், அனைவருக்கும் பலன்கள் சென்றடைய ஏதுவாக பல்வேறு மண்டலங்கள் மற்றும் மக்களிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளை களைந்து அனைவருக்கும் சுகாதார சேவை வழங்குதல், பொது சுகாதார கொள்கைகள் மற்றும் யுத்திகளை வகுத்தல், அர்ப்பணிப்பு மற்றும் திறம் வாய்ந்த சுகாதார பணியாளர்களை உருவாக்குதல், பொது சுகாதார உள்கட்டமைப்பு மற்றும் செயல்படுத்தும் ஆராய்ச்சி ஆகியவைகள் பொது சுகாதாரத்தின் பணிகளாகும்.

பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை 42 சுகாதார மாவட்டங்களுடன், ஒவ்வொரு சுகாதார மாவட்டமும் ஒரு துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) கீழ் செயல்பட்டு வருகிறது.

**3. அனைவருக்குமான நல்வாழ்வு இலக்கை அடைய ஆரம்ப சுகாதார சேவைகள்:** ஆரம்ப சுகாதார சேவை என்பது அனைவருக்குமான நல்வாழ்வு தேவைகளை சமுதாயத்தின் மற்றும் நாட்டின் முழு பங்களிப்புடன் எந்த ஒரு தனி நபரும் அணுகி எளிதில் பெறும் வகையில் அமையவேண்டும்.

**4. ஆரம்ப சுகாதார சேவைகளின் கூறுகள்:** *ஆல்மா ஆட்டா* (Alma-Ata) பிரகடனத்தின்படி பின்வரும் எட்டு அத்தியாவசிய கூறுகள் ஆரம்ப சுகாதாரத்திற்கு கட்டாயம் தேவைப்படுவன ஆகும்.

1. சுகாதார பிரச்சனைகளை மற்றும் நோய் தடுப்பு முறைகளை மக்கள் புரிந்து கொள்ளும்படி அளிக்கப்படும் கல்வி.

2. தரமான மற்றும் ஊட்டச்சத்து மிகுந்த உணவை மக்கள் பெறுதல்.
3. அடிப்படை சுகாதாரத்துடன் கூடிய தரமான மற்றும் போதுமான குடிநீர் வசதி.
4. குடும்ப நல திட்டத்துடன் கூடிய தாய்சேய் நலம்.
5. தொற்று நோய்களை தடுக்கும் தடுப்பூசி திட்டம்.
6. நோய் பரவும் தன்மை கொண்ட நோய்களை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்.
7. பொதுவான நோய்கள் மற்றும் சிறு காயங்களுக்கான சிகிச்சை வசதிகள்.
8. அத்தியாவசிய மருந்துகள் கிடைக்கப்பெறுதல்.

### 5. மக்கள் நலமுடன் வாழ பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநரகத்தின் முக்கிய பங்களிப்புகள்

**குழந்தை இறப்பு வீதம் (Infant Mortality Rate):** குழந்தை இறப்பு விகிதம் என்பது உயிருடன் பிறக்கும் 1000 குழந்தைகளில் ஒரு வயது நிறைவடையும் முன்பாக இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையாகும். மாதிரிப் பதிவு முறையின்படி, 2017-ஆம் ஆண்டுக்கான தமிழ்நாட்டின் குழந்தை இறப்பு விகிதம், உயிருடன் பிறக்கும் 1,000 குழந்தைகளுக்கு 16-ஆக உள்ளது. 2023-க்குள் வளர்ந்த நாடுகளுக்கு இணையாக குழந்தை இறப்பு விகிதத்தை குறைத்திட பச்சிளம் குழந்தை இறப்பு விகிதத்தை குறைத்தல் போன்ற பன்முகத் தன்மை வாய்ந்த நடவடிக்கைகளை தமிழ்நாடு மேற்கொண்டு வருகிறது.

**பேறுகால தாய்மார்களின் இறப்பு விகிதம்:** பேறுகால தாய்மார்களின் இறப்பு விகிதம் ஒரு குறிப்பிட்ட வருடத்தில் உயிருடன் பிறக்கும் ஒரு இலட்சம் குழந்தைகளில், பிரசவ காரணங்களால் தாய்மார்கள் இறக்கும் நிகழ்வுகளை கணக்கிடுவதாகும். தமிழகத்தில் 2014-2016 ஆம் மாதிரி பதிவுமுறை தரவுகளின்படி 1,00,000 உயிருள்ள பிறப்புகளுக்கு 66 ஆக பேறு கால தாய்மார்களின் இறப்பு விகிதம் குறைக்கப்பட்டுள்ளது. சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பு முறைகளின் படி 2018 ஆம் ஆண்டில் பேறு கால தாய்மார்களின் இறப்பு விகிதம் 1,00,000 உயிருள்ள பிறப்புகளுக்கு 60 ஆக குறைக்கப்பட்டுள்ளது. தொலைநோக்குத் திட்டம் 2023-இல் குறிப்பிட்டுள்ளபடி, தாய்மார்கள் இறப்பு விகிதத்தை 2023-க்குள் வளர்ந்த நாடுகளுக்கு இணையாக குறைப்பதே தமிழ்நாடு அரசின் குறிக்கோளாகும்.

**தடுப்பூசிகளால் தடுக்கப்படக்கூடிய நோய்கள் மற்றும் இதர தொற்று நோய்கள் ஒழிக்கப்பட்ட/நீக்கப்பட்ட விவரம்:**

1. 1977-ஆம் ஆண்டில் பெரியம்மை ஒழிக்கப்பட்டது.
2. பிப்ரவரி 2004-ல் போலியோ இல்லா தமிழகம் மற்றும் 2014-ல் போலியோ இல்லா இந்தியா.
3. தமிழகத்தில் இளம்பிள்ளை ரண ஜன்னி 2006-ம் ஆண்டில் நீக்கப்பட்டது மற்றும் மத்திய அரசு 2016-ம் ஆண்டில் உறுதி செய்தது.

4. தமிழகத்தில் 1983-ஆம் ஆண்டு முதல் நரம்பு சிலந்தி நோய் பதிவாகவில்லை மற்றும் 1995-ஆம் ஆண்டில் அது முற்றிலும் ஒழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.
5. பரங்கிப்புண் (Yaws) 2006-ஆம் ஆண்டு முதல் பதிவாகவில்லை மற்றும் 2015-ஆம் ஆண்டில் ஒழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.
6. தொழுநோய்க்கான ஒழிப்பு இலக்கு 2005-ஆம் ஆண்டு எட்டப்பட்டது.
7. மலேரியா நோய் வரும் 2025-ஆம் ஆண்டுக்குள் ஒழிக்கப்படும்.

**இந்த இயக்குநரகத்தின் கீழ் செயல்படும் நிலையங்கள் கீழ்க்கண்ட நிலையங்களை உள்ளடக்கியதாகும்:**

- துணை சுகாதார நிலையங்கள்
- கிராமப்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள்
- நகர்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள்
- சமுதாய நல நிலையங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள்
- மண்டல பூச்சியியல் குழுக்கள்
- தேசிய யானைக்கால் நோய் தடுப்பு நிலையங்கள்
- ஆராய்ச்சி மற்றும் செயல் திட்டங்கள்
- யானைக்கால் மற்றும் மலேரியா சிகிச்சை நிலையங்கள்
- லெப்டோஸ்பைரோஸிஸ் சிகிச்சை நிலையங்கள்
- ஜப்பானிய மூளைக் காய்ச்சல் கட்டுப்பாட்டு நிலையங்கள்
- சென்னை கிண்டி கிங் நிலைய வளாகம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலியிலுள்ள நீர் பகுப்பாய்வகங்கள்
- மாநில மற்றும் மாவட்ட பொது சுகாதார ஆய்வகங்கள்
- பொது சுகாதார நிறுவனம், பூவிருந்தவல்லி
- சுகாதாரம் மற்றும் குடும்ப நல பயிற்சி நிலையங்கள், சென்னை எழும்பூர் மற்றும் மதுரை
- சுகாதார மனித வள மேம்பாட்டு நிறுவனங்கள், சேலம் மற்றும் விழுப்புரம்
- மண்டல பொது சுகாதார பயிற்சி நிறுவனம், திருவரங்குளம்
- மனித இன மற்றும் விலங்கின நோய் பரப்பிகள் கட்டுப்பாடு நிறுவனம், ஓசூர்
- சுகாதார பார்வையாளர் பயிற்சி நிலையம், திருவல்லிக்கேணி
- துணை செவிலியர் (ANM) பயிற்சி பள்ளிகள்

**6. துணை சுகாதார நிலையங்கள்:** சமவெளிப் பகுதிகளில் 5,000 மக்கள் தொகைக்கும், மலைப் பகுதிகளில் 3,000 மக்கள் தொகைக்கும் ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கப்படுகிறது.

துணை சுகாதார நிலையங்கள் கிராமப்புற மக்களுக்கு தாய்சேய் நலப் பணிகள் மற்றும் குடும்ப நலப் பணிகளை வழங்குகிற பொது மையமாக விளங்கி வருகிறது. தமிழகத்தில் 8,713 துணை சுகாதார நிலையங்கள் உள்ளன.

**துணை சுகாதார நிலையத்தின் செயல்பாடுகள்:** தடுப்பூசி, குடும்ப நலம் மற்றும் இதர தாய்சேய் நல சேவைகளை பெற்றிட, கருவுற்ற 12 வாரங்களுக்குள் தாய்மார்கள் அனைவரும் கிராம சுகாதார செவிலியர்களிடம் தங்கள் கர்ப்பத்தை பதிவு செய்துகொள்ள வேண்டும்.

- பிரசவ முன் கவனிப்பு காலத்தில் இரண்டு தவணைகளாக ரண ஜன்னி மற்றும் கக்குவான் இருமல் தடுப்பூசிகள் மற்றும் இரும்பு சத்து மாத்திரைகள் வழங்கப்படுகிறது.
- ஒரு துணை சுகாதார நிலைய பகுதி பின்வரும் சேவைகளுக்காக நான்கு அலகுகளாக பிரிக்கப்பபட்டு கிராம சுகாதார செவிலியர்களால் தாய் சேய் நல சேவைகள் பின்வருமாறு வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| திங்கட்கிழமை | பேறுகால முன்கவனிப்பு சிகிச்சை |
| செவ்வாய்கிழமை | ஆரம்ப சுகாதார நிலையத்தில் பேறுகால சிகிச்சை மற்றும் ஆய்வு கூட்டம். |
| புதன்கிழமை | தடுப்பூசி வழங்கும் பணிகள் |
| வியாழக்கிழமை | வீடுதோறும் சென்று பார்வையிடும் பணி. |
| வெள்ளிக்கிழமை | கிராம சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து நாள். |
| சனிக்கிழமை | வீடுதோறும் சென்று பார்வையிடும் பணி. |

- கிராம சுகாதார செவிலியர்கள் சிறு சிகிச்சை அளிக்க பணிகளை பிற்பகல் மேற்கொள்கிறார்கள்.
- நிரந்தர மற்றும் தற்காலிக குடும்ப நலத் திட்ட சேவைகள் தொடர்பாக கிராம சுகாதார செவிலியர்கள் மக்களுக்கு ஆலோசனைகள் வழங்குகிறார்கள்.
- தொற்றா நோய்களான நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், கர்ப்ப வாய் புற்று மற்றும் மார்பக புற்று நோய் போன்றவற்றை பரிசோதித்து, பரிந்துரை செய்தல் மற்றும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுத போன்ற பணிகளையும் கிராம சுகாதார செவிலியர்கள் மேற்கொள்கிறார்கள்.
- தொற்று நோய்களை தடுத்தல், பிறப்பு இறப்பு பதிவுகளை சரிபார்த்தல், சுகாதார விழிப்புணர்வு, நோய் கண்காணிப்பு போன்ற பணிகளை மேற்கொள்ள ஒவ்வொரு சுகாதார

ஆய்வாளருக்கும் தலா மூன்று துணை சுகாதார நிலையங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது.

- சுகாதார ஆய்வாளர் கிராமத்தை பார்வையிடுவதுடன், காய்ச்சல் கண்ட நோயாளிகளிடமிருந்து மலேரியா பாதிப்பு உள்ளதா என கண்டறிய இரத்த தடவல் மாதிரிகளை சேகரிக்கிறார்.
- சுகாதார ஆய்வாளர் இரண்டு வாரங்களுக்கு மேல் இருமல் கண்ட நோயாளிகளிடம் சளி மாதிரியை சேகரித்து ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கிறார். அதில் காசநோய் இருப்பது உறுதி செய்யப்பட்டால், ஆரம்ப சுகாதார நிலையங்களின் மூலம் சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது.
- கிராம பகுதிகளில் உள்ள நீர் நிலைகளில் குளோரினேஷன் செய்வதை, சுகாதார மற்ற பகுதிகளில் நோய் ஏற்படா வண்ணம் தூய்மைச் செய்வதை சுகாதார ஆய்வாளர்கள் கண்காணிக்கிறார்கள்.
- தொழு நோய் கண்டறியும் பணி மற்றும் சிகிச்சை ஆகியவற்றையும் சுகாதார ஆய்வாளர் மேற்கொள்கிறார்கள்.
- விழாக் காலங்களில் பொது சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பணிகளை சுகாதார ஆய்வாளர் மேற்கொள்கிறார்கள்.
- ஆண்களுக்கான கருத்தடை சாதனங்களை ஊக்குவித்து மற்றும் ஆண்களுக்கான குடும்ப நலத்திட்ட அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ள சுகாதார ஆய்வாளர் ஊக்குவிக்கிறார்.

**7. ஆரம்ப சுகாதார நிலையங்கள்**: சமவெளிப் பகுதிகளில் 30,000 மக்கள் தொகைக்கும், மலைப் பகுதிகளில் 20,000 மக்கள் தொகைக்கும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகிறது. எளிதில் அணுக இயலாத மற்றும் தொலைதூர பகுதிகளுக்கு 'உரிய நேரத்தில் உடனடி சிகிச்சை' என்ற அணுகுமுறை கடைபிடிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 1,806 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன.

**மருத்துவ அலுவலர்களின் மேற்பார்வை:** நகர்ப்புற ஏழை மக்களுக்கு ஆரம்ப சுகாதார சேவையை மேம்படுத்தும் பொருட்டு, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககத்தின் கீழ் 320 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. சென்னை மாநகராட்சியில் 140 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. நகரப் பகுதிகளில் ஆரம்ப சுகாதார சேவைக்காக 50,000 மக்கள் தொகைக்கு ஒரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையமும், 5 இலட்சம் மக்கள் தொகைக்கு ஒரு சமுதாய சுகாதார மையமும் அமைக்கப்படுகிறது.

**ஆரம்ப சுகாதார நிலையங்களின் செயல்பாடுகள்:**

- மருத்துவ சிகிச்சை
- அடிப்படை ஆய்வக சேவைகள்
- பிரசவ முன் கவனிப்பு மற்றும் பின் கவனிப்பு சேவைகள்
- குடும்ப நல திட்டப் பணிகள்
- சுகாதார திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
- சுகாதார விழிப்புணர்வு மற்றும் பயிற்சி
- பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் மற்றும் அடிப்படை சுகாதாரப்பணி
- உள்ளூர்களில் பரவும் நோய்களை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்
- சுகாதாரம் சார்ந்த புள்ளி விவரங்களை சேகரித்தல் மற்றும் அனுப்புதல்

**சமுதாய நல நிலையங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள்:** ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அடுத்தபடியாக ஒவ்வொரு வட்டாரத்திலும் முழு நேரமும் செயல்படக்கூடிய 30 படுக்கை வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் குறைந்த பட்சம் ஒரு வட்டாரத்திற்கு ஒன்று என அமைக்கப்பட்டு வருகிறது. அதன்படி தற்போது, 422 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஐந்து மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஒவ்வொரு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திலும் அறுவை அரங்கம், 'அல்ட்ரா சோனாகிராம்', 'இ.சி.ஜி', 'செமி ஆட்டோ அனலைசர்', ஊடுகதிர் சாதனம், செல் கவுண்ட்டர் போன்ற நவீன ஆய்வகக் கருவிகள் மற்றும் அவசரகால ஊர்தி போன்ற வசதிகள் உள்ளன. 341 வட்டார மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவ சேவைகள் வழங்கப்படுகின்றன.

**8. அனைவருக்குமான நல்வாழ்வு சேவை:** 2017 ஆம் ஆண்டிலிருந்து துணை சுகாதார நிலைய சேவைகள் மேலும் விரிவாக்கம் பெற்று அனைவருக்குமான நல்வாழ்வு சேவைப்பணிகளாக தற்போது மாறி வருகிறது. இந்த அனைவருக்குமான நல்வாழ்வு சேவைப்பணி, தமிழ் நாட்டில் உள்ள துணை சுகாதார நிலையங்களை வலிமைப்படுத்தி, சுகாதாரம் குறித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை எய்திட ஏதுவாக, அனைவருக்குமான உறுதி செய்யப்பட்ட அத்தியாவசியமான சேவைகளை அளித்திடும் நிலையங்களாக துணை சுகாதார நிலையங்களை உயர்த்தி, தரமான நிலையம் சார்ந்த சேவைகளையும், வீடுதோறும் பார்வையிடும் களம்சார்ந்த பணிகளை எல்லோருக்கும் கிடைக்கும் வகையில் செய்திட இத்திட்டம் உதவுகிறது.

1. பேறுகால மற்றும் குழந்தை பிறப்புக்கான கவனிப்பு
2. பச்சிளங்குழந்தைகள் நலனுக்கான பணிகள்

3. குழந்தைபருவ மற்றும் வளரிளம் பருவத்தினருக்கான சுகாதார சேவைகள்
4. குடும்ப நலத்திட்டப்பணிகள், கருத்தடை சாதன வசதிகள் மற்றும் பேறுசார் குழந்தைநலப்பணிகள்
5. பொதுவான தொற்று நோய்களை தடுத்தல் மற்றும் சிகிச்சை அளித்தல் – தேசிய சுகாதார திட்டங்களை நிறைவேற்றுதல்
6. சாதாரணமான நோய்கள் மற்றும் சிறுகாயங்களுக்கான பொது புறநோயாளிப் பிரிவு
7. தொற்றா நோய்களை கண்டறிந்து சிகிச்சை அளித்தல்
8. மனநோயாளிகளுக்கான அடிப்படை பரிசோதனை மற்றும் சிகிச்சை வசதிகள்
9. கண், காது, மூக்கு போன்றவற்றில் ஏற்படும் சாதாரண பிரச்சினைகளுக்கு கவனிப்பு
10. அடிப்படை பல் மருத்துவ கவனிப்பு
11. முதியோர் நலம் மற்றும் ஆற்றுப்படுத்தும் சிகிச்சை
12. விபத்து மற்றும் அவசர கால மருத்துவ சேவைகள்

**9. நகர்புறங்களில் சிறப்பு பன்முக மருத்துவ சேவை பிரிவுகள்:** நகர்புற ஏழை எளிய மக்களின் வீட்டருகே தரமான சிறப்பு மருத்துவ சேவைகள் வழங்கும் பொருட்டு, சென்னை பெருநகர மாநகராட்சி பகுதியில் 96 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிறப்பு பன்முக மருத்துவ சேவை பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களின் மூலமாக தாய் சேய் நல சேவைகள், தொற்றா நோய்களுக்கான பரிசோதனை மற்றும் சிகிச்சை, குடும்ப நலம், தடுப்பூசி, பல் மருத்துவ சேவை மற்றும் தொற்றா நோய்களான நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களை கட்டுப்படுத்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. ஒப்பந்தப் பணியாளர்கள் மற்றும் தினக்கூலி பணியாளர்கள், கூலி இழப்பு இன்றி இந்த மாலைநேர சிறப்பு மருத்துவ நிலையத்தில் கட்டணமின்றி மருத்துவ சேவையை பெற முடியும்.

**10.அம்மா ஆரோக்கிய திட்டம் :** அம்மா ஆரோக்கிய திட்டம் என்பது ஆண்டிற்கு ஒருமுறை 30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் அடிப்படையான முழு உடல் பரிசோதனை செய்வதாகும். இத்திட்டம் 400 மேம்படுத்தப்பட்ட/வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பிரதி வாரம் வியாழன் மற்றும் வெள்ளிகிழமைகளில் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் இலவசமாக உடற்பரிசோதனை மற்றும் இரத்த பரிசோதனை செய்து கொள்ளலாம்.

இந்த முகாம்களில் 25 விதமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன அவையாவன:

1. உயரம்
2. எடை

3. எடை உயரம் குறியீடு (BMI)
4. இரத்த அழுத்தம்
5. குருதி செம்மை பரிசோதனை
6. இரத்த வகை பரிசோதனை
7. இரத்தத்தில் சர்க்கரையின் அளவு
8. இரத்தத்தில் கொழுப்பு சத்து
9. இரத்தத்தில் கிரியாட்டினின் அளவு
10. சிறுநீரில் உப்புசத்து
11. சிறுநீரில் சர்க்கரை
12. சிறுநீரில் – டெபாசிட்ஸ்
13. கருப்பை வாய் புற்று நோய் பரிசோதனை
14. மார்பக புற்று நோய் பரிசோதனை
15. வாய் புற்று நோய் பரிசோதைனை
16. பார்வை குறைபாடு மற்றும் கண் புரை நோய் பரிசோதனை
17. தோல் நோய் பரிசோதனை
18. மருத்துவர் மூலமான பொது உடற்பரிசோதனை (தேவையிருப்பின்)

**தேவையினடிப்படையில் கீழ்க்கண்ட பரிசோதனைகளும் செய்யப்படும்**

1. இரத்த அணுக்கள்-மொத்த எண்ணிக்கை
2. இரத்த அணுக்கள்-வேறுபட்ட எண்ணிக்கை
3. குருதி தடவல் பரிசோதனை
4. அல்டரா சவுண்ட் பரிசோதனை(தேவையிருப்பின்)
5. ஈ.சி.ஜி (அறிகுறிகளை பொறுத்து)
6. எக்ஸ்ரே பரிசோதனை
7. சளிப்பரிசோதனை ஆகியன மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

**11. ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவ சேவை:** 341 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவ சிகிச்சை பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. கீழ்கண்ட பல் சார்ந்த பிரச்சனைகளுக்கு இந்த சிகிச்சை பிரிவுளில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

1. பல் சொத்தை
2. பல் புளோரோசிஸ்
3. பல் ஈறு அழற்சி

4. பற்கூழ் அழற்சி

5. பல் சீரமைப்பு

6. பொருந்தா பல் அமைப்பு மற்றும் இதர பல் சார்ந்த பிரச்சனைகள்.

**12. நடமாடும் மருத்துவமனை திட்டம்:** எளிதில் சென்றடைய முடியாத தொலை துாரப் பகுதிகளில் உள்ள கிராமங்களுக்கு சென்று ஏழை எளிய மக்களுக்கு தரமான மருத்துவ சேவைகள் மற்றும் சுகாதார வசதிகள் செய்வது நடமாடும் மருத்துவமனை திட்டத்தின் நோக்கமாகும். தற்போது 416 நடமாடும் மருத்துவக்குழு வாகனங்கள் மாநிலம் முழுவதும் இத்திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றது. ஒவ்வொறு நடமாடும் மருத்துவக் குழுவிலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு ஆய்வக நுட்புனர், ஒரு ஓட்டுநர் மற்றும் ஒரு துப்புரவாளர் ஆகியோர் பணியமர்த்தப்பட்டு மற்றும் ஆய்வக வசதிகள் மேம்படுத்தப்பட்டு இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், சிறுநீர் பரிசோதனை போன்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிரந்தர பயண திட்டத்தின்படி அனைத்து ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள தொலைதூரப் பகுதிகள் மற்றும் சிற்றூர்களில் வாழும் மக்களுக்கு குறிப்பாக தாய்சேய் நலப்பணிகள், தொற்றும் மற்றும் தொற்றா நோய்கள் ஆகியவற்றிற்கு தரமான மருத்துவ சேவை வழங்குவது இத்திட்டத்தின் உயரிய நோக்கமாகும். முகாம் நடைபெறும் இடங்களில் நாள், நேரம் குறிப்பிட்ட விளம்பர பலகை நிரந்தரமாக வைக்கப்பட்டிருக்கும். திங்கள், புதன், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் காலை மற்றும் மதியம் இரண்டு முகாம்களும் மற்றும் செவ்வாய், சனி கிழமைகளில் ஒரு முகாமும் நடத்தப்படுகின்றன. பிரதி செவ்வாய் கிழமைகளில் மதியம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தில் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சுழற்சி முறையில் நடைபெறும் ஆய்வுக்கூட்டத்தில் நடமாடும் மருத்துவமனை மருத்துவ அலுவலர் மற்றும் குழுக்கள் பங்கேற்கின்றனர். இக்கூட்டத்தில் நடமாடும் மருத்துவமனை தொடர்பான பிரச்சனைகள் விவாதிக்கப்படுகிறது. நிரந்தர பயணத்திட்டத்தின் படி ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு மாதத்திற்கு 40 முகாம்கள் வீதம் நடத்தப்படுகின்றன.

**13. பொது சுகாதாரம் சார்ந்த முக்கிய திட்டப்பணிகள்:**

1. தாய்சேய் நலம் மற்றும் குடும்ப நலம் மற்றும் தடுப்பூசி பணிகள்.

2. தொற்று நோய்கள் பரவாமல் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்.

3. தொற்றா வகை நோய்கள் பரவாமல் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்.

4. மனிதர்களாலும், இயற்கையாலும் ஏற்படும் பொது சுகாதார இடர்பாடுகளை சமாளித்தல்.

**14. தாய்சேய் நலத் திட்டங்கள்:**

1. ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேர பிரசவ கவனிப்பு.

2. தேசிய இரத்த சோகை தடுப்பு திட்டம்.

3. கர்ப்ப கால சர்க்கரை நோய் கட்டுப்பாட்டு திட்டம்.

4. தேசிய வைட்டமின் A குறைப்பாடு கட்டுபாட்டு திட்டம்.

5. தேசிய குடற்புழு நீக்கும் திட்டம்.

6. தேசிய அயோடின் பற்றாக்குறை கட்டுபாட்டு திட்டம்.

7. வளரிளம் பருவத்தினருக்கான மாதவிடாய் கால சுகாதாரத் திட்டம்.

8. தேசிய தடுப்பூசி திட்டம்.

தொற்று நோய்களை வராமல் தடுத்திட மற்றும் கட்டுப்படுத்திட தடுப்பூசிகள் முக்கிய பங்காற்றுகின்றன. தமிழ்நாடு தேசிய தடுப்பூசி திட்டத்தில் நாட்டிற்கே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. 1978-ஆம் ஆண்டில் விரிவான தடுப்பூசி திட்டம் தொடங்கப்பட்டது. 1985-ஆம் ஆண்டில் அனைவருக்குமான தடுப்பூசி திட்டமாக இத்திட்டம் தட்டம்மை தடுப்பூசியுடன் சேர்க்கப்பட்டு மேலும் விரிவுபடுத்தப்பட்டது. 1992-ஆம் ஆண்டில் இத்திட்டம் பாதுகாப்பான தாய்மை மற்றும் குழந்தை நலம் என்ற திட்டமாக ஒருங்கிணைக்கப்பட்டு மாற்றியமைக்கப்பட்டது. 2004-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு போலியோ இல்லாத மாநிலமாக திகழ்ந்து வருகிறது.

அனைத்து கருவுற்ற தாய்மார்களுக்கும் ரண ஜன்னி தடுப்பூசி வழங்கப்படுகிறது. மேலும் மஞ்சள்காமாலை, போலியோ மருந்து வாய் மூலம் வழங்குதல் மற்றும் காசநோய் தடுப்பூசிகளும் வழங்குகின்றன. பென்டா வேலண்ட், போலியோ மருந்து வாய் மூலம் வழங்குதல் மற்றும் ரோட்டா வைரஸ் ஆகியன முறையே 6,10 மற்றும் 14 ஆவது வாரங்களில் வழங்கப்படுகிறது. போலியோ தடுப்பூசி ஊசியாக போடும் முறையும் 6 மற்றும் 14 ஆவது வாரங்களில் செயல்படுத்தப்படுகிறது.
9 மாதங்கள் நிறைவடைந்த நிலை தட்டம்மை மற்றும் ரூபெல்லா தடுப்பூசி மற்றும் மூளைக் காய்ச்சல் முதல் தவணை குழந்தைக்கு வழங்கப்படுகிறது.

16 முதல் 24 மாதங்களில் ஊக்குவிக்கப்பட்ட முத்தடுப்பு ஊசி, ஊக்குவிக்கப்பட்ட வாய் வழி போலியோ மருந்து, தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி இரண்டாவது தவணை ஆகியவை வழங்கப்படுகிறது. முத்தடுப்பு ஊசியினுடைய இரண்டாவது தவணை 5 மற்றும் 6 வயதுகளில் வழங்கப்படுகிறது. இதே போன்று 10 மற்றும் 16 ஆவது வயது குழந்தைகளுக்கு தொண்டை அடைப்பான் மற்றும் ரண ஜன்னி தடுப்பூசிகள் வழங்கப்படுகிறது.

## 15. தேசிய குடும்ப நல்வாழ்வு திட்டம்

**டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்:** ஏழைத்தாய்மார்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.18,000/- ஏப்ரல் 2018 முதல் 5 தவணைகளில் வழங்கப்படுகிறது.

| தவணை / ஊட்டச்சத்து பெட்டகம் | நிபந்தனைகள் | உதவித்தொகை ரூபாய் |
|---|---|---|
| முதல் தவணை | 12 வாரங்களுக்குள் கர்ப்பம் பதிவு செய்திருக்க வேண்டும் | 2,000 |
| ஊட்டச்சத்து பெட்டகம் | மூன்றாம் மாத முடிவில் முதல் ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்படும் | 2,000 |
| இரண்டாம் தவணை | நான்கு மாதங்கள் முடிந்த பின் வழங்கப்படும் | 2,000 |
| ஊட்டச்சத்து பெட்டகம் | நான்காம் மாத முடிவில் இரண்டாம் ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்படும் | 2,000 |
| மூன்றாம் தவணை | பிரவத்திற்கு பிறகு வழங்கப்படும் | 4,000 |
| நான்காம் தவணை | குழந்தைக்கு மூன்றாம் தவணை ஒபிவி, ரோட்டா வைரஸ், பென்டா வேலண்ட் மூன்றாம் தவணை மற்றும் இரண்டாம் தவணை ஐபிவி தடுப்பூசி வழங்கப்பட்டிருக்க வேண்டும். | 4,000 |
| ஐந்தாம் தவணை | குழந்தையின் 9-12 மாதங்களுக்குள் தட்டம்மை, ரூபல்லா தடுப்பூசி வழங்கப் பட்டிருக்க வேண்டும். | 2,000 |
| | **மொத்தம்** | 18,000 |

**ஜனனி சுரக்ஷா யோஜனா நிதி உதவி திட்டம்:**

- வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் 19 வயதிற்கு மேற்பட்ட கர்ப்பிணிகள்.
- 19 வயதிற்கு மேற்பட்ட அனைத்து தாழ்த்தப்பட்ட / பழங்குடியின தாய்மார்கள்

| பகுதி | மருத்துவமனை பிரசவம் | வீடுகளில்நடைபெறும் பிரசவம் |
|---|---|---|
| கிராமம் | 700 | 500 |
| நகர்புரம் | 600 | 500 |

**அம்மா குழந்தை நலப் பரிசு பெட்டகம்:** அம்மா குழந்தை நலப் பரிசு பெட்டகம் என்ற திட்டம் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள் உள்ளிட்ட அனைத்து அரசு

மருத்துவமனைகளிலும் பிரசவித்த தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் கீழ்க்கண்ட நோக்கோடு வழங்கப்படுகின்றது.

- பேறுகாலத்திற்குப் பின் தாய்மார்கள் மற்றும் பச்சிளம் சிசுக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், தாய்க்கும் சேய்க்குமான ஆரோக்கியமான பழக்கங்களை தாய்மார்களிடையே ஏற்படுத்துதல்.
- பிரசவத்திற்கு பின்னர் தாய்க்கும் பச்சிளம் சிசுவிற்கும் ஏற்படும் நோய் தொற்றுகளை குறைப்பதற்கு இவை பெரிதும் உதவுவதால் பச்சிளம் சிசு மரணம் மற்றும் குழந்தை இறப்பு மரணத்தை தடுக்க இத்திட்டம் பெரிதும் உதவுகிறது.

இந்த அம்மா குழந்தை நலப்பரிசு பெட்டகம் பின்வரும் 16 பொருட்களை உள்ளடக்கியதாகும்.

**குழந்தைக்கானது**

- குழந்தைகளுக்கான துண்டு, உடை, படுக்கை, கொசுவலை, நாப்கின், எண்ணெய், குளியல் திரவம், குளியல் சோப்பு, சோப்பு டப்பா, நகவெட்டி, கிலுகிலுப்பை, பொம்மை.

**தாய்க்குரியது**

- கை கழுவும் திரவம், குளியல் சோப்பு, சௌபாக்கிய சுண்டி லேகியம், பெட்டகப் பை.

**பிரசவத்தின் போது உறவினர் ஒருவர் உடன் இருத்தல்:** 2004-ஆம் ஆண்டில் இருந்து நம் மாநிலத்தில் பிரசவிக்கும் தாய்மார் உடன் உறவினர் ஒருவர் உடன் இருப்பதற்கான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் நிலையம் சார்ந்த பிரசவங்கள் நடைபெறுவது ஊக்குவிக்கப்பட்டது.

**மலைப்பிரதேசங்களில் உள்ள 17 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவ காத்திருப்பு அறை:** மலை பிரதேசங்களில் வாழும் கர்ப்பிணி தாய்மார்கள் பிரசவம் நடைபெறும் இடத்திற்கு வருவதில் உள்ள சிரமங்களை கலைவதற்காகவும், உரிய நேரத்தில் சுகப்பிரசவம் நிகழவும் பிரசவ காத்திருப்பு அறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. 108 அவசர கால ஊர்திகள் போன்றவை வழங்கப்பட்டிருந்தாலும் கர்ப்பிணி தாய்மார்கள் நீண்ட துாரம் பயணம் செய்து வருவது தவிர்க்கும் பொருட்டும், குறித்த நாளில் பிரசவம் நிகழ்வதற்கு முன்னரே பிரசவ காத்திருப்பு அறைகள் மலைப்பிரதேசங்களில் உள்ள 17 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்பட்டு வருகின்றன. சீமாங் நிலையங்களுக்கு பரிந்துரை தேவைப்படின் உடனடியாக செல்லவும் இந்த காத்திருப்பு அறைகள் பயனுள்ளதாக இருந்து வருகிறது.

**16. இரத்த சேமிப்பு மையங்கள்:** தேசிய ஊரக நல்வாழ்வு திட்டத்தின் ஆதரவில், 259 மேம்படுத்தப்பட்டஆரம்ப சுகாதார நிலையங்களில் இரத்த சேமிப்பு வசதிகள் உள்ளன. இரத்ததான முகாம்களில் இரத்தம் தொடர்ச்சியாக சேகரிக்கப்பட்டுவருகிறது.

**17. தொற்றுநோய்களை தடுத்தலும் கட்டுப்படுத்துதலும்**

1. தேசிய குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு திட்டம்

2 தேசிய பூச்சிகளால் பரவும் நோய்கள் கட்டுப்பாடு திட்டம்

3 ஒருங்கிணைந்த நோய்கள் கண்காணிப்புதிட்டம்

4 தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம்

5 திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம்

6 தேசிய வயிற்றுப்போக்கு நோய்கள் கட்டுப்பாடு திட்டம்

**18. தொற்றா வகை நோய்களை தடுத்தலும் கட்டுப்படுத்தலும்**

1. தேசிய புகையிலை கட்டுப்பாட்டுத் திட்டம்
2. நீரிழிவு நோய் தடுப்பு திட்டம்
3. நீரிழிவு நோய் மற்றும் இதய வால்வு நோய்கள் தடுப்பு திட்டம்
4. புற்று நோய் கட்டுப்பாடுதிட்டம்
5. புளுரோசிஸ் கட்டுப்பாடு திட்டம்
6. சிலிக்கோசிஸ் கட்டுப்பாடு திட்டம்
7. நாட்பட்டநுரையீரல் அழற்சிநோய் தடுப்பு திட்டம்

**19. 104 - மருத்துவ தகவல் உதவி மையம் :** இந்த 24 மணிநேர சேவையின் மூலம் பொதுமக்கள் சுகாதாரத் திட்டங்கள் மற்றும் மருத்துவ சிக்கல் குறித்து தகவல்கள் மற்றும் ஆற்றுப்படுத்தும் சேவைகளை பெறலாம். ‘104’ மருத்துவ தகவல் சேவை, கீழ்க்கண்ட சேவைகளை வழங்குகிறது:

- பொதுமக்கள் மற்றும் நோயாளிகளுக்கு முதலுதவி சிகிச்சை, தாய்சேய் நல தகவல், நோய்த்தடுப்பு சுகாதார சேவை சார்ந்த தகவல்கள் போன்ற சுகாதாரம் தொடர்பான பொருளில் தக்க வழிகாட்டுதல்கள் வழங்குதல்.
- இரத்த வங்கிகள் மற்றும் இரத்த சேமிப்பு நிலையங்கள் குறித்த தகவல்களை அளித்தல்.
- சுகாதாரத் திட்டங்கள் மற்றும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் மற்றும் ஜனனி சுரக்ஷா யோஜனா போன்ற நலத் திட்டங்கள் குறித்த தகவல்களை வழங்குதல்.
- முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம் பற்றிய தகவல்களை அளித்தல்.
- ஊட்டச்சத்து, எச்ஐவி/எய்ட்ஸ், குடும்பநலம், தற்கொலை தடுப்பு போன்ற அனைத்து சுகாதாரப் பிரச்சினைகளுக்கும் ஆலோசனைகள் வழங்குதல்.
- அதிக இறப்புகள் மற்றும் சிக்கலான பிரசவம் போன்ற அவசரகால தேவைகளுக்கு சுகாதார வசதிகள் குறித்த தகவல்களை 24 மணி நேரமும் வழங்குதல்.

**20. பிறப்பு இறப்பு பதிவு முறை :** மத்திய பிறப்பு இறப்பு பதிவுச்சட்டம் 18 / 1969ன் படி, நாடு முழுவதும் ஒரே சீரான பதிவு முறை நடைமுறைப்படுத்தப்பட்டு, அனைத்து பிறப்பு மற்றும் இறப்பு

பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பிறப்பு இறப்பு பதிவு சட்டத்தின் படி பிறப்பு மற்றும் இறப்புகளை அவை நிகழ்ந்த இடத்திலேயே பதிவு செய்வது சட்டப்பூர்வமாகும்.

பிறப்பு இறப்பு பதிவுச் சட்டம் 01.04.1970 முதல் தமிழகத்தில் கட்டாயமாக்கப்பட்டு தமிழ்நாடு பிறப்பு இறப்பு விதிகள் 1977-ன் படி நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும், 01.01.2000 முதல் திருத்தியமைக்கப்பட்ட தமிழ்நாடு பிறப்பு இறப்பு பதிவு விதிகள் 2000-ன் படி பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**பிறப்பு இறப்பு பதிவாளர்**

| உள்ளாட்சி அமைப்பு | அலுவலர் |
|---|---|
| மாநகராட்சி | துப்புரவு ஆய்வாளர் |
| நகராட்சி / நகராட்சி நகரியம் | துப்புரவு ஆய்வாளர் |
| பேரூராட்சி | செயல் அலுவலர்/ துப்புரவு ஆய்வாளர் |
| கிராமப் பஞ்சாயத்து | கிராம நிர்வாக அலுவலர் |
| ஆரம்ப சுகாதார நிலையம் | சுகாதார ஆய்வாளர் |
| அரசு மருத்துவமனைகள் (கிராமப் பஞ்சாயத்து, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகள்) | பல்நோக்கு சுகாதார மேற்பார்வையாளர்(ஆண்) |
| பாளையம் (ராணுவ குடியிருப்பு பகுதி) | சுகாதார ஆய்வாளர்/ துப்புரவு ஆய்வாளர் |
| எஸ்டேட் / மலைத் தோட்ட பகுதிகள் | மேலாளர் |

01.01.2018 முதல் மாநிலம் முழுவதும் அனைத்து பிறப்பு இறப்பு பதிவாளர்களால், பிறப்பு இறப்பு பதிவு மென்பொருளில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. http://crstn.org இணைய வழி வலைதளம் மூலமாக பிறப்பு / இறப்பு சான்றிதழ்களை எங்கு / எப்பொழுது வேண்டுமானாலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

## 21. பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து இயக்குநரகத்தில் நோய்கட்டுப்பாட்டுக்கென 24 மணிநேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறை

**044-24334811 , 9444340496, 8754448477**

பொது சுகாதார நிலையங்களின் விவரங்கள், சேவைகள் மற்றும் பணிகள், திட்டங்கள் மற்றும் இதர முக்கியவிவரங்களை தெரிந்து கொள்ள பின்வரும் இணையதள சேவைகளிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| தகவல் பகுப்பு | இணையதள சேவை |
|---|---|
| தொடர்பு முகவரிகளுக்கு | tnhealth.org |

| | |
|---|---|
| பேறுசார் குழந்தை நலம் | picme.tn.gov.in/public |
| பிறப்பு மற்றும் இறப்பு பதிவு முறை | crstn.org |
| தேசிய ஊரக நல்வாழ்வு திட்டப்பணிகளுக்கு | nrhmtn.gov.in |
| தமிழ் நாடு மாநில அரசு | tn.gov.in |

## அத்தியாயம் - 5

## குடும்ப நல இயக்ககம்

### 1. நோக்கமும் இலக்கும்

**தொலைநோக்கு பார்வை: வரும் 2030 – க்குள் அடைய வேண்டியவை**

i. சிசு மரண விகிதத்தை 16 லிருந்து 10 ஆக குறைத்தல் மற்றும் மகப்பேறு மரணத்தை 60 லிருந்து பூஜ்ஜியமாக்குதல்

ii. குடும்ப நல அறுவை சிகிச்சையினால் ஏற்படும் மரணங்கள் முழுவதுமாக தவிர்த்தல்

iii. உயர் பிறப்பு வரிசையின் கீழ் குழந்தை பிறப்பு சதவீதத்தை 7.2 – லிருந்து 2 - க்கு குறைத்தல்

iv. குடும்ப நலத்திட்ட சேவைகளை அனைத்து அரசு மருத்துவ நிலையங்களிலும் முழுமையான சேவை கிடைப்பதை உறுதி செய்தல்

v. குடும்ப நலத்திட்டத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் பயிற்சி பெற்ற சேவை வழங்குவோர் இருப்பதை முழுமையாக உறுதி செய்தல்

vi. பூர்த்தி செய்யப்படாத குடும்ப நலத் திட்ட சேவைகளை 10.1 சதவீதத்திலிருந்து முழுமையாக நீக்கி அனைத்து தரப்பினருக்கும் சேவை கிடைப்பதை உறுதி செய்தல்

vii. புதிய கருத்தடை முறைகள் பயன்படுத்துவோர் சதவீதத்தை 52.6 லிருந்து 70 ஆக உயர்த்துதல்

viii. அனைத்து கருத்தடை முறைகளும் எளிதில் புரிந்து விரும்பிய முறையை தேர்ந்தெடுக்கும் நிலையை உருவாக்குதல்

ix. பயனாளிகளுக்கு தேவையான கருத்தடை சாதனங்களை உரிய நேரத்தில் ஆஷா பணியாளர்கள் அனைத்து வட்டாரங்களிலும் உள்ள அங்கன்வாடி ஊழியர்களைப் பயன்படுத்தி பயனாளிகளின் இல்லத்திற்கே சென்று வழங்குதல்

**குறிக்கோள்:** குடும்ப நலதிட்டத்தை செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக உள்ளது. குடும்ப நலத் திட்டம் 1956-ஆம் ஆண்டு முதல் நமது மாநிலத்தில் மக்கள் பங்கேற்பு திட்டமாக 100 விழுக்காடு மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேவையான அளவிற்கு பிறப்பு விகிதத்தை குறைத்து மக்கள் தொகைப் பெருக்கத்தை சமநிலைபடுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். அரசு பிறப்பு விகிதத்தை குறைப்பதில் சிறப்பான சாதனையைக் கருத்தில் கொண்டு குடும்ப நலத் திட்டம் "குறியீடு அடிப்படையிலான அணுகுமுறையிலிருந்து சமுதாயத் தேவைகளின் மதிப்பீட்டு அணுகுமுறையாக" மாறியுள்ளது.

இதில் குடும்ப நலச் சேவை மற்றும் தாய் சேய் நல மேம்பாட்டில் இதுவரை நிறைவேற்றப்படாத தேவைகளை அளிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

## 2. அலுவல் பரிவர்த்தனைகள்

i. ஆண் / பெண் கருத்தடை அறுவை சிகிச்சை வசதிகளை அனைத்து அரசு மருத்துவ நிலையங்களிலும், அரசு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நிலையங்களிலும், தனியார் மருத்துவ நிலையங்களிலும் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களிலும் வழங்குதல்.

ii. தற்காலிக குடும்ப நல கருத்தடை முறைகள்

- கருத்தடை வளையம் 380 ஏ (ம) 375
- வாய்வழி உட்கொள்ளும் கருத்தடை மாத்திரை- மாலா என் மற்றும் சாயா (சென்ட்குரோமன்)
- கருத்தடை ஊசி – அந்தாரா
- கருத்தடை சாதனம் - ஆணுறை
- அவசரகால கருத்தடை மாத்திரை

iii. நவீன கருகலைப்பு முறைகள்

மருத்துவ ரீதியான கருகலைப்பு மாத்திரை

உறிஞ்சி குழாய் மூலம் கருகலைப்பு செய்யும் நவீன முறை

iv. மருத்துவர்களுக்கான குடும்பநல திட்ட பயிற்சிகள்

பெண் அறுவை சிகிச்சை – லேப்ராஸ்கோபிக் (ம) மினிலேப்

நவீன முறைகளான கருகலைப்பு பயிற்சி

கருத்தடை வளையம் பொருத்துவதற்கான பயிற்சி

கருத்தடை ஊசி போடுவதற்கான பயிற்சி

## 3. குடிமக்கள் அல்லது பயனாளிகள் விவரம்

இரண்டு குழந்தைகளுடன் உள்ள 15-49 வயதுக்குட்பட்ட தகுதி வாய்ந்த தாய்மார்கள் குடும்பநல திட்ட நிரந்தர கருத்தடை சிகிச்சை ஏற்றுக்கொள்ளலாம். 60 வயதுக்குட்பட்ட தகுதிவாய்ந்த ஆண்கள் நிரந்தர குடும்ப நல ஆண் கருத்தடை அறுவை சிகிச்சை ஏற்றுக் கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட வயதுவரம்பிற்குட்பட்ட தகுதிவாய்ந்த தம்பதியர் தங்கள் விருப்பத்திற்கேற்ப ஏதேனும் ஒரு தற்காலிக குடும்ப நல கருத்தடை முறைகளை ஏற்றுக்கொள்ளலாம்.

**4. பயனாளிகளுக்கு துறையால் வழங்கப்படும் சேவைகள் குறித்த விவரங்கள்**

| வ.எண் | வழங்கப்படும் சேவைகள் | சேவைகள் வழங்கப்படும் மருத்துவ நிலையங்கள் |
|---|---|---|
| i. | பெண்களுக்கான குடும்பநல அறுவைசிகிச்சை (லேப்ராஸ்கோபிக், மினிலேப் குடும்பநல கருத்தடை அறுவை சிகிச்சை) | அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை /அரசு மருத்துவமனை/ வட்டார ஆரம்ப சுகாதார நிலையம்/ அரசு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நிலையங்கள் |
| ii. | ஆண்களுக்கான நவீன வாசக்டமி | அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை /அரசு மருத்துவமனை/ வட்டார ஆரம்ப சுகாதார நிலையம் / அரசு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நிலையங்கள் |
| iii. | மருத்துவ ரீதியான கருக்கலைப்பு முறை / உறிஞ்சிகுழாய் மூலம் கருக்கலைப்பு செய்யும் முறை | அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை /அரசு மருத்துவமனை/ வட்டார ஆரம்ப சுகாதார நிலையம் / அரசு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நிலையங்கள் |
| iv. | கருத்தடை வளையம் பொருத்துதல் | அனைத்து மருத்துவ நிலையங்கள் (ம) துணை சுகாதார நிலையம் / அரசு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நிலையங்கள் |
| v. | வாய்வழி உட்கொள்ளும் மாத்திரை வழங்குதல் | அனைத்து மருத்துவ நிலையங்கள் (ம) துணை சுகாதார நிலையம். |

**5. குறைதீர் முறைகள் மற்றும் அதற்கான வழிகாட்டுதல்கள்:** குடும்பநல திட்டத்தின் கீழ் ஏற்படும் இறப்பு, தோல்வி மற்றும் சிக்கல்கள் தொடர்பாக இழப்பீடு பெறுவதற்கு பயனியின் இணையர் (கணவர்/மனைவி) அரசு மருத்துவ நிலையங்களில் உள்ள மருத்துவ அலுவலரை நேரடியாக அணுகலாம்.

இழப்பீடு பெற கோரும் பயனாளி மருத்துவ நிலையங்களின் செயல்பாட்டில் திருப்தி அடையாதபட்சத்தில் சம்பந்தப்பட்ட மாவட்ட துணை இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் (ம) குடும்ப நலம் அவர்களிடம் மேல்முறையீடு செய்யலாம்.

**6. குடிமக்கள் அல்லது பயனாளிகளின் எதிர்பார்ப்பு:** அனைத்து அரசு மருத்துவ நிலையங்கள், அரசு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நிலையங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் தரமான குடும்ப நல சேவைகள் கிடைக்கப் பெறுதல்.

**7. சேவை வழங்கல் தோல்வியுற்றால் இழப்பீடு வழங்குவது தொடர்பாக**

**குடும்ப நல அறுவை சிகிச்சை இழப்பீட்டுத் திட்டம் :** மத்திய அரசு, குடும்ப நலக் கருத்தடை அறுவை சிகிச்சை ஏற்பாளர்கள் மற்றும் இச்சேவை வழங்குபவர்களுக்கு பின்வரும் காப்பீடு பயன்கள் அளிக்க குடும்ப நல அறுவை சிகிச்சை இழப்பீட்டுத் திட்டத்தை 01.04.2013 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது:

| | | |
|---|---|---|
| i. | குடும்ப நல கருத்தடை அறுவைச் சிகிச்சைக்குப் பின் மருத்துவமனையிலோ அல்லது மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஏழு நாட்களுக்குள் இறக்க நேரிட்டால் | ரூ.2,00,000 |
| ii. | மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டு 8 நாட்களிலிருந்து 30 நாட்களுக்குள் இறக்க நேரிட்டால் | ரூ.50,000 |
| iii. | குடும்ப நல அறுவை சிகிச்சையினால் தோல்வி ஏற்பட்டாலோ அல்லது அறுவை சிகிச்சைக்கு பிறகு குழந்தை பேறு ஏற்பட்டாலோ | ரூ.30,000 |
| iv. | குடும்ப நல அறுவை சிகிச்சையால் ஏற்படும் சிக்கல்களை குணப்படுத்த (மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டு 60 நாட்களுக்குள்) | ரூ. 25,000 மிகாமல் உள்ளபடியான செலவு |
| v. | மருத்துவர்களுக்கான ஈட்டுறுதிக் காப்பீடு (ஒரு ஆண்டில் ஒரு மருத்துவருக்கு நான்கு முறைக்கு மிகாமல்) | ஒரு நீதிமன்ற வழக்குக்கு ரூ. 2,00,000 வரை |

# அத்தியாயம் - 6

## இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம்

**1. தொலை நோக்கு மற்றும் பணிகள்:** இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகத்தின் நோக்கம், பொதுமக்களுக்கு மலிவான, பாதுகாப்பான மற்றும் பயனுள்ள சிகிச்சையை நவீன மருத்துவ முறைகளுக்கு இணையாக வழங்குவதாகும்.

- அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு மட்டங்களில் இந்திய முறை மருத்துவப் பிரிவு / மருத்துவமனைகளைத் திறப்பதன் மூலம் பாரம்பரிய முறைகளின் நன்மைகளை மக்களுக்கு எடுத்துச் செல்கிறது.
- சித்தா, ஆயுர்வேதா, யுனானி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகியவற்றில் பொது மற்றும் தனியார் துறைகளில் கல்வி உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்தல் மற்றும் ஊக்குவித்தல்.
- மருத்துவத் தாவரங்கள் பயிர்செய்தல் மற்றும் மூலப்பொருட்களை பதப்படுத்தும் மற்றும் பாதுகாத்தல் ஆகியவற்றை ஊக்குவித்தல்.
- இந்திய மருத்துவ முறைகளின் உயர்தரம், உற்பத்தியாளர் மற்றும் விற்பனையை ஊக்குவித்தல்.
- இந்திய மருத்துவ முறைகளில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியை ஊக்குவித்தல்.
- தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கை (பொது சுகாதார மையத்தில் மருத்துவம் மற்றும் இந்திய மருத்துவ முறைகளுக்கான தடுப்பு, ஊக்குவிப்பு, சிகிச்சை அளித்தல் பற்றி மேலும் விழிப்புணர்வை ஏற்படுத்த பொதுமக்களிடையே தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள்).

**2. பரிவர்த்தனை செய்யப்பட்ட விவரங்கள்:** இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையின் கீழ், உள்நோயாளிகளின் சிகிச்சைக்கென 1410 படுக்கை வசதியுடன், மருத்துவக் கல்லூரிகள் உட்பட, 1534 மருத்துவ சிகிச்சை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் தேசிய ஆயுஷ் குழுமம் உதவியுடன் 475 இந்திய முறை மருத்துவ அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் மற்றும் 72 ஆயுஷ் நல சிகிச்சை மைய நிலையங்களும், மாவட்ட தலைமை மருத்துவமனை, வட்ட மருத்துவமனை, வட்டம் சாரா மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்களும் அடங்கும்.

நிறுவன ரீதியாகத் தகுதி பெற்ற மருந்தாளுநர் மற்றும் செவிலிய சிகிச்சையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதை நோக்கமாக கொண்டுள்ள இரண்டரை ஆண்டு ஒருங்கிணைந்த மருந்தாளுநர் பட்டயப் படிப்பு, செவிலியர் சிகிச்சை பட்டய படிப்பு ஆகிய இரண்டு பட்டயப் படிப்புகள்

அரசு சித்த மருத்துவக் கல்லூரி, சென்னை மற்றும் அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி ஆகியவற்றில் நடத்தப்பட்டு வருகின்றன.

**3. குடிமக்கள் அல்லது வாடிக்கையாளர்களின் விவரங்கள்:** பட்டப் படிப்புகள் (பி.எஸ்.எம்.எஸ். / பி.எ.எம்.எஸ். / பி.என்.ஒய்.எஸ். / பி.யு.எம்.எஸ். / பி.எச்.எம்.எஸ்.) சித்தா, ஆயுர்வேதா, யோகா, யுனானி, ஓமியோபதி ஆகிய பிரிவுகளிலும், பட்ட மேற்படிப்புகள் எம்.டி.(சித்தா), எம்.டி.(ஓமியோபதி), எம்.டி.(யோகா மற்றும் இயற்கை மருத்துவம்), சித்தா, ஓமியோபதி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் ஆகிய மருத்துவ பிரிவுகளிலும் முறையே 6 அரசு கல்லூரிகள் மற்றும் 23 சுயநிதி மருத்துவக் கல்லூரிகளின் விவரங்கள் கீழ்கண்ட அட்டவணையில் காணலாம்.

| **வ.எண்.** | **மருத்துவமுறை** | **அரசு கல்லூரிகளின் எண்ணிக்கை** | **தனியார் கல்லூரிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1 | சித்தா | 2 | 7 |
| 2 | ஆயுர்வேதா | 1 | 4 |
| 3 | யுனானி | 1 | - |
| 4 | யோகா மற்றும் இயற்கை மருத்துவம் | 1 | 7 |
| 5 | ஓமியோபதி | 1 | 9 |
| | **மொத்தம்** | **6** | **27** |

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையில் செயல்படும் அரசு கல்லூரிகள் பின்வருமாறு:

- அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி
- அரசு சித்த மருத்துவக் கல்லூரி, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகம், சென்னை
- அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகம், சென்னை
- அரசு ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரி, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி
- அரசு யுனானி மருத்துவக் கல்லூரி, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகம், சென்னை
- அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, திருமங்கலம், மதுரை

**4.** **ஒவ்வொரு குடிமகனுக்கும்/வாடிக்கையாளர்களுக்கும் தனித்தனியாகவும் எப்படி / எங்கு சேவைகளை பெறவும் வழங்கப்பட்ட தர நிலைகள், தரம், காலம் ஆகியவற்றை உள்ளடக்கிய சேவைகளின் அறிக்கை.**

**ஒருங்கிணைந்த மருத்துவமனை**
**அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை, சென்னை – 600 106**

**பணியின் தரம்**

- இம்மருத்துவமனை 310 படுக்கை வசதிகளுடன் சித்த, ஆயுர்வேத, யுனானி மற்றும் ஹோமியோபதி மருத்துவம் ஆகிய நான்கு பிரிவுகளை கொண்டது.
- இந்த மருத்துவமனையில் இலவசமாக நோயாளிகள் அனைவருக்கும் மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது.
- இங்கு நாள்பட்ட நோய்களான மூட்டுவீக்கம், பக்க வாதம், தோல் நோய்கள், மூச்சுக் குழாய் ஈளை, நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், இரைப்பை புண் ஆகியவற்றிற்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.
- சிகிச்சை பெறுவோர் அனைவரும் கவனத்துடனும், கடமை உணர்வோடும் பராமரிக்கப்படுகிறார்கள்.

**பொது தகவல்கள்:** மருத்துவர்கள் வெள்ளை நிற மேல்சட்டையுடனும், செவிலியர்கள் சீருடையிலும், தொக்கனர் நீல நிற மேல்சட்டையுடன் பணியில் உள்ளனர்.

**விசாரணை விவரங்கள்:**

- வரும் நோயாளிகளுக்கு அவர்களுக்கு தேவைப்படும் சிகிச்சைக்கேற்ப வெளி நோயாளர் சீட்டு வழங்கப்படுகிறது.
- மருத்துவமனையின் பல்வேறு பகுதிகளை காட்டுவதற்கான விளம்பர பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.
- 044-26222688 ஆகிய தொலைபேசி எண்களின் மூலம் தொடர்பு கொண்டு தேவையான தகவல்களை அறியலாம்.
- 24 மணி நேரமும் பொறுப்பு மருத்துவர் பணியில் இருப்பார்.

**புற நோயாளர் பிரிவு:**

காலை 7.30 மணி முதல் 12.00 மணி வரை

மாலை 3.00 மணி முதல் 5.00 மணி வரை

**சிறப்பு மருத்துவ சிகிச்சை:** பின்வரும் நோயாளிகளுக்கு சிறப்பு மருத்துவ சிகிச்சை சேவைஅளிக்கப்படுகிறது .

| வ. எண். | சிறப்பு மருத்துவ சிகிச்சைகள் | சிறப்பு மருத்துவ சிகிச்சை அளிக்கப்படும் நாள் |
|---|---|---|
| 1. | கணை (பிரைமரி காம்ப்ளக்ஸ்) / சரும நோய் | திங்கள் |
| 2. | நீரிழிவு நோய் | செவ்வாய் |
| 3. | இரைப்பு நோய் | புதன் |
| 4. | இரத்த அழுத்தம் | வியாழன் |
| 5. | சகனவாதம் | வெள்ளி |
| 6. | குழந்தையின்மை | சனி |
| 7. | மஞ்சள்காமாலை, எயிட்ஸ், புற்று நோய் | அனைத்து நாட்களிலும் |

**ஆராய்ச்சி:**

- சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் சித்த மருத்துவத்தில் புற்று நோய் மற்றும் எய்ட்ஸ் நோய்களுக்கு சிறப்பு பிரிவு.
- நீரிழிவு நோய் மற்றும் மகப்பேறின்மை ஆகிய ஆராய்ச்சி பிரிவுகள் உள்ளன.

**உள் நோயாளர் சிகிச்சை பிரிவு:**

- மருத்துவமனையின் பொது வார்டுகளில் அனுமதிக்கப்பட்டுள்ள அனைத்து நோயாளிகளுக்கும் இலவசமாக சிகிச்சை அளிக்கப்படுகிறது.
- பொது வார்டுகளில் அனைத்து நோயாளர்களுக்கும் இலவசமாக உணவு வழங்கப்படுகிறது.
- வேற்று மனிதர்களை அடையாளம் காண நோயாளர் அடையாளச் சீட்டு வழங்கப்படுகிறது.
- பார்வையாளர் நேரங்களில் மட்டுமே பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவர்.
- 24 மணி நேரமும் உள் நோயாளர் பிரிவில் செவிலியர் ஒருவர் பணியில் இருப்பர்.
- உள் நோயாளிகளுக்கு தேவைப்படும் யாதொரு மருத்துவ உதவியைப் பெறுவதற்கு செவிலியரை அணுக அறிவுறுத்தப்படுகிறது.

**ஆய்வுக் கூடம்:**

- உயிர் வேதியியல் ஆய்வுக் கூடம் : வார நாட்களில் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை.
- நோய் குறியியல் ஆய்வுக் கூடம் : வார நாட்களில் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை.
- ஆய்வறிக்கைகள் அவற்றின் தன்மைக்கேற்ப இயன்றவரை மிகவும் குறுகிய கால அளவில் வழங்கப்படுகிறது.

**சாதனங்களும் வசதிகளும்:** இம் மருத்துவமனையில் பின்வரும் வசதிகள் கிடைக்கும்.

ஊடு கதிர் பிரிவு : வார நாட்களில் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை

புற ஒலி வரைவியல் : வார நாட்களில் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை செயல்படுகிறது.

**அரசு சித்த மருத்துவக் கல்லூரி, சென்னையில் கிடைக்கப்பெறும் பாடப்பிரிவுகள்**

- இளநிலை பி.எஸ்.எம்.எஸ் மருத்துவப் படிப்பிற்கு ஆண்டிற்கு 60 மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகிறது.
- முதுநிலை எம்.டி. மருத்துவப் படிப்பிற்கு ஆண்டிற்கு 34 மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகிறது.

**அரசு யுனானி மருத்துவக் கல்லூரி, சென்னையில் கிடைக்கப்பெறும் பாடப்பிரிவுகள்**

- இளநிலை பி.யு.எம்.எஸ் மருத்துவப் படிப்பிற்கு ஆண்டிற்கு 60 மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகிறது.

**அரசினர் சித்த மருத்துவ கல்லூரி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி**

சித்த மருத்துவத்திற்கென தனியாக தனி மருத்துவமனை பாளையங்கோட்டையில் இயங்கி வருகிறது. 350 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை பாளையங்கோட்டை, அரசு சித்த மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**பணியின் தரம்**

- இந்த மருத்துவமனை இங்கு வருகை தரும் நோயாளிகள் அனைவருக்கும் மருத்துவ சிகிச்சை அளிக்கிறது.

- இங்கு நாள்பட்ட நோய்களான மூட்டுவீக்கம், பக்க வாதம், தோல் நோய்கள், மூச்சுக் குழாய் ஈளை, நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், இரைப்பை புண் ஆகியவற்றிற்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.
- சிகிச்சை பெறுவோர் அனைவரும் கவனத்துடனும், கடமை உணர்வோடும் பராமரிக்கப்படுவர்.

**விசாரணை விவரங்கள்:**

- மருத்துவமனையின் பல்வேறு பகுதிகளை காட்டுவதற்கான விளம்பர பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.
- 0462 - 2572736, 2572737, 2572738 ஆகிய தொலைபேசி எண்களின் மூலம் தொடர்பு கொண்டு தேவையான தகவல்களை அறியலாம்.

**புற நோயாளர் பிரிவு:**

காலை 7.30 மணி முதல் 12.00 மணி வரை

மாலை 3.00 மணி முதல் 5.00 மணி வரை

**சிறப்பு மருத்துவ சிகிச்சை:** பின்வரும் நோயாளிகளுக்கு சிறப்பு மருத்துவ சிகிச்சை சேவை அளிக்கப்படுகிறது.

| வ.எண். | சிறப்பு மருத்துவ சிகிச்சைகள் | சிறப்பு மருத்துவ சிகிச்சை அளிக்கப்படும் நாள் |
|---|---|---|
| 1. | புற்று நோய் மற்றும் எயிட்ஸ் | எல்லா நாட்களிலும் |
| 2. | தோல் நோய்கள் | செவ்வாய்கிழமை |
| 3. | நீரிழிவு நோய் மற்றும் யோகா | புதன் கிழமை |
| 4. | இரைப்பு நோய், கல்லடைப்பு | வியாழக் கிழமை |
| 5. | இரத்த அழுத்தம் | வெள்ளிக் கிழமை |
| 6. | தொக்கணம், மசாஜ், ஒத்தடம், நீராவி குளியல், வர்மம் தடவுதல், யோகாசனம் | அனைத்து நாட்களிலும் |

**உள் நோயாளர் சிகிச்சை பிரிவு:**

- மருத்துவமனையின் பொது வார்டுகளில் அனுமதிக்கப்பட்டுள்ள அனைத்து நோயாளிகளுக்கும் இலவசமாக சிகிச்சை அளிக்கப்படுகிறது.

- பொது வார்டுகளில் அனைத்து நோயாளர்களுக்கும் இலவசமாக உணவு வழங்கப்படுகிறது.
- அனுமதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நோயாளருக்கும் அவரை கவனித்து கொள்ளும் நபருக்கு ஒரு அனுமதி சீட்டு வழங்கப்படுகிறது.
- பார்வையாளர் நேரங்களில் மட்டுமே பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவர்.
- 24 மணி நேரமும் உள் நோயாளர் பிரிவில் செவிலியர் ஒருவர் பணியில் இருப்பார்.
- உள் நோயாளிகளுக்கு தேவைப்படும் யாதொரு மருத்துவ உதவியைப் பெறுவதற்கு செவிலியரை அணுக அறிவுறுத்தப்படுகிறது.

**ஆய்வுக் கூடம்:**

- உயிர் வேதியியல் ஆய்வுக் கூடம் : வார நாட்களில் காலை 7.30 மணி முதல்

பிற்பகல் 1.00 மணி வரை.

மாலை 3.00 மணி முதல் 5.00 மணி வரை

- நோய் குறியியல் ஆய்வுக் கூடம் : வார நாட்களில் காலை 7.30 மணி முதல்

பிற்பகல் 1.00 மணி வரை.

மாலை 3.00 மணி முதல் 5.00 மணி வரை

- ஆய்வறிக்கைகள் இயன்றவரை மிகவும் குறுகிய கால அளவில் வழங்கப்படுகிறது.

**சாதனங்களும் வசதிகளும்:** இம் மருத்துவமனையில் பின்வரும் சேவைகள் வழங்குகிறது.

ஊடு கதிர் பிரிவு : வார நாட்களில் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை.

புற ஒலி வரைவியல் : வாரத்தில் வெள்ளிக் கிழமை

இதய துடிப்பு பதிவி : வார நாட்களில் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை

**மருத்துவக் கல்லூரியில் கிடைக்கப்பெறும் பாடப்பிரிவுகள்**

- இளநிலை பி.எஸ்.எம்.எஸ் மருத்துவப் படிப்பிற்கு ஆண்டிற்கு 100 மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகிறது.
- முதுநிலை எம்.டி. மருத்துவப் படிப்பிற்கு ஆண்டிற்கு 60 மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகிறது.

**அரசினர் ஓமியோபதி மருத்துவ கல்லூரி, திருமங்கலம், மதுரை:** 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை, திருமங்கலம் அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**பணியின் தரம்**

- இந்த மருத்துவமனை இங்கு வருகை தரும் நோயாளிகள் அனைவருக்கும் மருத்துவ சிகிச்சை அளிக்கிறது.
- இங்கு நாள்பட்ட நோய்களான மூட்டு வீக்கம், பக்க வாதம், தோல் நோய்கள், மூச்சுக் குழாய் ஈளை, நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், இரைப்பை புண் ஆகியவற்றிற்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.
- சிகிச்சை பெறுவோர் அனைவரும் கவனத்துடனும், கடமை உணர்வோடும் பராமரிக்கப்படுவர்.

**விசாரணை விவரங்கள்:**

- மருத்துவமனையின் பல்வேறு பகுதிகளை காட்டுவதற்கான விளம்பர பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.
- 04549 - 280727ஆகிய தொலைபேசி எண்களின் மூலம் தொடர்பு கொண்டு தேவையான தகவல்களை அறியலாம்.

**புற நோயாளர் பிரிவு:**

காலை 7.30 மணி முதல் 12.00 மணி வரை

மாலை 3.00 மணி முதல் 5.00 மணி வரை

**சிறப்பு மருத்துவ சிகிச்சை:** பின்வரும் நோயாளிகளுக்கு சிறப்பு மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது.

| வ.எண். | சிறப்பு மருத்துவ சிகிச்சைகள் | சிறப்பு மருத்துவ சிகிச்சை அளிக்கப்படும் நாள் |
|---|---|---|
| 1. | கீழ் வாயு | திங்கட்கிழமை |
| 2. | குழந்தை மருத்துவம் | செவ்வாய்க்கிழமை |
| 3. | தோல் நோய் | புதன் கிழமை |
| 4. | நீரிழிவு நோய் | வியாழக் கிழமை |
| 5. | குழந்தையின்மை | வெள்ளிக் கிழமை |
| 6. | சிறுநீரக நோய்கள் | சனிக் கிழமை |

**உள் நோயாளர் சிகிச்சை பிரிவு:**

- மருத்துவமனையின் பொது வார்டுகளில் அனுமதிக்கப்பட்டுள்ள அனைத்து நோயாளிகளுக்கும் இலவசமாக சிகிச்சை அளிக்கப்படுகிறது.
- பொது வார்டுகளில் அனைத்து நோயாளர்களுக்கும் இலவசமாக உணவு வழங்கப்படுகிறது.
- பார்வையாளர் நேரங்களில் மட்டுமே பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவர்.
- 24 மணி நேரமும் உள் நோயாளர் பிரிவில் செவிலியர் ஒருவர் பணியில் இருப்பார்.
- உள் நோயாளிகளுக்கு தேவைப்படும் யாதொரு மருத்துவ உதவியைப் பெறுவதற்கு செவிலியரை அணுக அறிவுறுத்தப்படுகிறது.

**ஆய்வுக் கூடம்:**

- உயிர் வேதியியல் ஆய்வுக் கூடம் : வார நாட்களில் காலை 7.30 மணி முதல்

பிற்பகல் 1.00 மணி வரை.

- நோய் குறியியல் ஆய்வுக் கூடம் : வார நாட்களில் காலை 7.30 மணி முதல்

பிற்பகல் 1.00 மணி வரை.

- ஆய்வறிக்கைகள் இயன்றவரை மிகவும் குறுகிய காலத்தில் வழங்கப்படுகிறது.

**சாதனங்களும் வசதிகளும்:** இம் மருத்துவமனையில் பின்வரும் வசதிகள் கிடைக்கும்.

ஊடு கதிர் பிரிவு : வார நாட்களில் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை.

புற ஒலி வரைவியல் : வாரத்தில் வெள்ளிக் கிழமை

இதய துடிப்பு பதிவி : வார நாட்களில் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை

**மருத்துவக் கல்லூரியில் கிடைக்கப்பெறும் பாடப்பிரிவுகள்**

- இளநிலை பி.எச்.எம்.எஸ். மருத்துவப் படிப்பிற்கு ஆண்டிற்கு 50 மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகிறது.

**அரசினர் ஆயுர்வேதா மருத்துவ கல்லூரி, கோட்டார், நாகர்கோவில்:** 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை, கோட்டார் நாகர்கோவில், அரசு ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**பணியின் தரம்**

- இந்த மருத்துவமனை இங்கு வருகை தரும் நோயாளிகள் அனைவருக்கும் மருத்துவ சிகிச்சை அளிக்கிறது.
- இங்கு நாள்பட்ட நோய்களான மூட்டுவீக்கம், பக்க வாதம், தோல் நோய்கள், மூச்சுக் குழாய் ஈளை, நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், இரைப்பை புண் ஆகியவற்றிற்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.
- இங்கு குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய சுவாச கோளாறுகள், செரிபெரல் பால்சி, ஆட்டிசம், டவுன்சின்ரோம் ஆகியவற்றிற்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.
- சிகிச்சை பெறுவோர் அனைவரும் கவனத்துடனும், கடமை உணர்வோடும் பராமரிக்கப்படுவர்.

**விசாரணை விபரங்கள்:**

- மருத்துவமனையின் பல்வேறு பகுதிகளை காட்டுவதற்கான விளம்பர பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.
- 04652 – 240948 ஆகிய தொலைபேசி எண்களின் மூலம் தொடர்பு கொண்டு தேவையான தகவல்களை அறியலாம்.

Website:- www.gamchnagercoil.com.

**புற நோயாளர் பிரிவு:**

காலை 7.30 மணி முதல் 12.00 மணி வரை

மாலை 3.00 மணி முதல் 5.00 மணி வரை

**சிறப்பு மருத்துவ சிகிச்சை:** பின்வரும் நோயாளிகளுக்கு சிறப்பு மருத்துவ சிகிச்சை சேவைஅளிக்கப்படுகிறது .

| வ.எண். | சிறப்பு மருத்துவ சிகிச்சைகள் | சிறப்பு மருத்துவ சிகிச்சை அளிக்கப்படும் நாள் |
|---|---|---|
| 1. | மூலம், பௌத்ரம் | திங்கள், புதன், வெள்ளி |
| 2. | எலும்பு முறிவு மற்றும் மூட்டு விலகல் | செவ்வாய், வியாழன், சனி |

**உள் நோயாளர் சிகிச்சை பிரிவு:**

- உள் நோயாளிகளுக்கு ஆயுர்வேதா சிறப்பு சிகிச்சை முறைகளாகிய பஞ்சகர்மா, அக்னிகர்மா, ஷாரகர்மா ஆகியவை இலவசமாக அளிக்கப்படுகிறது.
- மருத்துவமனையின் பொது வார்டுகளில் அனுமதிக்கப்பட்டுள்ள அனைத்து நோயாளிகளுக்கும் இலவசமாக சிகிச்சை அளிக்கப்படுகிறது.
- பொது வார்டுகளில் அனைத்து நோயாளர்களுக்கும் இலவசமாக உணவு வழங்கப்படுகிறது.
- பார்வையாளர் நேரங்களில் மட்டுமே பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவர்.
- 24 மணி நேரமும் உள் நோயாளர் பிரிவில் செவிலியர் ஒருவர் பணியில் இருப்பார்.
- உள் நோயாளிகளுக்கு தேவைப்படும் யாதொரு மருத்துவ உதவியைப் பெறுவதற்கு செவிலியரை அணுக அறிவுறுத்தப்படுகிறது.

**ஆய்வுக் கூடம்:**

- உயிர் வேதியியல் ஆய்வுக் கூடம் : வார நாட்களில் காலை 7.30 மணி முதல்

பிற்பகல் 1.30 மணி வரை.

- நோய் குறியியல் ஆய்வுக் கூடம் : வார நாட்களில் காலை 7.30 மணி முதல்

பிற்பகல் 1.30 மணி வரை.

- ஆய்வறிக்கைகள் இயன்றவரை மிகவும் குறுகிய கால த்தில் வழங்கப்படுகிறது

**மருத்துவக் கல்லூரியில் கிடைக்கப்பெறும் பாடப்பிரிவுகள்**

- இளநிலை பி.ஏ.எம்.எஸ் மருத்துவப் படிப்பிற்கு ஆண்டிற்கு 60 மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகிறது.

**அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவனை, அரும்பாக்கம், சென்னை – 600 106:** 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை, சென்னை, அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**பணியின் தரம்**

- இந்த மருத்துவமனை இங்கு வருகை தரும் நோயாளிகள் அனைவருக்கும் மருத்துவ சிகிச்சை அளிக்கிறது.

- இங்கு தோல் நோய்கள், ஒவ்வாமை, உயர் அழுத்தம், கழுத்து மற்றும் முதுகுவலி பிரச்சினைகள், நீரிழிவு நோய், மன அழுத்தம், மலச்சிக்கல், கிட்டப் பார்வை, தூரப் பார்வை, தைராய்டு பிரச்சினை, முடி உதிர்தல், உயர் ரத்த அழுத்தம், இரைப்பைப் புண் ஆகியவற்றிற்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.
- இங்கு யோகா சிகிச்சை, உணவு சிகிச்சை, காந்த சிகிச்சை, அக்குப்பஞ்சர், அக்குப்பிரசர், மசாஜ் சிகிச்சை, நீர் சிகிச்சை (நீராவி குளியல், இடுப்பு குளியல், முதுகெலும்பு குளியல்), மண் சிகிச்சை, நிறச் சிகிச்சை போன்ற பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப் படுகிறது.
- சிகிச்சை பெறுவோர் அனைவரும் கவனத்துடனும், கடமை உணர்வோடும் எவ்வித பாகுபாடுன்றி பராமரிக்கப்படுவர்.

**விசாரணை விவரங்கள்**

- மருத்தவனையின் பல்வேறு பகுதிகளை காட்டுவதற்கான விளம்பர பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.
- 044 – 26222516 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தேவையான தகவல்களை அறியலாம்.

**மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள சேவைகள்**

**புற நோயாளர் பிரிவு**

- காலை 7.30 மணி முதல் 12.00 மணி வரை

மாலை 3.00 மணி முதல் 5.00 மணி வரை

**பொது மக்களுக்கான இலவச ஆலோசனை வகுப்புகள்:**

- ஒவ்வொரு வாரமும் இங்கு திங்கள் முதல் வெள்ளி வரை (அரசு விடுமுறை நாட்கள் தவிர) காலை 11.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை உடல் நலம் பற்றிய வெவ்வேறு தலைப்புகளில் விழிப்புணர்வு ஏற்படும் வகையில் பொது மக்களுக்கு ஆலோசனை வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

**பொதுமக்களுக்கன இலவச யோகா வகுப்புகள்**

- பொதுமக்களுக்கு யோகா வகுப்புகள் இம் மருத்துவமனையின் யோகா அறையில் வாரத்தில் ஏழு நாட்களிலும் நடத்தப்படுகின்றன.

**ஆய்வுக் கூடம்**

- உயிர் வேதியியல் ஆய்வுக்கூடம் : வார நாட்களில் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை

- நோய் குறியியல் ஆய்வுக்கூடம் : வார நாட்களில் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை

- ஆய்வறிக்கைகள் இயன்றவரை மிகவும் குறுகிய காலத்தில் வழங்கப்படுகிறது.

**பின்வரும் பல்வேறு துறைகள் இம் மருத்துவமனையில் செயல்படுகின்றன.**

1. இயற்கை மருத்துவத் துறை
2. உபவாசம் மற்றும் ஊட்டவியல் மருத்துவத் துறை
3. யோகா மருத்துவத் துறை
4. நீர் சிகிச்சை மருத்துவத் துறை
5. மசாஜ் மற்றும் ரிப்ளக்ஸ் மருத்துவத் துறை
6. மனித உடற்கூறியியல் மருத்துவத் துறை
7. மனித உடலியல் மருத்துவத் துறை
8. உயிர் வேதியியல் மருத்துவத் துறை
9. சமுக மற்றும் தடுப்பு மருத்துவத் துறை
10. நோயியல் மருத்துவத் துறை
11. நுண் உயிரியல் மருத்துவத் துறை
12. நோயறியும் மருத்துவத் துறை
13. சூல் மற்றும் மகளிர் மருத்துவத் துறை
14. தடயவியல் மருத்துவத் துறை

**வெளி பயிற்சி முகாம்கள்:**

- காவலர் பயிற்சி மையம், சென்னையில் தனியாக யோகா வகுப்பு நடத்தப் படுகிறது.

- அலோபதி மருத்துவர்களுக்கு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, எழும்பூர், சென்னையில் யோகா பயிற்சி அளிக்கப்படுகிறது.

- யோகா மற்றும் இயற்கை மருத்துவ பயிற்சி ஆயுஷ் மருத்துவர்களுக்கு பொது சுகாதார நிலையம், பூவிருந்தவல்லி, சென்னையில் அளிக்கப் படுகிறது.

- சிறப்பு யோகா மற்றும் இயற்கை மருத்துவ பயிற்சி பொதுமக்கள், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படுகிறது.

**மருத்துவக் கல்லூரியில் கிடைக்கப்பெறும் பாடப்பிரிவுகள்:**

- இளநிலை யோகா மற்றும் இயற்கை மருத்துவப் படிப்பிற்கு ஆண்டிற்கு 60 மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகிறது. – 5½ ஆண்டுகள் இடைவெளி
- முதுநிலை யோகா மற்றும் இயற்கை மருத்துவப் படிப்பிற்கு ஆண்டிற்கு 15

மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகிறது. - மூன்று ஆண்டுகள் இடைவெளி

**இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவமனைகளில் நோயாளிகளின் உரிமைகள்**

- நோயாளருக்கு மருத்துவம் செய்ய மருத்துவர் மருத்துவமனையில் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் பணியில் இருப்பார்.
- மருத்துவமனைக்குள் வந்த அரை மணி நேரத்தில் நோயாளர் பரிசோதிக்கப்பட்டு மருந்துகள் வழங்கப்படும்.
- நோயாளருக்கு அன்புடனும் கவனத்துடனும் சிகிச்சை அளிக்கப்படும்.
- மருத்துவர் நோயாளரின் நோய்த் தன்மை மற்றும் மருத்துவ முறைகள் பற்றிய முழு விபரங்களையும் கூறி நோயாளரிடம் கொடுக்கப்படும் சீட்டில் மருந்துகள் பற்றிய விபரம், உண்ணும் அளவு ஆகியவை தெளிவாக எழுதிக் கொடுக்கப்படும். நோயாளருக்கு நம்பிக்கை உண்டாக்கி மருத்துவம் செய்யப்படுகிறது.
- சிறந்த மருத்துவ சிகிச்சையைக் நோயாளிகளுக்கு வழங்குவதுடன் நம்பிக்கையூட்டி விரைவில் குணம் பெற உதவப்படுகிறது.
- ஒவ்வொரு நோயாளிக்கும் மற்ற மருத்துவர்களை அனுகுவதற்கான உரிமை இருப்பதால் கூடுதல் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் எந்த தாமதமும் இல்லாமல் மற்ற மருத்துவமனைகளுக்கு பரிந்துரைக்கப்படுவார்கள்.
- மருத்துவமனை ஊழியர்கள் நோயாளருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைக்காக பணமோ, அன்பளிப்போ, நோயாளரிடமிருந்தோ அவர் தம் உறவினரிடம் இருந்தோ பெறுவதில்லை.

**தரமான மருந்துகள் உற்பத்தி:** தரமான மூலிகைகளைக் கொண்டு தரமான மருந்துகள் தயார் செய்யப்பட்டு வருகின்றது.

தரமான மருந்துகளைத் தயாரித்து நோயாளிகளுக்கு இலவசமாக வழங்கும் வகையில் அரசு, சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையுடன் இணைக்கப்பட்ட மருந்து செய்நிலையம், பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட மருந்து செய்நிலையம் ஆகிய இரண்டு இந்திய மருத்துவமுறை மருந்து செய்நிலையங்களை ஏற்படுத்தி மருந்துகளை தயார்செய்து இந்திய முறை மருத்துவ மனைகளுக்கு வழங்குகிறது. பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட மருந்து செய்நிலையத்தில் சித்த மருந்துகளும் தயாரிக்கப்படும் பொழுது சென்னை அறிஞர் அண்ணா

அரசினர் இந்திய மருத்துவமனையுடன் இணைக்கப்பட்ட மருந்து செய்நிலையத்தில் சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

**மருந்து தரக் கட்டுப்பாடு (இம) / மாநில மருந்து உரிமம் வழங்குதல் (இம):** மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம் 1940 மற்றும் அதன் விதிகளை நடைமுறைப்படுத்தவும் தரமான மருந்துகளை உற்பத்தி செய்யவும், மாநில உரிமம் வழங்கும் அலுவலர் அலுவலகம் (இம) மற்றும் மருந்து ஆய்வகம் இந்தியமுறை மருந்துகளுக்காக உருவாக்கப்பட்டுள்ளது.

மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம் 1940 இந்திய மருத்துவத்திற்கென நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. அதற்காக இந்திய முறை மருந்துகளுக்கு உரிமம் வழங்கும் அலுவலரையும், மாவட்ட சித்த மருத்துவர்களை மாவட்ட மருந்தாய்வாளர்களாகவும் அரசு நியமித்துள்ளது. தற்போது இந்தியமுறை மருந்துகளுக்கு உரிமம் வழங்கும் அலுவலகம் தனியே தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**மருந்து பரிசோதனைக் கூடம் (இந்திய மருத்துவம்):** மாநில மருந்து சோதனை ஆய்வுக் கூடம் (இம) மருந்து மற்றும் அழகு சாதன சட்டம் 1940ல் உள்ள பிரிவு IVA அமுல்படுத்த உருவாக்கப்பட்டது. இதன்படி மக்களுக்கு தரமான இந்திய முறை மருந்துகள் பெற வழி செய்கிறது. மாநில மருந்து சோதனை ஆய்வுக் கூடம் சட்டபூர்வமான அங்கீகாரம் அரசு ஆணை (நிலை) எண். 8, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை , நாள். 12.01.2010-ல் கிடைக்கப் பெற்றது.

இவ் ஆய்வகத்தின் தலையாய கடமை யாதெனில் மருந்து மற்றும் அழகு சாதன சட்டம் பிரிவு 33Gயில் அங்கீகரிக்கப்பட்ட மருந்து ஆய்வாளர்களால் எடுக்கப்படும் மருந்து மாதிரிகளை ஆய்வு செய்து அதன் அறிக்கை அனுப்புவதாகும். இந்த ஆய்வகம் பல்வேறு வகையான நவீன கருவிகள் கொண்டு மருந்து சோதனை செய்து அதன் தரத்தினை உறுதி செய்கிறது.

## 5. குறை தீர்க்கும் வழிமுறை மற்றும் அதை எவ்வாறு அனுகுவது என்ற விவரங்கள்

- பொதுமக்கள் நிகழ்நிலை மனுக்கள் (ஆன்லைன் பெட்டிசன்) மற்றும் தபால் மூலம் முதலமைச்சரின் சிறப்பு பிரிவிற்கு புகார்கள்தெரிவிப்பார்கள். புகார்தாரருக்கு உரிய பதில் நிகழ்நிலை (ஆன்லைன்) மற்றும் தபால் மூலமும் முதலமைச்சரின் சிறப்பு பிரிவிற்கும் தெரிவிக்கப்படும்.
- பொது மக்கள் அம்மா அழைப்பு மையத்தில் உபயோகப்படுத்தப்படும் கட்டணமில்லா எண். 1100 மூலம் கேட்கப்படும் ஆலோசனைகள் / புகார்களுக்கு விரைவில் நிவர்த்தி செய்யப்படுகிறது.
- ஒவ்வொரு இந்திய மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைகளில் புகார் பெட்டி வைக்கப்பட்டுள்ளது.

**6. குடிமக்கள் அல்லது பயனாளிகளின் எதிர்பார்ப்புகள்:** குடிமக்கள் அல்லது வாடிக்கையாளர்கள், மாநிலத்தில் இந்திய முறை மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகள் அதிகமாக திறக்க எதிர்பார்க்கின்றனர்.

**7. சேவை வழங்குதலில் தோல்வி ஏற்பட்டால் இழப்பீடு போன்ற கூடுதல் பொறுப்புகள்:** இந்த துறைக்கு பொருந்தாது.

## அத்தியாயம் - 7

## தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு துறை

**முன்னுரை:** உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய சட்டம் 2006 ஆனது உணவுக் கலப்பட தடுப்புச் சட்டம் 1954 மற்றும் உணவுத் தொடர்பான ஏழு சட்டங்களையும் ஒருங்கிணைப்பதன் மூலம் இயற்றப்பட்டது. இச்சட்டம் இந்திய உணவுப் பாதுகாப்பு தரநிர்ணய ஆணையம் உருவாக வழிவகுத்தது. உணவுப் பொருட்களுக்கான அறிவியல் அடிப்படையிலான தரங்களை நிர்ணயம் செய்யவும், உற்பத்தி, சேமிப்பு, விநியோகம், விற்பனை மற்றும் நாட்டில் மனித நுகர்வுக்குப் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான உணவுக் கிடைப்பதை உறுதி செய்வதற்கான இறக்குமதி, போன்றவற்றை கண்காணிக்கும் அதிகாரம்மிக்க தேசிய நிறுவனமாக இந்திய உணவுப் பாதுகாப்புத் தரநிர்ணய ஆணையம் உள்ளது. இந்தச் சட்டம் 2011 ஆகஸ்ட் 5 முதல் இந்தியா முழுவதும் நடைமுறைக்கு வந்தது.

தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை 22.12.2011 முதல் ஏற்படுத்தப்பட்டு உணவு பாதுகாப்பு தர நிர்ணய சட்டம் மற்றும் விதிகளை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தி வருகிறது.

### 1. அமைப்பின் தொலைநோக்கு பார்வை மற்றும் திட்டம்:

**பார்வை:** உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணயச் சட்டம் 2006 மற்றும் விதிகள் 2011 மற்றும் இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம் அவ்வப்போது வழங்கும் விதிமுறைகள் ஆகியவற்றால் பரிந்துரைக்கப்பட்டப் பாதுகாப்புத் தரங்களின்படி அனைவருக்கும் உணவுக் கிடைப்பதை உறுதி செய்வதே இத்துறையின் பிரதான நோக்கமாகும்.

**திட்டம்:** உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணயச் சட்டம் 2006 மற்றும் விதிகள் 2011, இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தால் அவ்வப்போது வழங்கப்பட்ட விதிமுறைகள் அனைத்தையும், மாவட்டங்களில் செயல்படுத்தி கண்காணிப்பதன் மூலம் தமிழகத்தில் அனைவருக்கும் பாதுகாப்பான உணவை உறுதி செய்தல்.

- கள அளவிலான ஊழியர்களுக்குப் பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு.
- 100% உணவு வணிகர்களின் உரிமம்/பதிவை உறுதி செய்தல்.
- பாதுகாப்பான உணவு மற்றும் ஊட்டச்சத்துக் குறித்து ஒவ்வொரு பங்குதாரர்களிடமும் விழிப்புணர்வு உருவாக்குதல்.

**2. நிறுவனத்தால் பரிவர்த்தனை செய்யப்பட்ட வணிக விவரங்கள்:** இத்துறை உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்களின் தலைமையில் செயல்படுகிறது. அவருக்கு உதவிபுரிய இயக்குநர் மற்றும் கூடுதல் ஆணையர், மற்ற துணை ஊழியர்கள் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும்,

32 நியமன அலுவலர்கள் மற்றும் 584 உணவுப் பாதுகாப்பு அலுவலர்கள் (ஊராட்சி ஒன்றிய அளவில் 385 மற்றும் நகர்புறங்களுக்கு 199) இச்சட்டத்தைச் செயல்படுத்த நியமிக்கப்பட்டுள்ளனர். சென்னை,

தஞ்சாவூர், மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் பாளையங்கோட்டை ஆகிய 6 இடங்களில் உணவுப் பகுப்பாய்வு ஆய்வகங்கள் நிறுவப்பட்டு உணவு மாதிரிகள் பரிசோதிக்க உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட உணவு வணிகர்கள் சிவில் வழக்குகளுக்கு எதிராக மேல்முறையீடு செய்ய மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் நிறுவப்பட்டுள்ளது.

இத்துறையின் பொதுவான செயல்பாடு, உணவு வணிகத்தில் தரத்தை உறுதி செய்வதும், பாதுகாப்பான மற்றும் தரமான உணவு நுகர்வோருக்குக் கிடைப்பதை உறுதி செய்வதும், உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணயச் சட்டம் 2006ஐ நடைமுறைப்படுத்துவது ஆகும்.

**3. குடிமக்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் விவரங்கள்:** உணவு வணிகர்கள் மற்றும் நுகர்வோர்கள் ஆகியோர் இத்துறையின் வாடிக்கையாளர்கள் ஆவார்.

**4. ஒவ்வொரு குடிமகனுக்கும் / வாடிக்கையாளர் குழுவிற்கும் தனித்தனியாக வழங்கப்படும் தரங்கள், தரம், கால அளவு போன்றவை உள்ளிட்ட சேவை அறிக்கை மற்றும் சேவையை எவ்வாறு / எங்கு பெறுவது:**

**உணவு வணிகர்களுக்கு வழங்கப்படும் உரிமம் மற்றும் பதிவு சான்று:-**

- உரிமம் / பதிவு சான்றிதழைப் பெற அனைத்து உணவு வணிகர்களிடையே விழிப்புணர்வு உருவாக்குதல்.
- உணவு வணிகர்களுக்கு உரிமம் மற்றும் பதிவு வழங்குதல்.
- இணையம் மூலம் உரிமம் / பதிவுச் சான்றிதழ் வழங்குதல்.

**அமலாக்க நடவடிக்கைகள்:**

- உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம் 2006 மற்றும் விதிகளை நடைமுறைப்படுத்துதல்
- அனைத்து உற்பத்தி இடங்கள் சேமிப்பு இடங்கள் சில்லரை விற்பனை நிலையங்களில் அவ்வப்போது ஆய்வுகள் செய்தல்.
- சட்ட மாதிரி / கண்காணிப்பு மாதிரிகள் எடுத்து உணவு பகுப்பாய்வு கூடங்களுக்கு அனுப்பி ஆய்வுக்கு உட்படுத்தி உணவு பொருட்களின் தரத்தை உறுதி செய்தல்.
- உணவு பகுப்பாய்வு கூடங்களில் பெறப்பட்ட ஆய்வறிக்கைகளின் அடிப்படையில் சிவில் அல்லது குற்ற வழக்குகள் என சட்ட நடவடிக்கைகளை செயல்படுத்துதல்.

**மேல்முறையீட்டு தீர்ப்பாயம்:**

- மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் சம்பந்தப்பட்ட உணவு வணிகர்கள் சிவில் வழக்குகளில் மேல்முறையீடு செய்யலாம்.

**உணவு பகுப்பாய்வகங்கள்:**

- உணவு பாதுகாப்பு அலுவலர்களால் அனுப்பப்படும் கண்காணிப்பு மற்றும் சட்ட மாதிரிகளை ஆய்வு செய்தல்.
- சமூக நலத்துறை, சிவில் சப்ளை, ரயில்வே போன்ற பிற துறைகள் அனுப்பும் உணவு மாதிரிகளை பரிசோதித்தல்.
- நுகர்வோர் அனுப்பும் உணவு மாதிரிகளை சோதனை செய்தல்.
- ஆய்வக சோதனை விவரங்களை இந்திய உணவு ஆய்வக நெட்வொர்க் சிஸ்டத்தில் (INFoLNET) பதிவேற்றுதல்.

**தகவல், கல்வி, தொடர்பு மற்றும் விழிப்புணர்வு:**

- அனைத்து பங்குதாரர்கள், பொது மக்கள் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ / மாணவிகள், சுய உதவி குழுக்கள் போன்ற அனைவரிடையேயும் பாதுகாப்பான மற்றும் ஊட்டச்சத்து போன்றவை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- நுகர்வோர் குறைகளை நிவர்த்தி செய்வது, புகாரின் மீது உரிய நடவடிக்கை எடுத்தல்.
- உணவு பாதுகாப்பு விழிப்புணர்வு திட்டங்களை நடைமுறைபடுத்துதல் - துரித முறைகள் மூலம் கலப்படத்தை கண்டறிதல், (DART), பள்ளிகளில் பாதுகாப்பான மற்றும் சத்தான உணவு திட்டம் (SNF @ School), 130 சுற்றுலா தலங்களில் உணவு பாதுகாப்பு மையங்கள் நிறுவுதல்.

## 5. குறை தீர்க்கும் நெறிமுறையின் விவரங்கள் மற்றும் அதை எவ்வாறு அணுகுவது:

**குறைகளை நிவர்த்தி செய்தல்:** நுகர்வோர்களிடமிருந்து பெறப்படும் பாதுகாப்பற்ற, தரமற்ற உணவுப் பொருட்கள் தொடர்பான புகார்களை கையாள, குறை / புகார் தீர்க்கும் முறை முக்கியமானது. இத்துறையானது ஒரு தனி மின்னஞ்சல் முகவரி unnavupukar@gmail.com மற்றும் ஒரு வாட்ஸ்அப் மொபைல் எண். 9444042322 யை பயன்படுத்தி நுகர்வோர் புகார் தீர்க்கும் முறையை உருவாக்கியுள்ளது. அவைகளை செய்தித்தாள்கள், பொது ஊடகங்கள் மற்றும் அனைத்து வகையிலும் மக்களை சென்றடைய பிரபலப்படுத்தப்பட்டு வருகின்றன. பெறப்பட்ட எந்தவொரு புகாரும் 24 / 48 மணி நேரத்திற்குள் உரிய நடவடிக்கை எடுத்து, எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி புகார் அளித்தவருக்கு தெரிவிக்கப்படும்.

**6.** **'குடிமக்கள்' மற்றும் 'வாடிக்கையாளர்களிடமிருந்து' எதிர்பார்ப்புகள்:**

- உணவு வணிகர்கள் இந்திய உணவு பாதுகாப்பு தர நிர்ணய ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட தரங்களை பின்பற்ற வேண்டும்.
- நுகர்வோர்கள் ஆரோக்கியமான, பாதுகாப்பான, செறிவூட்டப்பட்ட உணவையே உண்ண வேண்டும்.

**7.** **சேவை வழங்கல் தோல்வியுற்றால் இழப்பீடு போன்ற கூடுதல் கடமைகள்:**

- இது இத்துறைக்கு பொருந்தாது.

# அத்தியாயம் - 8

## மருந்து கட்டுப்பாட்டு நிர்வாகத் துறை

### 1. அமைப்பின் பார்வை மற்றும் பணி அறிக்கை

**தொலை நோக்கு:** தரமான மற்றும் பாதுகாப்பான மருந்துகள் சரியான விலையில் மக்களுக்கு கிடைக்குமாறு உறுதிப்படுத்துதல்.

**பணி**

- மருந்து கட்டுப்பாட்டு துறையானது சுகாதார சேவை கட்டுபாடுகள் ஆதரவு அளிப்பதிலும், நம் சமூக பாதுகாப்பு அதிகரிப்பிலும் மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது.
- மருந்து கட்டுப்பாட்டு துறை சட்டப்பூர்வ அமைப்பாக இருப்பதால், போலி / கலப்பட / தரமற்ற மருந்துகள் தயாரித்த, மருந்துகளை அதிக விலைக்கு விற்ற, தவறான விளம்பரங்கள் பரப்பிய சில தயாரிப்பாளர்கள் மற்றும் டீலர்களால் ஏற்படும் மிகப் பெரிய சவால்களை எதிர் கொள்கிறது.
- இத்துறை மக்களின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு தரமான, பாதுகாப்பான, திறன் மற்றும் பகுத்தறிவு பயன்பாடுடைய மருந்துகளை கட்டுப்படுத்தப்பட்ட விலையில் வழங்குதல், இரத்தம் மற்றும் இரத்த பொருட்கள் பாதுகாப்பான முறையில் சேகரிப்பு மற்றும் வழங்குதல், மற்றும் தவறான முறையில் விளம்பரப்படுத்துதல் போன்றவைகளை கண்காணித்து வருகிறது.
- மருந்து மற்றும் அழகு சாதனப் பொருட்களின் தரம், துய்மை மற்றும் பாதுகாப்பு ஆகியவை அறிவதற்காக அவற்றின் மாதிரிகள் எடுக்கப்பட்டு பகுப்பாய்விற்கு உட்படுத்தப்படுகிறது. இவ்வாறு பகுப்பாய்வு இத்துறையின் கீழ் அனைத்து வசதிகளுடன் கூடிய ஆய்வுக் கூடம் உள்ளது.
- திறனான மற்றும் தொழில் முறை ஒருமைப்பாடு உடைய அர்ப்பணிப்பு உணர்வுள்ள பணியாளர்கள் இத்துறையில் உள்ளனர்.
- தரமான மருந்துகள் பொதுமக்களுக்கு கிடைக்கச் செய்தல், மற்றும் போலி மற்றும் தரம் குறைந்த மருந்துகள் இல்லா சந்தை உருவாக்குதல் மற்றும் மருந்துகள் சரியான விலையில் கிடைக்க பெற செய்வதை உறுதிபடுத்துதல் என்பன இத்துறையின் கடமை ஆகும்.

## 2. இந்த அமைப்பின் வியாபார பரிவர்த்தனை விவரங்கள்

### a) தயாரிப்பு மற்றும் இரத்த வங்கி சேவைகள்

1. அலோபதி மருந்துகள் தயாரிப்பதற்கான உரிமங்கள்

   மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஆய்வுக்கூட சோதனை முறையில் கண்டறிய உதவும் சாதனங்கள் தயாரிப்பதற்கான உரிமங்கள்,

2. ஹோமியோபதி மருந்துகள் தயாரிப்பதற்கான உரிமங்கள்
3. அழகு சாதனப்பொருட்கள் தயாரிப்பதற்கான உரிமங்கள்
4. ஆய்வுக்கூட அனுமதி பெறுவதற்கான உரிமங்கள்
5. இரத்தவங்கி இயக்குவதற்கான உரிமங்கள்/விற்பனைக்காக அல்லது விநியோகிப்பதற்காக உள்ள இரத்தப் பொருட்கள் தயாரிப்பு மற்றும் சேமிப்பதற்கான உரிமங்கள் / தொப்புள் கொடி தண்டு உயிரணுக்கள் இரத்த வங்கி.
6. இரத்த சேமிப்பு மையங்களுக்கு ஒப்புதல்
7. இரத்த தான முகாம்கள் நடத்த ஒப்புதல்
8. பல்வேறு உரிமங்களில் கூடுதல் தொழில்நுட்ப பணியாளர்கள் சேர்ப்பதற்கான ஒப்புதல்
9. பல்வேறு உரிமங்களில் கூடுதல் பொருள் (மருந்துகள்) சேர்ப்பதற்கான ஒப்புதல்
10. நகல் உரிமங்கள்
11. சான்றிதழ்கள்.

### b) விற்பனை சேவைகள்

- அலோபதி மருந்துகள் விற்பனை செய்வதற்கான உரிமங்கள்
- ஹோமியோபதி மருந்துகள் விற்பனை செய்வதற்கான உரிமங்கள்
- உரிமங்களின் நகல் வழங்குதல்

### c) அமல்படுத்தப்படும் முக்கிய சட்டங்கள் மற்றும் விதிகள்

- மருந்து மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம், 1940 மற்றும் மருந்து மற்றும் அழகு சாதன பொருட்கள் விதிகள் 1945
- மருத்துவ சாதனங்கள் விதிகள் 2017

- புதிய மருந்துகள் மற்றும் கிளினிக்கல் டிரையல் விதிகள் 2019
- மருந்துகள் மற்றும் மாய சிகிச்சைகள் ( ஆட்சேபிக்கத்தக்க விளம்பரங்கள்) சட்டம் 1954 மற்றும் விதிகள் 1955
- மருந்துகள் விலை கட்டுப்பாடு ஆணை 2013
- போதை மருந்துகள் மற்றும் மனோவியல் பொருட்கள் சட்டம் 1985

**3. குடிமக்கள் அல்லது வாடிக்கையாளர்களின் விவரங்கள்**

- மருந்து தயாரிப்பாளர்கள்
- மொத்த மற்றும் சில்லரை மருந்து விற்பனையாளர்கள்
- குடிமக்கள்

**4. இத்துறையின் சார்பாக வழங்கப்படும் சேவைகளின் தரம், காலக்கெடு மற்றும் ஒவ்வொரு குடிமகன்/வாடிக்கையாளர் தனித்தனியே எப்படி/எங்கே பெறப்படும் என்பதற்கான விளக்கங்கள்.**

**இத்துறை சார்பாக வழங்கப்படும் சேவைகளின் விவரங்கள்.**

உரிமம் பெற்ற மருந்து மற்றும் அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பாளர்கள், இரத்த வங்கிகள், ஒப்புதல் பெற்ற ஆய்வுக் கூடங்கள், தடைசெய்யப்பட்ட மருந்துகள், தரம் குறைந்த மருந்துகளின் விவரங்கள்.

a) **உரிமங்களின் விவரங்கள்**

1 உற்பத்தியாளர்கள் மருந்துகள், அழகு சாதனப்பொருட்கள், ஹோமியோபதி மருந்துகள் தடுப்பூசிகள், மருந்துவ உபகரணங்கள், பெரிய அளவிலான பேரண்டல்ஸ், ரீபேக்கிங் உரிமங்கள்

2 ஒப்புதுல் பெற்ற ஆய்வுக்கூடம்

3 இரத்த சேமிப்பு மையம்

4 பதிவு பெற்ற மருத்துவ நிறுவனங்களின் பட்டியல்

b) தடைசெய்யப்பட்ட மருந்துகளின் விவரங்கள்

c) கெமிஸ்ட் மற்றும் டிரக்கிஸ்ட்களின் மீது பெறப்படும் புகார்களின் அடிப்படையிலான விசாரணை விவரங்கள்

d) மருந்துகளின் தரம் மற்றும் பாதகமான எதிர்விளைவுகளின் பேரில் பெறப்படும் புகார்களின் அடிப்படையிலான விசாரணை விவரங்கள்

e) மருந்து விலை கட்டுப்பாடு ஆணையில் (DPCO 2013) அறிவிக்கப்பட்டிருக்கும் விலையை விட அதிக விலையில் மருந்துகளை விற்பனை செய்ததாக பெறப்பட்ட புகார்களின் பேரில் செய்யப்பட்ட விசாரணை விவரங்கள்.

f) தகவலறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் விவரங்கள்

g) மருந்து மற்றும் மாய சிகிச்சைகள் (ஆட்சேபிக்கத்தக்க விளம்பரங்கள் ) சட்டத்தை 1954-மீறி செய்யப்படும் மருந்து விளம்பரங்கள் மீதான புகார்களின் பேரில் செய்யப்படும் விசாரணை விவரங்கள்.

h) அரசு பகுப்பாய்வாளர், மருந்தாய்வுக்கூடம், சென்னை-6 அவர்களால் வழங்கப்பட்ட பகுப்பாய்வு அறிக்கைகளின் பேரில் பெறப்பட்ட தரம் குறைந்த மருந்துகள் / அழகு சாதனப் பொருட்கள் / மருத்துவ உபகரணங்களின் விவரங்கள்.

**எங்கள் சேவைகளின் தரங்கள்:** இத்துறையின் சேவைகளை வழங்குவதற்கு பின்வருமாறு இலக்குகள்/ தரம்/பதில் நேரம் வகுத்துள்ளோம்.

| வ. எண் | சேவைகளின் விவரம் | பதில் அளிப்பதற்கான காலக்கெடு | அணுக வேண்டிய அலுவலரின் விவரம் |
|---|---|---|---|
| 1 | உரிமம் பெற்ற இரத்த வங்கிகள் | 3 நாட்கள் | மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், சென்னை-6 |
| 2 | தடைசெய்யப்பட்ட மருந்துகள் | 3 நாட்கள் | மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், சென்னை-6 |
| 3 | உற்பத்தியாளர்களின் விவரம் | 3 நாட்கள் | மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், சென்னை-6 |
| 4 | கெமிஸ்ட் மற்றும் டிரக்கிஸ்ட்களின் மீது பெறப்படும் புகார்களின் அடிப்படையிலான விசாரணை விவரங்கள் | 7 நாட்கள் | சம்பந்தப்பட்ட மண்டல மருந்து கட்டுப்பாடு இயக்குநர்அலுவலகம் / மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம் |
| 5 | மருந்துகளின் தரம், அதிக விலை மற்றும் பாதகமான எதிர்விளைவுகளின் பேரில் பெறப்படும் புகார்களின் அடிப்படையிலான விசாரணை விவரங்கள் | 7 நாட்கள் | சம்பந்தப்பட்ட மண்டல மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம் / மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம் |

மேற்கண்ட சேவைகள் குடிமக்களுக்கு அவர்களின் எழுத்துபூர்வமான கோரிக்கைகளின் பேரில் வழங்கப்படும். இச்சேவைகளை பெற கட்டணம் எதுவும் இல்லை.

**இத்துறையால் வழங்கப்படும் சேவைகள்**

- மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள்
- இரத்த சேமிப்பு மையங்களுக்கான புதிய உரிமம் வழங்குதல்
- அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுக் கூடங்களுக்கு ஒப்புதல் வழங்குதல்
- மருந்து விற்பனை சில்லறை மற்றும் மொத்த வியாபார உரிமங்கள்
- வழங்கப்பட்ட உரிமங்களில் திருத்தம் மற்றும் மாற்றங்கள்
- கூடுதல் பொருட்களுக்கான ஒப்புதல்
- கூடுதல் தொழில் நுட்ப பணியாளர்களுக்கு ஒப்புதல்
- தடுப்பூசி மருந்துகள், சீரா மற்றும் லார்ஜ் வால்யூம் பேரண்டரல்ஸ் (Sera, large volume parenterals), இரத்தவங்கி மற்றும் இரத்த பொருட்கள் தயாரிக்க புதிய உரிமம் / புதுப்பித்தல் பெற மத்திய உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிற்கு பரிந்துரை செய்தல்.
- நடைமுறையில் உள்ள தயாரிப்பு உரிமத்தில் திருத்தம் / மாற்றம் செய்தல் மற்றும் பொருட்களுக்கான அனுமதி கடிதங்கள்.
- உலக சுகாதார அமைப்பு நல்ல உற்பத்தி நடைமுறைகள் சான்றிதழ் வழங்குதல்
- தடையில்லா விற்பனை சான்றிதழ் வழங்குதல்
- சந்தை தர சான்றிதழ் வழங்குதல்
- அட்டவணை ‘‘ஆ’’-யின் படி நல்ல உற்பத்தி நடைமுறைகள் சான்றிதழ்கள் வழங்குதல்
- தண்டனை இல்லா சான்றிதழ் வழங்குதல்
- உரிமம் ரத்து செய்யப்படாமை சான்றிதழ் வழங்குதல்
- உற்பத்தி மற்றும் திறன் சான்றிதழ் வழங்குதல்
- உரிமம் செல்லுபடியாகும் கால சான்றிதழ் வழங்குதல்

- பார்மாஸூட்டிகள் பொருட்களுக்கான சான்றிதழ் வழங்குதல்
- அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நிறுவனம் சான்றிதழ் வழங்குதல்
- நியூட்ரல் கோடு சான்றிதழ் வழங்குதல்
- உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் சான்றிதழ் வழங்குதல்
- தரம் மற்றும் திறனுக்கான சான்றிதழ் வழங்குதல்
- தரம் மேலாண்மை அமைப்பு சான்றிதழ் வழங்குதல்
- செயல்திறன் சான்றிதழ் வழங்குதல்

**சேவைகளின் தரங்கள்:** இத்துறையின் சேவைகளை வழங்க பின்வரும் இலக்குகள் / தரநிலைகள் / பதிலளிக்கும் நேரத்தை நாங்கள் அமைத்துள்ளோம்.

| வ. எண் | சேவைகளின் விவரம் | நடவடிக்கை எடுப்பதற்கான காலக்கெடு |
|---|---|---|
| 1 | மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பதற்கான புதிய உரிமம் வழங்குதல் அங்கீகரிக்கப்பட்ட மருந்து ஆய்வுக்கூடங்களுக்கு ஒப்புதல் வழங்குதல் | 120 நாட்கள் |
| 2 | இரத்த சேமிப்பு மையங்களுக்கான புதிய மற்றும் புதுப்பித்தல் உரிமம் வழங்குதல் | 120 நாட்கள் |
| 3 | மருந்து விற்பனை சில்லறை மற்றும் மொத்த வியாபார உரிமங்கள் | 75 நாட்கள் |
| 4 | வழங்கப்பட்ட உரிமங்களில் திருத்தம் மற்றும் மாற்றங்கள் | 7 நாட்கள் |
| 5 | ஹோமியோபதிக் மருந்துகள் தயாரிப்பதற்கான புதிய மற்றும் புதுப்பித்தல் உரிமம் வழங்குதல் | 120 நாட்கள் |
| 6 | கூடுதல் பொருட்களுக்கான ஒப்புதல் | 15 நாட்கள் |
| 7 | கூடுதல் தொழில் நுட்ப பணியாளர்களுக்கு ஒப்புதல் | 15 நாட்கள் |
| 8 | தடுப்பூசி மருந்துகள், சீரா மற்றும் லார்ஜ் வால்யூம் பேரண்டரல்ஸ் (Sera, large volume parenterals), இரத்தவங்கி மற்றும் இரத்த பொருட்கள் தயாரிக்க புதிய உரிமம் / புதுப்பித்தல் பெற மத்திய உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிற்கு பரிந்துரை செய்தல். | 120 நாட்கள் |
| 9 | நடைமுறையில் உள்ள தயாரிப்பு உரிமத்தில் திருத்தம் / மாற்றம் செய்தல் மற்றும் பொருட்களுக்கான அனுமதி கடிதங்கள். | 10 நாட்கள் |
| 10 | உலக சுகாதார அமைப்பு நல்ல உற்பத்தி நடைமுறைகள் சான்றிதழ் வழங்குதல் | 15 நாட்கள் |

| | | |
|---|---|---|
| 11 | தடையில்லா விற்பனை சான்றிதழ் வழங்குதல் | 15 நாட்கள் |
| 12 | சந்தை தர சான்றிதழ் வழங்குதல் | 15 நாட்கள் |
| 13 | அட்டவணை "M"-யின் படி நல்ல உற்பத்தி நடைமுறைகள் சான்றிதழ்கள் வழங்குதல் | 15 நாட்கள் |
| 14 | தண்டனை இல்லா சான்றிதழ் வழங்குதல் | 15 நாட்கள் |
| 15 | உரிமம் ரத்து செய்யப்படாமை சான்றிதழ் வழங்குதல் | 15 நாட்கள் |
| 16 | உற்பத்தி மற்றும் திறன் சான்றிதழ் வழங்குதல் | 15 நாட்கள் |
| 17 | உரிமம் செல்லுபடியாகும் கால சான்றிதழ் வழங்குதல் | 15 நாட்கள் |
| 18 | பார்மாஸூட்டிகள் பொருட்களுக்கான சான்றிதழ் வழங்குதல் | 20 நாட்கள் |
| 19 | அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நிறுவனம் சான்றிதழ் வழங்குதல் | 120 நாட்கள் |
| 20 | நியூட்ரல் கோடு சான்றிதழ் வழங்குதல் | 7 நாட்கள் |
| 21 | உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் சான்றிதழ் வழங்குதல் | 15 நாட்கள் |
| 22 | தரம் மற்றும் திறனுக்கான சான்றிதழ் வழங்குதல் | 15 நாட்கள் |
| 23 | தரம் மேலாண்மை அமைப்பு சான்றிதழ் வழங்குதல் | 15 நாட்கள் |
| 24 | செயல்திறன் சான்றிதழ் வழங்குதல் | 15 நாட்கள் |

**5. குறைகளை நிவர்த்தி செய்யும் வழி முறையின் விவரங்கள்:** இதற்கான வழிமுறைகள் / வழிகாட்டுதல் மற்றும் உதவிகளை குடிமக்கள் துணை மருந்து கட்டுப்பாடு இயக்குநர்கள், தலைமையிட அலுவலர்கள், சம்பந்தப்பட்ட மண்டல மருந்து கட்டுப்பாடு உதவி இயக்குநர்கள், மருந்தாய்வாளர்கள் அவர்களிடமிருந்தும் அல்லது கீழ்கண்ட இணைதள முகவரி வாயிலாகவும் பெறலாம்.

- visit our website:

  http://www.drugscontrol.tn.gov.in/grievance_reporting.html
- email: tndcad@gmail.com
- புகார்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மாற்றம் செய்யப்பட்டு நடவடிக்கை எடுத்த விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது. இச்சேவையின் முன்னேற்றம் குறித்து ஆலோசனைகள் ஏதும் தேவைப்படின் கீழ்கண்ட மண்டல அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.

**தலைமை அலுவலகம், 15 மண்டல அலுவலகங்கள் மற்றும் மருந்து ஆய்வுக் கூடம் உட்பட அனைத்து அலுவலகங்களின் முகவரி பட்டியல்.**

| வ. எண் | அலுவலகங்களின் பெயர் மற்றும் முகவரி | தொலைபேசி எண். | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| 1. | மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், எண். 359, டி.எம்.எஸ். வளாகம், அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-6 | 044 - 24321830 | tndcad@gmail.com |
| 2. | உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், மண்டலம் - I, எண். 359, டி.எம்.எஸ். வளாகம், அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-6 | 044-24328734 | tndcadzone1@gmail.com |
| 3. | உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், மண்டலம் - II, எண். 359, டி.எம்.எஸ். வளாகம், அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-6 | 044-24310687 | tndcadz2@gmail.com |
| 4. | உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், மண்டலம் - III, எண். 359, டி.எம்.எஸ். வளாகம், அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-6 | 044-24351581 | tndcadziii@gmail.com |
| 5. | உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், மண்டலம் - IV, எண். 359, டி.எம்.எஸ். வளாகம், அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-6 | 044-24335065 | tndcadz4@gmail.com |
| 6. | உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், காஞ்சிபுரம் மண்டலம், எண். 359, டி.எம்.எஸ். வளாகம், அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-6 | 044-24352876 | addckpmzone2014@gmail.com |
| 7. | உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், திருவள்ளூர் மண்டலம், எண். 201, ஜெ. என். ரோடு, விஷ்ணு காம்ப்ளக்ஸ், முதல் மாடி, திருவள்ளூர் - 602 001. | 044-27666698 | tndcadtvr@gmail.com |
| 8. | உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், வேலூர் மண்டலம், எண். 1/15, திரு.வி.க. நகர், 6வது தெரு, ரங்காபுரம், சத்துவாச்சாரி, வேலூர் - 632 009. | 0416 - 2252120 | tndcadvlr@gmail.com |

| | | | |
|---|---|---|---|
| 9. | உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், சேலம் மண்டலம்,<br>எண். 130/9 & 130/10, பனங்காடு, மெய்யனூர்,<br>சேலம் - 636 004. | 0427 - 2335823 | tndcadsalem@gmail.com |
| 10. | உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், தஞ்சாவூர் மண்டலம்,<br>எண். 2975, காந்திஜி ரோடு, ரயிலடி, தஞ்சாவூர் - 613 001. | 0436 - 2231171 | tndcadtnj@gmail.com |
| 11. | உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், விருதுநகர் மண்டலம்,<br>எண். 30, எல்.பி. சண்முகம் ரோடு, விருதுநகர் - 626 001. | 0456-2243731 | tndcadvnr@gmail.com |
| 12. | உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், கோயம்புத்தூர் மண்டலம்,<br>எண். 219, ரேஸ் கோர்ஸ் ரோடு, கோயம்புத்தூர் - 641 018. | 0422-2223350 | tndcadcbe@gmail.com |
| 13. | உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், திருச்சி மண்டலம்,<br>எண். 19, ஏ.வி. ஆர்கேட், 9வது குறுக்கு தெரு, தில்லை நகர்,<br>திருச்சி – 620 018. | 0431 - 2760112 | tndcadtry@gmail.com |
| 14. | உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், மதுரை மண்டலம்,<br>எண். 5, ராமையா தெரு, ஷெனாய் நகர், மதுரை-625 020. | 0452 - 2533699 | tndcadmdu@gmail.com |
| 15. | உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், நடமாடும் குழு, மதுரை,<br>எண். 28, குருவிகாரன் ரோடு,<br>முதல் குறுக்கு தெரு, சாத்தமங்களம், அண்ணாநகர், மதுரை-625 020. | 0452 - 2535590 | addcmsmdu@gmail.com |
| 16. | உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், திருநெல்வேலி மண்டலம்,<br>எண். C-36, 25வது குறுக்கு தெரு, மகாராஜா நகர், திருநெல்வேலி-627 011. | 0462 - 2573136 | tndcadtny@gmail.com |
| 17. | அரசு பகுப்பாய்வாளர், மருந்து ஆய்வுக் கூடம், எண். 359, டி.எம்.எஸ். வளாகம், அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-6. | 044-24310951 | tndtlchennai@gmail.com |

**6. குடிமக்கள் அல்லது வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகள்**

1 தரமான மருந்துகள் சரியான விலையில் தங்குதடையின்றி கிடைக்கச்செய்தல்

2 குறிப்பிட்ட காலக்கெடுவில் சேவை அளித்தல்

3 உடனடியாக குறைகளை நிவர்த்தி செய்தல்

4 உடனடியாக பொதுமக்களுக்கு / வாடிக்கையாளரின் கேள்விகளுக்கு பதில் அளித்தல்

**7. மேற்குறிப்பிட்ட சேவைகள் குறிப்பிட்ட நேரத்தில் அளிக்கப்படாதபட்சத்தில்:** பொதுமக்கள் குறிப்பிட்ட சேவை பெறுவதில் தாமதமானாலோ அல்லது மனுதாரரின் கோரிக்கை 30 நாட்களில் தீர்க்கப்படவில்லையென்றாலோ அவர்கள் குறை நிவர்த்தி செய்ய மருந்து கட்டுப்பாடு இயக்குநர், சென்னை-6 அவர்களை அணுகலாம்.

## அத்தியாயம் - 9

## தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை

தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்து துறையானது மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறையைச் சார்ந்த வாகனங்களை பிரத்யேகமாக பராமரிக்க செயல்பட்டு வருகிறது. தற்போது மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையில் உள்ள வெவ்வேறு இயக்ககங்களைச் சார்ந்த மொத்தம் 2823 வாகனங்கள் இத்துறையால் பராமரிக்கப்படுகிறது.

### 1. தொலைநோக்கு பார்வை மற்றும் குறிக்கோள்

**தொலைநோக்கு பார்வை:** அனைத்து விதத்திலும் ஒரு ‘முன் மாதிரி துறை’யாக செயல்பட்டு அனைத்து சுகாதாரத்துறை ஊர்திகளும் ஆரோக்யமான நிலையில் இருப்பதை உறுதி செய்வது.

**குறிக்கோள்:** மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறையைச் சார்ந்த வாகனங்கள் அனைத்தையும் நேர்த்தியாவும், சிக்கனமாகவும் பராமரிப்பதுடன் ஒரு வலுவான குறைகளைவு திட்டத்தையும் செயல்படுத்துதல், வாகன பழுதுநீக்கம், பராமரிப்பு இயக்கம் மற்றும் கழித்தொதுக்கம், தொடர்பாக வாகன உபயோகிப்பாளர்கள் எதிர்கொள்ளும் அனைத்து பிரச்சனைகளையும் ஒரே இடத்தில் இத்துறையின் மூலம் தீர்வு காண்பதற்கு வழிவகை செய்தல்.

### 2. பணி பரிவர்த்தனைகளின் விவரங்கள்:

i. நடமாடும் பணிமனை குழுக்கள் மூலமாக அனைத்து வாகனங்களையும் இரு மாதத்திற்கு ஒருமுறை ஆய்வு செய்து பருவப்பணி மேற்கொள்ளுதல்.

ii. வாகனங்களில் ஏற்படும் சிறு, இரண்டாம் கட்ட மற்றும் பெரும் பழுதுகளை மண்டல மற்றும் மாவட்ட பணிமனைகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலகெடுவிற்குள் நிவர்த்தி செய்து ஊர்திகளை விடுவித்தல்.

iii. வாகன கொள்முதல் மற்றும் கட்டமைப்பு பணிகள் தொடர்பான ஒப்பந்த புள்ளிகளை ஆய்வு செய்ய தேவையான தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல், அவசர மற்றும் அமரர் ஊர்திகள் உள்ளிட்ட வாகனங்களில் மேற்கொள்ளப்படுகின்ற கட்டமைப்பு பணிகளை சோதனை மற்றும் மதிப்பீடு செய்தல்.

iv. அரசுக்கு இழப்பீடு ஏற்படும்வகையில் இயங்கும் பழைய மற்றும் உபயோகிக்க இயலாத நிலையிலுள்ள வாகனங்களை கண்டறிந்து கழிவுநீக்கம் மற்றும் மின்னணு ஏல முறையில் தீர்வு செய்தல்.

v. இத்துறையால் பராமரிக்கப்படும் வாகனங்கள் தொடர்பான விவரங்களின் தகவல் களஞ்சியமாக செயல்படுதல்.

**3. வாடிக்கையாளர்களின் விவரங்கள்:** மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையைச் சார்ந்த அனைத்து வாகன உபயோகிக்கும் அலுவலர்கள் மற்றும் ஓட்டுநர்கள்.

**4. மண்டல /மாவட்ட மற்றும் நடமாடும் பணிமனைகளில் வழங்கப்படும் சேவைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட காலஅளவுகள்:**

i. உருளிப்பட்டைகள், காற்றடைப்பான்கள், மின்கலங்கள் மற்றும் மசக்கெண்ணெய் புதுப்பித்தல்–**உடனடியாக.**

ii. காலமுறை பருவப்பணிகள், பழுதான வாகனங்களை மீட்டுத் தருதல், நிலைகுலைவு ஊர்திகளின் பழுதுகளை நிவர்த்தி செய்தல்– **அன்றைய தினமே.**

iii. பெரும் பழுதுநீக்கம் உள்ளிட்ட அனைத்து வகை பணிகளுக்காகவும் அனுமதிக்கப்படும் நடமாடும் மருத்துவமனை ஊர்திகளை பழுதுநிவர்த்தி செய்து விடுவிக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள காலஅளவு–**20 நாட்கள்.**

iv. பெரும் பழுதுநீக்கம் உள்ளிட்ட அனைத்து வகை பணிகளுக்காகவும் அனுமதிக்கப்படும் வாகனங்களை (நடமாடும் மருத்துவமனை ஊர்திகள் நீங்கலாக) பழுது நிவர்த்தி செய்து விடுவிக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள கால அளவு– 30 நாட்கள்.

v. வாகன பராமரிப்பு, வாகன பதிவேடுகள், மோட்டார் வாகன சட்டம், உத்தரவாதம் கோருதல், பாதுகாப்பான வாகன இயக்கம், பழுது நீக்கம் மற்றும் கொள்முதல் விதிமுறைகள் தொடர்பாக எழும் சந்தேக தடை வினாக்களுக்கு–**உடனடியாக.**

vi. வாகன கழித்தொதுக்கம் மற்றும் கழிவுநீக்கம் செய்தல், வாகன புள்ளி விவரங்கள் தொடர்பாக எழும் சந்தேக தடை வினாக்களுக்கு–**உடனடியாக.**

5. **செயல்படுத்தப்படும் குறைகளைவு திட்டவிவரங்கள் மற்றும் அதை எவ்வாறு அணுகுவது என்ற வரங்கள்:** இத்துறையால் சுகாதாரத் துறைவாகன பராமரிப்பு உதவி மற்றும் தகவல் திட்டம் (HICORP) என்ற பெயரில் குறைகளைவு திட்டம் ஒன்று வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒற்றைச் சாளர முறையிலான இக்குறைகளைவு வசதி மூலம் மாநிலம் முழுவதும் உள்ள மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையைச் சார்ந்த வாகனங்களை தங்குதடையின்றி இயங்குவதற்கும், பராமரிப்பதற்கும் மருத்துவ அலுவலர்கள் மற்றும் ஓட்டுநர்கள் வாகனங்களில் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் அல்லது பிரச்சனைகளுக்கு **உதவி எண். 9489621111-யை** அழைத்து அல்லது குறுந்தகவல் மூலம் விபரங்கள் அனுப்பி உடனடி தீர்வு பெறலாம். வாகன பராமரிப்பு துறையினால் 24x7 மணி நேரமும் கட்டணமில்லா இலவச குறைகளைவு சேவை நடத்தப்பட்டு வருவது இதுவே முதல் முறையாகும்.

**6. வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகள்:**

i. தேய்மானம் அடைந்த உருளிப்பட்டைகள் மற்றும் பழுதடைந்த மின் கலங்களை உடன் மாற்றுதல்.

ii. இயந்திரப்பொறி மசக்கெண்ணெயினை பரிந்துரைக்கப்பட்டுள்ள இடைவெளிகளில் தவறாமல் மாற்றுதல்.

iii. பணிமனைகளில் அனுமதிக்கப்பட்ட பழுதான ஊர்திகளை விரைவில், கோரப்பட்ட அனைத்து பணிகளையும் நிவர்த்தி செய்த பின் விடுவித்தல்.

iv. மொத்தத்தில், அனைத்து ஊர்திகளையும் சாலைக்குத் தகுதியான நல்ல நிலையில் பராமரித்தல்.

**7. வழங்கப்படும் சேவைகளில் இடர்பாடுகள் ஏற்பட்டால் இழப்பீடுகள் போன்ற கூடுதல் கடமைகள்:**
பொதுமக்களுடன் நேரடி தொடர்பு இல்லாததால் இத்துறைக்கு பொருந்தாது,

## அத்தியாயம் - 10

### மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம்

**அறிமுகம்:** மனித வளம் என்பது எந்தவொரு நிறுவனத்திற்கும் முதுகெலும்பாக விளங்குகிறது. மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், 2012 – ல் துவக்கப்பட்டு, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் குறிக்கோளை அடைவதற்குத் தேவையான மனிதவளத்தை ஏற்படுத்தித் தருவதில் முக்கிய பங்காற்றி வருகிறது.

**1. நிறுவனத்தின் தொலைநோக்கு மற்றும் குறிக்கோள் :**

**தொலைநோக்கு :** மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் பல்வேறு பதவிகளுக்கான காலிப்பணியிடங்களை நேரடிப் பணி நியமனம் மூலம் நிரப்பிடுவதைக் குறிக்கோளாகக் கொண்டு துவக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு மருத்துவ நிலையங்களில் உள்ள 200க்கும் மேற்பட்ட பதவிகளை நிரப்பிடத் தேவையான பணியாளர்களை இவ்வாரியம் தேர்வு செய்து வருகிறது.

குறிக்கோள்: மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு அரசு மருத்துவ நிலையங்களில் உள்ள அனைத்து காலிப் பணியிடங்களையும் மிகுந்த வெளிப்படைத்தன்மையோடு விரைந்து நிரப்பி பொதுமக்களுக்கு சேவை புரிவதையும், திறமையான தொழில்நுட்ப பணியாளர்களைத் தேர்வு செய்து தரமான மருத்துவ சேவைகள் குறித்த நேரத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்வதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

**2. நிறுவனத்தின் செயல்பாடுகள்:** மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் துவக்கப்பட்ட நாளிலிருந்து 13.06.2019 வரையிலான காலத்தில் 26777 (12815 – மருத்துவர்கள், 9533 - செவிலியர்கள், 4429 – மருத்துவம் சார்ந்த / தொழில் நுட்ப பணியாளர்கள்) தகுதியான பணியாளர்களைத் தேர்வு செய்துள்ளது.

| வ. எண். | பதவியின் பெயர் | தேர்வு செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | உதவி மருத்துவர் (பொது) | 9344 |
| 02. | உதவி மருத்துவர் (சிறப்பு) | 1943 |
| 03. | தமிழ்நாடு சிறப்பு பல்நோக்கு மருத்துவமனை, சென்னை-க்கு, தேர்வு செய்யப்பட்ட மருத்துவர்கள் | 72 |
| 04. | உதவி மருத்துவர் (பல்-பொது) | 59 |
| 05. | உதவி மருத்துவர் (பல்-சிறப்பு) | 67 |
| 06. | உதவி மருத்துவர் (சிறப்புதகுதிதேர்வு) | 1151 |

| | | |
|---|---|---|
| 07. | உதவி மருத்துவ அலுவலர் (சித்தா) | 101 |
| 08. | உதவி மருத்துவ அலுவலர் (ஹோமியோபதி) | 4 |
| 09. | உதவி மருத்துவ அலுவலர் (ஆயுர்வேதம்) | 1 |
| 10. | உதவி மருத்துவ அலுவலர் / விரிவுரையாளர் தரம்-II (யோகா & இயற்கை மருத்துவம்) | 73 |
| 11. | செவிலியர் | 9533 |
| 12. | முதுநிலை விரிவுரையாளர் (விழி ஒளி ஆய்வியல்) | 2 |
| 13. | மருந்தாளுநர் | 974 |
| 14. | மருந்தாளுநர்(சித்தா) | 148 |
| 15. | மருந்தாளுநர்(ஆயுர்வேதம்) | 38 |
| 16. | மருந்தாளுநர்(யுனானி) | 20 |
| 17. | மருந்தாளுநர்(ஹோமியோபதி ) | 23 |
| 18. | கிராம சுகாதார செவிலியர் | 1323 |
| 19. | ஆய்வகநுட்புநர் தரம்-III | 890 |
| 20. | நுண்கதிர் வீச்சாளர் | 285 |
| 21. | பொருத்துநர் தரம்-II | 60 |
| 22. | இயன்முறை சிகிச்சையாளர் தரம்-II | 48 |
| 23. | இதயவரைபடநுட்புநர் | 29 |
| 24. | நோய் தீர்வியல் உதவியாளர் | 114 |
| 25. | செயற்கை கைவினைஞர் | 33 |
| 26. | மின்னணு காந்தவியல் நுட்புநர் (EEG & EMG) | 12 |
| 27. | செவித்திறன் ஆய்வாளர் | 14 |
| 28. | தொழில் சிகிச்சையாளர் | 18 |
| 29. | இருட்டறை உதவியாளர் | 227 |
| 30. | மாவுக்கட்டு நுட்புநர் தரம்-II | 87 |
| 31. | இதயம் மற்றும் நுரையீரல் வெப்பக்குறைப்பு இயந்திர நுட்புநர் | 7 |
| 32. | மயக்கவியல் நுட்புநர் | 77 |
| | **மொத்தம்** | 26777 |

**3. நிறுவனத்தின் சேவையைப் பெறும் மக்கள் (அ) வாடிக்கையாளர் விவரங்கள்:** அரசு மருத்துவ நிலையங்களில் காலியாக உள்ள பணியிடங்களில் வேலைவாய்ப்பினைப் பெற விரும்பும் மருத்துவ மற்றும் துணை மருத்துவ படிப்புகளை முடித்துள்ள பணிநாடுநர்கள்.

**4. நிறுவனத்தால் மக்கள் (அ) வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் சேவைகள், அதன் தரம், கால அளவு உள்ளிட்ட விவரங்கள் மற்றும் அதனைப் பெறும் வழிமுறைகள்:** மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் பணியாளர்தேர்வு முறை விவரங்கள் கீழ்க்கண்டவாறு :

i) **போட்டித்தேர்வு மூலம் தேர்வு செய்தல்:** சம்மந்தப்பட்ட துறைத்தலைவர்களின் கேட்புப் பட்டியலின்படி, உதவி மருத்துவர் (பொது), உதவி மருத்துவர் ( பல் – பொது / சிறப்பு), உதவி மருத்துவ அலுவலர் (சித்தா / ஆயுர்வேதம் / ஹோமியோபதி / யுனானி) , உதவி மருத்துவ அலுவலர் / விரிவுரையாளர் தரம் - II (யோகா மற்றும் இயற்கை மருத்துவம்) மற்றும் செவிலியர் பணியிடங்களுக்கு வெளிப்படையான அறிவிக்கை செய்தித்தாள்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) இரண்டினில் வெளியிடப்பட்டு, போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டு இணையவழி விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பின்னர் போட்டித்தேர்வு நடத்தப்பட்டு, உடனடியாக தேர்வர்களின் மதிப்பெண்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, இவ்வாரிய வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. இம்முறையில் பணியாளர்கள், இவ்வாரிய போட்டித்தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் இனசுழற்சி அடிப்படையில் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்டு, தகுதியான நபர்கள், நடைமுறையிலுள்ள விதிகளைப் பின்பற்றி தேர்வு செய்யப்படுகின்றனர். தேர்வு செய்யப்பட்ட நபர்கள் பணிநியமனம் செய்வதற்காக, சம்பந்தப்பட்ட துறைத்தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

ii) **வாக்-இன் தேர்வு முறை (Walk-in Selection Process):** சிறப்பு பட்டம் பெற்ற மருத்துவர்களின் பல்வேறு வகையிலான சிறப்பு சிகிச்சைகளை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்வதற்கு ஏதுவாக அவர்கள் வாக்-இன் தேர்வு முறையில் தேர்வு செய்யப்படுகின்றனர். சம்மந்தப்பட்ட துறைத்தலைவர்களின் கேட்புப் பட்டியலின்படி, வெளிப்படையான அறிவிக்கை செய்தித்தாள்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) இரண்டினில் வெளியிடப்பட்டு, போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டு இணையவழி விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பின்னர் பணியிடத்திற்கான கல்வித்தகுதியைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள், கல்வித்தகுதியில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் அரசாணை எண் 401, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (சி2) துறை, நாள் : 16.12.2014 – ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி தகுதிமதிப்பெண்கள் கணக்கிடப்பட்டு, இனசுழற்சி அடிப்படையில், சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்டு, தகுதியான நபர்கள், நடைமுறையிலுள்ள விதிகளைப் பின்பற்றி தேர்வு செய்யப்படுகின்றனர். தேர்வு செய்யப்பட்ட நபர்கள் பணிநியமனம் செய்வதற்காக, சம்பந்தப்பட்ட துறைத்தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். பின்னர், இம்முறையில்

தேர்வு செய்யப்பட்டவர்களின் பணியை வரன்முறை செய்யும் பொருட்டு சிறப்பு தகுதித் தேர்வுகளையும் நடத்தி வருகிறது.

iii) **தகுதி மதிப்பெண்கள் அடிப்படையில் தேர்வு செய்தல்:** ஏனைய மருத்துவம் சார்ந்த பணியாளர்களை நிரப்பிட, சம்மந்தப்பட்ட துறைத்தலைவர்களின் கேட்புப் பட்டியலின்படி, வெளிப்படையான அறிவிக்கை செய்தித்தாள்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) இரண்டினில் வெளியிடப்பட்டு, போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டு இணையவழி விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பின்னர், வேலைவாய்ப்பகத்தால் பரிந்துரை செய்யப்பட்ட நபர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு, அறிவிக்கையின்படி, இணையவழியில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். பின்னர், பணியிடத்திற்கான கல்வித்தகுதியைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள், அரசாணை எண் 401, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (சி2) துறை, நாள் : 16.12.2014 மற்றும் அரசாணை எண் 331, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (சி2) துறை, நாள் : 05.11.2015– ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி, தகுதிமதிப்பெண்கள் கணக்கிடப்பட்டு, இனசுழற்சி அடிப்படையில், சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்டு, தகுதியான நபர்கள், நடைமுறையிலுள்ள விதிகளைப் பின்பற்றி தேர்வு செய்யப்படுகின்றனர். தேர்வு செய்யப்பட்ட நபர்கள் பணிநியமனம் செய்வதற்காக, சம்பந்தப்பட்ட துறைத்தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

iv) **சிறப்பு தகுதித் தேர்வு:** மேலும் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் வாக்-இன் தேர்வு முறையில் (Walk-in Selection Process) பணியமர்த்தப்பட்ட சிறப்பு உதவி மருத்துவர்கள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரிகளில் பட்டமேற்படிப்பு படித்து கட்டாய பணியாற்றுக்காலத்தைப் (Bond Period of Service) பூர்த்தி செய்யும் பொருட்டு பணியமர்த்தப்பட்ட உதவி மருத்துவர்களில், அரசு மருத்துவமனைகளில் தங்களது பணியைத் தொடர விரும்பும் உதவி மருத்துவர்களின் பணியை வரன்முறை செய்யும் பொருட்டு சிறப்பு தகுதித் தேர்வுகளையும் நடத்தி வருகிறது.

**5.** **குறைதீர்க்கும் வழிமுறை குறித்த விவரங்கள்:** இவ்வாரியம் கீழ்க்காணும் அலுவலர்களைக் கொண்டுள்ளது.

| பதவி | தொலைபேசி எண் | அலுவலக முகவரி |
|---|---|---|
| தலைவர் | 044 - 24359393 | மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், 7 வது தளம், டி.எம்.எஸ். கட்டிடம், 359, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 006. |
| உறுப்பினர் செயலர் | 044 - 24354343 | |
| உறுப்பினர் | 044 – 24330744 | |

இவ்வாரியத்தால் பணி நாடுநர்களின் குறைகள், பணி நாடுநர்களால் சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் மற்றும் மின்னஞ்சல், தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 – ன் கீழ் பெறப்படும் மனுக்கள், முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்கள், அம்மா அழைப்பகம் மூலம் பெறப்படும் குறைதீர் அழைப்புகள் வழியாகத் தீர்க்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| தொலைபேசி எண் | : | 044 – 24355757 |
| நிகரி எண் | : | 044 – 24359393 |
| மின்னஞ்சல் முகவரி | : | mrb.tn@nic.in |
| வலைதள முகவரி | : | www.mrb.tn.gov.in |
| பொது தகவல் அலுவலர் | : | நிர்வாக அலுவலர், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் |
| மேல் முறையீட்டு அலுவலர் | : | உறுப்பினர் செயலர், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் |

**6. மக்கள் (அல்லது) வாடிக்கையாளரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் விவரங்கள்:** மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், பணியாளர் நியமனம் தொடர்பான நடவடிக்கையை மேம்படுத்தவும் மற்றும் வலுப்படுத்தவும், தேர்வு முறையை வெளிப்படையாக, நேர்மையான முறையில், விண்ணப்பிப்பவர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் சீர்திருத்த அவ்வப்போது தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

பணியிடங்களை நிரப்புவது தொடர்பான இவ்வாரிய அறிவிக்கைகள் செய்தித்தாள்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) இரண்டினில் வெளியிடப்பட்டு, பணிநாடுநர்களிடமிருந்து இணையவழி விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட தேர்வு செய்யும் முறையின் பல்வேறு நிலைகளைப் பற்றி தேர்வர்கள் தெரிந்து கொள்ள ஏதுவாக, அறிவிக்கை, தேர்வர்கள் போட்டித்தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்கள், விண்ணப்பதாரர்களின் கல்வித்தகுதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட தகுதி மதிப்பெண் விவரங்கள், சான்றிதழ் சரிபார்ப்பு பட்டியல், பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களின் பட்டியல் போன்றவை இவ்வாரிய வலைதளத்தில் (www.mrb.tn.gov.in) பதிவேற்றம் செய்யப்படுகின்றன. இவ்வாறு, தேர்வு நடவடிக்கைகள் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக இவ்வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே பணிநாடுநர்கள், இவ்வாரியத்தின் மேற்குறிப்பிட்ட பல்வேறு தேர்வு நடவடிக்கைகளின் நிலைகளை அறிந்து கொள்ள இவ்வாரிய வலைதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**7. சேவை வழங்குவதில் ஏற்படும் குறைபாடு தொடர்பாக வழங்கப்படும் இழப்பீடு போன்ற கூடுதல் பொறுப்புகள்:** இவ்வாரியத்தால் அத்தகைய நிகழ்வுகள் எதிர்கொள்ளப்படுவதில்லை என்பதால், மேற்குறிப்பிட்ட தலைப்பு பொருந்தாது.

## அத்தியாயம் - 11

## தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரத் திட்டம்

**1. நிறுவனத்தின் தொலை நோக்கு மற்றும் பணி அறிக்கை**

அ. உள்கட்டமைப்பு வசதி மற்றும் மருத்துவக் கருவிகளை மேம்படுத்துவதன் மூலம் முக்கிய மருத்துவமனையின் திறனை வலுப்படுத்துதல்.

ஆ. மனித வளங்களின் திறனை வலுப்படுத்துவதன் மூலம் தொற்றா நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான அதிகரித்துவரும் தேவையை சமாளிக்க பங்களித்தல்.

**2. நிறுவனத்தால் பரிவர்த்தனை செய்யப்பட்ட வணிக விவரங்கள்:** தமிழ்நாடு நகர்புற சுகாதார திட்டம் என்பது இந்தியாவிற்கும் ஜப்பானுக்கும் இடையில் 1634.00 கோடி ரூபாய் (JPY 30060 மில்லியன்) செலவில் கையெழுத்திடப்பட்ட கடன் திட்டமாகும். திட்டங்களின் செலவீனம் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் பங்களிப்பு ரூ.1387.88 கோடியும் தமிழ்நாடு அரசின் பங்களிப்பு 245.87 கோடிகளாகும்.

**3. குடிமக்கள் அல்லது வாடிக்கையாளர்களின் விவரங்கள்:** 17 மாவட்டங்கள் மற்றும் சுற்றுபுற மாவட்டங்களில் உள்ள சுமார் 44.63 மில்லியன் பொது மக்கள் மற்றும் நோயாளிகளுக்கு மருத்துவ சேவை தேவையினை அளித்தல்.

**4. ஒவ்வொரு குடிமகனுக்கும் / வாடிக்கையாளர்களும் தனித்தனியாக வழங்கப்படுகின்ற சேவைகளின் தரங்கள், கால அளவு மற்ற பிற விவரங்களும் எவ்வாறு / எங்கே மேற்கண்ட சேவைகளை பெறுவது குறித்த பட்டியல்:** தமிழ்நாட்டின் நகர்புறங்களில் வாழும் மக்களுக்கு மேம்பட்ட சுகாதார சேவையை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கால அளவு 2016-2023 வரை. 17 மாவட்டங்களில் உள்ள சேவைகளின் தரம் கீழ்க்கண்டவாறு மேம்படுத்தப்படுகிறது

1. மூன்றாம் நிலை மருத்துவமனைகளை மேம்படுத்துதல் (உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்குதல்)
2. பரிந்துரைக்கும் மருத்துவமனைகளை வலுப்படுத்துதல் (உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்குதல்)
3. இரண்டாம் நிலை பராமரிப்பு மருத்துவமனைகளை வலுப்படுத்துதல் (உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்குதல்)
4. மருத்துவமனை நிர்வாகத்தை பலப்படுத்துதல் (17 நகரங்களில் உள்ள 21 கட்டடங்கள் உள்கட்டமைப்பு வசதிகள்)

5. சென்னை மற்றும் மதுரையில் இரண்டு பிராந்திய பயிற்சி நிறுவனங்களுக்கு தொற்றா நோயின் முதன்மை சுகாதார சேவையை வலுப்படுத்துதல்

**5. குறைதீர்க்கும் நெறிமுறை களின் விவரங்களும் மற்றும் எவ்வாறு அணுகுதல் குறித்த விவரங்கள்:** இத்திட்டம் நடைமுறைபடுத்தப்படும் நிலையில் உள்ளதால் ஏற்படுகின்ற குறைதீர்க்கும் நிகழ்வுகள் திட்ட இயக்குநர் அளவிலேயே தீர்த்து வைக்கப்படும். இத்திட்டம் முடிவடைந்து ஒப்படைக்க படும் பொழுது குறைதீர்க்கும் பொறிமுறை சம்பந்தப்பட்ட கல்வி தலைவர், தலைமை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் இணை இயக்குநர் / மாவட்ட தலைமை மருத்துவமனைகளின் கண்காணிப்பாளர்களால் கண்காணிக்கப்பட்டு குறைதீர்க்கும் நிகழ்வுகள் தீர்த்துவைக்கப்படும்.

**6. பொது மக்கள் / வாடிக்கையார்களின் எதிர்பார்புகள்**

அ. மிகவும் அதிநவீன மருத்துவ சேவை வழங்கப்படுவதும்

ஆ. பிராந்தியத்திற்குள் உயர்ந்த மருத்துவ வசதிகள் பெறுவதும் நோயாளிகளின் எதிர்பார்ப்பாகும்.

**7. சேவை வழங்குவதில் தோல்விகளால் ஏற்படுகின்ற இழப்பீடு போன்ற கூடுதல் கடமைகள்:** ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியுதவியால் இயங்குகிற தமிழ்நாடு நகர்புற சுகாதார திட்டம் தற்போது நடைமுறைபடுத்தப்படும் கட்டத்தில் உள்ளது. எனவே திட்டம் முடியும் வரை இழப்பீடு போன்ற கூடுதல் சேவைகள் வழங்கப்படமாட்டாது.

# அத்தியாயம் - 12

## தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் (TNMSC)

### 1. தொலை நோக்கு மற்றும் நடைமுறைகள்

**தொலை நோக்கு**

i. தமிழகத்தின் அனைத்து அரசு மருத்துவ நிறுவனங்களுக்கும் மிகத்தரமான மருந்துகள், மருந்துப் பொருட்கள், அறுவை சிகிச்சை மற்றும் தையல் பொருட்கள் ஆகியவற்றை வாங்கி அக்கறை மற்றும் மேம்பட்ட பாதுக்காப்புடன் குறித்த நேரத்தில் வழங்குவது.

ii. அரசு மருத்துவ நிறுவனங்களின் தேவைக்கேற்ப மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா கருவிகளைகொள்முதல் செய்வது மற்றும் பராமரிப்பது.

iii. அரசு மருத்துவ நிறுவனங்களில் சிறப்பு நோய் கண்டறியும் சேவைகள் மற்றும் அதனைச் சார்ந்த சேவைகள் அளிப்பதில் உதவுதல்.

iv. மருந்துகள், மருத்துவகருவிகள் கொள்முதல் மற்றும் ஏனைய கொள்முதல் நடவடிக்கைகளில் ஒரு முன்னோடியாக திகழ்வது.

**நடைமுறைகள்:** மேற்கண்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு, தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் பின்வரும் நடைமுறைகளை பின்பற்றுகிறது.

i. சட்டதிட்டங்கள் மற்றும் நெறிமுறைகளை ஒட்டி வகுக்கப்பட்ட முறையான மருந்து மேலாண்மை அமைப்பின் மூலம் பயன்பெறுவோரின் பங்களிப்பு மற்றும் முடிவுகளின்படி தொடர்ந்து மேம்படுத்தப்பட்டுவரும் தரக்கட்டுப்பாட்டுமுறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

ii. அரசு சாராத நிதி நிறுவனங்களிலிருந்து பெறப்படும் நிதியின் மூலம் வாங்கும் பொருட்களுக்கு அத்தகைய நிதிநிறுவனங்களின் விதிகளின்படியும், அரசு நிதியிலிருந்து வாங்கப்படும் பொருட்களுக்கு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த புள்ளிகள் சட்டம் மற்றும் விதிகளின்படியும் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

iii. ஒப்பந்ததாரர்களுக்கு குறித்த நேரத்தில் பணப்பட்டுவாடா, பொருட்கள் வழங்குவதில் ஏற்படும் நேர இழப்புக்கு தயவின்றி அபராதம் என்ற கொள்கையை உறுதியாக செயல்படுத்தி வருகிறது.

iv. கையிருப்பு மற்றும் கொள்முதல் இருப்பின் நிலைகளை பல்லாண்டுகால பயன்பாட்டின் மூலம் உறுதி செய்யப்பட்ட தகவல்தொழில் நுட்பம் சார்ந்த வழிமுறைகளின் மூலம் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.

**2. வணிக செயல்பாடுகள்**

i. மனிதர்கள் மற்றும் கால்நடைகளுக்குத் தேவையான மருந்துகள், மருந்துப் பொருட்கள்,அறுவை மற்றும் தையல் பொருட்கள், வேதிப் பொருட்கள் ஆகியவற்றை அரசு மருத்துவமனைகள் மற்றும் கால்நடை மருத்துவமனைகளுக்கு கொள்முதல் செய்து, பகுப்பாய்வுக்கு உட்படுத்தி, இருப்பு வைத்து வழங்குவது.

ii. அரசு மருத்துவ நிறுவனங்களுக்கு தேவையான சிறப்பு மருந்துகளை கொள்முதல் செய்து வழங்குவது.

iii. அரசு மருத்துவ நிறுவனங்கள் மற்றும் கால்நடை மருத்துவமனைகளுக்கு தேவையானமருத்துவக் கருவிகள் கொள்முதல் செய்து நிறுவுவது.

iv. அறுவை சார் பொருட்கள், நுண்கருவிகள், உடலுக்குள் வைக்கப்படும் கருவிகள், மருத்துவக் கருவிகள் போன்றவைகளை மருத்துவமனைகள் தேவைக்கேற்ப கொள்முதல் செய்யும் வகையில் ஆண்டு ஒப்பந்தங்களை இறுதி செய்வது.

v. சென்னையில் உள்ள இரு அரசு மகப்பேறு மருத்துவமனைகளுக்கும், சென்னை அரசு பொது மருத்துவமனை மற்றும் சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் உள்ள கட்டண பிரிவு மையங்களுக்கும் தேவையான சார்பு சேவைகள் வழங்குவது.

vi. சி.டி.ஸ்கேன் மையங்கள், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மையங்கள்,சிறுநீரகக்கல் நீக்கும் மையங்கள் ஆகியவற்றை நிறுவி மிகக் குறைந்த உபயோகிப்பாளர் கட்டண அடிப்படையில் இச்சேவைகளைவழங்குவது.

vii. அரசு மருத்துவ நிறுவனங்களில் உள்ள மருத்துவக் கருவிகள் பராமரிப்புக்கு தேவையான சேவைகள் வழங்குவது.

viii. மற்ற மாநிலங்களுக்குஅவைகளின் குறிப்பிட்ட தேவைகேற்ப மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்கள் கொள்முதல் செய்து தருவது.

ix. மருந்து மற்றும் மாத்திரைகள் கொள்முதல் செய்வதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை தேவைப்படும் மாநிலங்களுக்கு வழங்கி வருவது.

x. சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உயிர் காக்கும் மருந்துகளுக்கான விற்பனை நிலையம் நிறுவி வழங்குவது.

**3. வாடிக்கையாளர்களின் விவரம்**

| வ.எண் | வாடிக்கையாளர் |
|---|---|
| 1 | மருத்துவக் கல்வி இயக்குநரகத்தின் கீழ் உள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்கள் |
| 2 | மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரகத்தின் கீழ் உள்ள அனைத்து அரசு தாலுகா மற்றும் தாலுகா அல்லாத மருத்துவமனைகள் |
| 3 | பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநரகத்தின் கீழ் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் |
| 4 | மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரகத்தின் (இ.எஸ்.ஐ) கீழ் உள்ள அனைத்து மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் |
| 5 | கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்கள் |
| 6 | காவல்துறை கீழ் உள்ள அனைத்து மருத்துவ நிலையங்கள் |
| 7 | உள்ளாட்சி துறை சார்ந்த அனைத்து மருத்துவ நிலையங்கள் |
| 8 | சிறைத்துறை மற்றும் புனர்வாழ்வுத்துறை கீழ் உள்ள அனைத்து மருத்துவ நிலையங்கள் |
| 9 | பஞ்சாயத்து ஒன்றியத்தின் கீழ் உள்ள அனைத்து மருந்தகங்கள் |
| 10 | போக்குவரத்து நிறுவனங்கள் கீழ் உள்ள அனைத்து மருந்தகங்கள் |
| 11 | இளம் குற்றவாளிகள் சீர்திருத்த இல்லங்களின் மருந்தகங்கள் |
| 12 | சர்க்கரை ஆலைகளின் மருந்தகங்கள் |
| 13 | தமிழ்நாடு மின்வாரியம் கீழ் உள்ள மருந்தகங்கள் |

**4. மக்கள் / பயன்பெறுவோர் குழுவுக்கு வழங்கும் சேவை குறித்த நெறிமுறை, தரம் மற்றும் காலக்கெடு பற்றிய அட்டவணை**

i. மருந்துகள், மருந்துப் பொருட்கள், அறுவை சிகிச்சை மற்றும் தையல் பொருட்கள் கொள்முதல் செய்வதில் மருந்து மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் மற்றும் அதற்கு இணையான சர்வதேச அளவிலான நெறிமுறைகள்.

ii. மருத்துவக் கருவிகளின் கொள்முதல்USFDA / European CE / BIS அல்லது அதற்கு இணையான சர்வதேச நெறிமுறைகளின்படி அமைந்த தொழில்நுட்பம்.

iii. அத்தியாவசிய மருந்துகள், மருந்துப் பொருட்கள் மற்றும் அறுவை சிகிச்சை மற்றும் தையல் பொருட்கள் அனைத்தும் பொதுப்பெயரில், உற்பத்திக்கான உரிமம், சிறந்த உற்பத்தி முறைகளுக்கான சான்று, குற்ற வழக்குகளில் தண்டிக்கப்படாமைக்கான சான்று, உற்பத்தி மற்றும் விற்பனையில் குறைந்தபட்ச ஆண்டுகள் முன் அனுபவம், உற்பத்தி மற்றும் தரக்கட்டுப்பாட்டுக்குரிய வசதிகள் மற்றும் மனிதவளம், உற்பத்திதிறன், குறைந்தபட்ச ஆண்டு கொள்முதல் மற்றும் நிதிநிலை ஆகிய தேவைகளை பூர்த்தி செய்யும் உற்பத்தியாளர்களிடமிருந்தோ நேரடி இறக்குமதியாளர்களிடமிருந்தோ கொள்முதல் செய்து வழங்குவது.

iv. உற்பத்தி / விற்பனை முன் அனுபவம் தொழில்நுட்பம் மற்றும் நிதிநிலை ஆகிய தேவைகளை பூர்த்தி செய்யும் மற்றும் பராமரிப்பு அனுபவம் கொண்ட உற்பத்தியாளர் அல்லது உற்பத்தியாளரின் நியமன அனுமதி பெற்றவர்களிடமிருந்து மருத்துவக் கருவிகள் கொள்முதல் செய்து வழங்குவது.

v. அத்தியாவசிய மருந்துகள் கொள்முதல் செய்து, தர ஆய்வு செய்து, எல்லா மாவட்ட மருந்துக் கிடங்குகளிலும் இருப்பு வைத்து அந்த மருத்துவமனைகளின் தேவைக்கேற்ப கடவு புத்தகத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியின் அடிப்படையில் வழங்குவது.

vi. ஒவ்வொரு மருத்துவமனையும் அந்த மாவட்ட மருந்துக் கிடங்குடன் இணைக்கப்பட்டு தங்களுக்கு தேவையான மருந்துகளை மாதந்தோறுமோ அல்லது காலாண்டுக்கு ஒரு முறையோ அல்லது சிறப்புத் தேவைக்கேற்பவோ வழங்குவது.

vii. மருந்து கிடங்குகளில் மருந்து மற்றும் மருந்துப் பொருட்களின் கையிருப்பு சுமார் 3 மாத தேவை அளவிற்கு வைக்கப்பட்டு, நுகர்வின் அடிப்படையில் மறு கொள்முதல் செய்து இருப்பு வைப்பது.

## 5. குறை தீர்க்கும் வழிமுறைகளும் அணுகுமுறையும்

i. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்வதில் பாதிக்கப்பட்டதாக கருதும் எந்த ஒரு ஒப்பந்த புள்ளிதாரரும் நிர்வாக இயக்குநரையோ அல்லது தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த புள்ளிகள் சட்டம், பிரிவு 11ன்-படி, அதில் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவுக்குள் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் அவர்களிடமோ விண்ணப்பிக்கலாம்.

ii. குறைகளை நேரிடையாக அல்லது எழுத்துப்பூர்வமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, நிர்வாக இயக்குநருக்கு தெரிவிக்கலாம். அவ்வாறு தெரிவிக்கப்பட்ட குறைகள் கால தாமதமின்றி ஆராயப்பட்டு தகுதியின் அடிப்படையில் தீர்க்கப்படும்.

iii. குறைகள் மற்றும் தவறுகள் உட்தணிக்கை, சட்டரீதியான தணிக்கை மற்றும் நடுவண் கணக்கு ஆய்வு துறையின் மூலம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு தேவையான சீர் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**6. மக்கள் / பயன்பெறுவோரின் எதிர்பார்ப்புகள்**

i. தாமான மருந்துகள், மருந்துப் பொருட்கள், அறுவை சிகிச்சை மற்றும் தையல் பொருட்கள் தேவையான இருப்பு எப்போதும் வைத்திருப்பதும் மற்றும் கருவிகளை குறித்த நேரத்தில் வழங்குவதும்.

ii. கிடங்குகளில் இருந்து மருந்துகள், மருந்துப் பொருட்கள் வழங்கும் சேவை குறையின்றி வழங்குவது குறித்து பயனாளிகளின் கருத்துகள் பெறப்படுவதும் பயனாளிகளின் குறைப்பட்டியலை ஆய்வு செய்து, நிறையான சேவைகள் வழங்கத் தேவையான நடவடிக்கைகள் எடுத்தலும்.

iii. மருத்துவக் கருவிகள் கொள்முதல் செய்து வழங்கும் செயல்பாடுகளை அவ்வப்போது சீராய்வு செய்து பயன்பெறுவோரின் தேவைகளை நிறைவேற்ற ஏதுவான சீர் நடவடிக்கைகள் எடுப்பதும்.

**7. சேவைக்குறைப்பாடு இருப்பின் அது குறித்து வழங்கப்படும் இழப்பீடு / நடவடிக்கை குறித்த கருத்துக்கள்**

i. இருப்பு வைக்க இயலாத நிலையில் உள்ள மருந்துகளுக்கு மருத்துவமனைகள் குறிப்பிட்ட கால அளவுக்கு மருந்துகள் கொள்முதல் செய்ய ஏதுவாக தடையில்லா சான்று வழங்குதல்.

ii. ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்றதில் தேவையான / தகுதியான ஒப்பந்தப்புள்ளிகள் இல்லாதபோதோ அல்லது ஒப்பந்தப்புள்ளிகளே வராதபோதோ, ரூ.5 லட்சம் மதிப்பு வரை உள்ள கருவிகளை மருத்துவ நிலையங்களே தகுந்த வழிமுறையின் மூலம் வாங்கி கொள்ள அனுமதித்து அதற்குரிய பணப்பட்டுவாடாவை வைப்பில் பெறப்பட்ட நிதியிலிருந்து நேர் செய்தல்.

## அத்தியாயம் - 13

## தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் திட்ட பிரிவு 1993 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கமாக சங்கங்களின் விதியின்கீழ் பதிவு செய்யப்பட்டது. தேசிய அளவில் முதன் முதலில் தோற்றுவிக்கப்பட்ட சங்கமாகும். இச்சங்கத்திற்கு அரசு செயலர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அவர்கள் தலைவராகவும் மற்றும் ஒரு இந்திய ஆட்சிப் பணியாளர் இச்சங்கத்திற்கு உறுப்பினர் செயலர் மற்றும் திட்ட இயக்குநராகவும் செயல்படுகிறார்கள்.

### I. நிறுவனத்தின் தொலை நோக்கு மற்றும் பணித்திட்டம்

**தொலை நோக்கு:** மாநிலத்தில் தொடர்ச்சியாக எச்.ஐ.வி /எய்ட்ஸ் பரவுதலைக் குறைக்கும் மகத்தான நோக்கத்தோடு தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

**பணித்திட்டம்:** நாட்டிலேயே எச்.ஐ.வி / எய்ட்ஸ் நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு பணியில் தமிழ்நாடு மாநிலம் முன்மாதிரி மாநிலமாக விளங்குகிறது. இந்த நோக்கத்துடன், இச்சங்கமானது பல்வேறு நிகழ்வுகளை செயல்படுத்தி கண்காணித்து வருகிறது. தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைத்து இலக்குத் திட்டங்கள், ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையம், எச்.ஐ.வி-காசநோய்க்கான பரிந்துரை சேவைகள், எச்.ஐ.வி நுண்கிருமிக்கு எதிரான சிகிச்சை மையங்கள், சமூக நல மையம், பாதுகாப்பான இரத்தம் மற்றும் தன்னார்வ இரத்ததானம் வழங்கும் திட்டம் மற்றும் பால்வினை நோய் சிகிச்சை பராமரிப்பு சேவைகள் போன்றவைகள் எச்.ஐ.வி / எய்ட்ஸ் தொற்றை தடுப்பது மற்றும் கட்டுப்படுத்துதல் இச்சங்கத்தின் முக்கிய செயல்பாடுகள்.

**2. சங்கத்தின் அலுவல் பரிவர்த்தனை விவரங்கள்:** தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்திற்கு மத்திய அரசின் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சகத்தின் ஒரு அங்கமான தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தின் மூலம் முழு நிதி வழங்கப்படுகிறது. இச்சங்கத்தின் அனைத்து நிகழ்வுகளும் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தின் நான்காவது திட்ட வழிகாட்டுதலின்படி நடைபெறுகிறது. எச்.ஐ.வி./எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய் தொற்று மீதான தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பின் 2017-2024 ஆண்டிற்கான தேசிய மேலாண்மை திட்டத்தின் வாயிலாக தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் 2030 ஆம் ஆண்டுக்குள் எய்ட்ஸ் நோயை பொதுநல அபாய நோய்லிருந்து நீக்கும் நோக்கில் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் பல்வேறு பிரிவுகளின்கீழ் திட்டக்கூறுகள் ஆக்கப்பூர்வமாக நடைமுறைப்படுத்தி வருகிறது, அவைகள் பின்வருமாறு,

- அடிப்படை சேவை பிரிவு
- குருதி பரிமாற்ற சேவைகள்

- தகவல் கல்வி மற்றும் தொடர்பு
- கவனிப்பு மற்றும் ஆதரவு பிரிவு
- இலக்கு பணிகள் பிரிவு மற்றும் தொடர்பு பணியாளர் சேவைகள்
- ஆய்வக சேவைகள்
- நிறுவன வலுவடைதல்
- கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு
- உத்தியல் தகவல் மற்றும் மேலாண்மை முறை (SIMS)

நிகழ்வுகள் மற்றும் நோய் தடுப்புகள் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

| சேவை விநியோக புள்ளிகள் / வசதிகள் | அலகுகள் |
|---|---|
| ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்கள் (SA-ICTC) | 780 |
| மருத்துவமனைக்குள் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்கள் (FICTC) | 1555 |
| நடமாடும் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையம் | 15 |
| சமூக மக்கள் மத்தியில் எச்.ஐ.வி பரிசோதனை கண்டறிதல் | 80 |
| கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் | 55 |
| இணைப்பு கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் | 174 |
| ஏ.ஆர்.டி. கூட்டு மையங்கள் | 7 |
| பால்வினை நோய் சிகிச்சை மையங்கள் | 210 |
| குருதி வங்கிகள் | 89 |
| மாநில குறிப்பு ஆய்வகங்கள் | 12 |
| தேசிய குறிப்பு ஆய்வகங்கள் | 1 |
| தொடர்பு பணியாளர் திட்டம் | 15 |
| இலக்குப் பணிகள் | 85 |

**3. குடிமக்கள் / பயனாளிகள் விவரங்கள்:** தேசத்தில் உள்ள அனைத்து குடிமக்களும் எச்.ஐ.வி –ஆல் பாதிக்கப்படும் அபாயத்தில் இருப்பவர்கள், மாநிலத்தில் உள்ள மக்கள் மட்டுமல்லாமல் தேசத்தில் உள்ள மக்களுக்கும் நோய் தடுப்பு, எச்.ஐ.வி தொற்று மற்றும் பால்வினை நோய் தொற்றுக்கு தொடர் சேவைகள் வழங்கப்படுகிறது.

**4. குடிமக்கள் மற்றும் பயனாளிகளுக்கான சேவைகள், எப்படி, எவ்வாறு பெறுவது:** மத்திய மற்றும் மாநில அரசின் மிக பெரிய ஆதரவுடன் கடந்த வருடங்களில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கமானது கர்ப்பிணிப் பெண்கள் மத்தியில் 2003-ல் 0.83 ஆக இருந்த தொற்று சதவீதத்தை 2008-ல் 0.35 ஆகவும் மேலும் 2017-ல் 0.27 சதவீதமாக குறைந்துள்ளது. ஆதரவற்ற அதிக பாதிப்புக்கு உள்ளாகும் குழந்தைகளுக்கான அறக்கட்டளை மற்றும் திருநங்கைகளுக்கான நலசங்கம் அமைத்தல் வாயிலாக மாநில அரசின் ஈடுபாட்டிற்கு உதாரணமாக விளங்குகிறது.

**தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தால் வழங்கப்படும் பல்வேறு சேவை வழங்கும் மையம் மற்றும் அதன் விவரங்கள் கீழ் வருமாறு**

**அடிப்படை சேவை பிரிவு**

**புதிய தொற்றினை தடுத்தல்**

**ஒருங்கிணைந்து ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையம் (ICTCs):** தமிழ்நாட்டில் 2618 மையங்களில் ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை சேவைகள் வழங்கப்படுகின்றன. இதில் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பின் (NACO) மூலம் 377 ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்கள் (SA-ICTC) மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளிலும், 403 SA-ICTC-க்கள் தேசிய சுகாதார திட்டத்தின் (NHM) மூலம் வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மற்றும் சமூக நல மையங்களிலும் செயல்படுகின்றன. 1555 துணை கிராமப்புற ஆரம்ப சுகாதார (PHC) மையங்கள் எச்.ஐ.விக்கான சேவைகளான ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை (FICTC) சேவைகளை வழங்கி வருகின்றன. பெற்றோர்களிடமிருந்து குழந்தைகளுக்கு தொற்று ஏற்படாமல் இருப்பதை வலுப்படுத்தும் நோக்குடன் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கமானது 188 பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் இணைந்து ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்கள் (PPP) தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அது மட்டுமல்லாமல் மேலும் இச்சேவையை அனைத்து பகுதிகளுக்கு விரிவுபடுத்தும் பொருட்டு தொலைதூரம் மற்றும் எளிதில் சென்றடைய முடியாத பகுதியில் வாழும் மக்களுக்கு ஆலோசனை மற்றும் பரிசோதனை சேவைகளை வழங்குவதற்காக 15 நடமாடும் ஒருங்கிணைந்து ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை வாகனங்கள் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் மூலம் செயல்படுகிறது. இந்த வாகனங்கள் கோயம்புத்தூர், திண்டுக்கல், தருமபுரி, ஈரோடு, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, நீலகிரி , நாமக்கல், சேலம், சிவகங்கை, தேனி, திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, விருதுநகர் மற்றும் வேலூர்ஆகிய மாவட்டங்கள் இதில் அடங்கும். இந்த வாகனங்கள் சம்மந்தப்பட்ட மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுகள் (DAPCUs) – களின் கீழ் செயல்படுகிறது.

**கர்ப்பகாலம் பிரசவம் மற்றும் பாலூட்டும்போது தாயிடமிருந்து குழந்தைக்கு ஏற்படும் எச்.ஐ.வி தொற்றை தடுத்தல்:** கர்ப்பகாலத்திலும், பிரசவிக்கும் பொழுதும் மற்றும் தாய்ப்பாலூட்டுதல் மூலமும்

தாயிடமிருந்து குழந்தைக்கு தொற்று பரவுவதே, குழந்தைகளுக்கு எச்.ஐ.வி தொற்று ஏற்படுவதற்கு முக்கிய காரணமாகும். தமிழக அரசு, பிறந்து குழந்தைகளுக்கு எச்.ஐ.வி மற்றும் சிபிலிஸ் (கிரந்தி நோய்) தொற்றை முற்றிலும் அகற்றுவதற்காக கர்ப்பகாலத்தில் அனைத்து பெண்களுக்கும் பரிசோதனை செய்வதை உறுதிசெய்கிறது. பெற்றோரிடம் இருந்து குழந்தைக்கு தொற்று பரவுதலை தடுக்கும் பொருட்டு தொடர்ச்சியாக தேசிய சுகாதார திட்டத்தின் கீழுள்ள (NHM) பேறுசார் மற்றும் குழந்தை நலத்திட்டத்தினுடன் (RCH) இணைந்து இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த இலக்கை அடைவதற்கும் மற்றும் எச்.ஐ.வி, தடுப்பு மற்றும் ஆதரவு நடவடிக்கைகளை மேம்படுத்தும் விதமாக பாதிக்கப்பட்ட பெண்களின் குழந்தைகளுக்கும் மற்றும் அவரின் குடும்பத்திற்கும் ஆரம்பகால தடுப்பு, குடும்ப கட்டுப்பாடு, தன்னார்வ ஆற்றுப்படுத்துதல் மற்றும் இரகசிய பரிசோதனை, வாழ்நாள் கூட்டு மருத்துவ சிகிச்சை மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கு பாலூட்டும் பழக்கங்கள் தொடர்பான ஆலோசனைகள் விரிவான சேவைகளாக வழங்கப்படுகின்றன. புதிதாக பிறந்த குழந்தைகளுக்கு எச்.ஐ.வி தொடர்பான நோய்தடுப்பு மற்றும் இறப்பு விகிதம் குறைக்கும் வகையில் ஆரம்பகால பச்சிளம் குழந்தை நோயறிதல் (EID) திட்டம் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையத்தின் மூலமாக செயல்படுத்தப்படுகிறது. தாய் சேய் பரவுதல் தடுப்பு திட்டத்தின் (PPTCT) படி பாதிக்கப்பட்ட பெண்களுக்குப் பிறந்த குழந்தைகளுக்கு பிறப்பு முதல் ஆறு (அ) பன்னிரெண்டு வாரம் வரை நெவிரெபின் சொட்டு மருந்து வழங்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் எச்.ஐ.வி பாதிக்கப்பட்ட அனைத்து தாய்மார்களுக்கும் மற்றும் குழந்தைகளுக்கும் வாழ்நாள் முழுவதும் கூட்டு மருந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

**பால்வினைத் தொற்று / இனப்பெருக்க மண்டலத் தொற்று (STI/RTI) தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு திட்டம்:** பால்வினை தொற்று மற்றும் இனப்பெருக்க மண்டலத் தொற்றானது (STI/RTI) இந்தியாவில் ஒரு முக்கியமான பொது சுகாதார பிரச்சினை ஆகும். இந்தியாவில் பருவ வயது வந்தோரில் 6% பேர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பால்வினை தொற்று மற்றும் இனப்பெருக்க மண்டல தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டம் (NACP) மற்றும் தேசிய சுகாதார திட்டத்தின் (NHM) மூலம் எச்.ஐ.வி பரவுவதைத் தடுப்பதற்கு எஸ்.டி.ஐ/ஆர்.டி.ஐ பராமரிப்பு சேவைகளை வழங்குவது மிக முக்கியமான ஒரு வழிமுறையாகும்.

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின் கீழ் 216 எஸ்.டி.ஐ/ஆர்.டி.ஐ சிகிச்சை மையங்கள் (Designated STI/RTI Clinics –DSRCs) செயல்பட்டு வருகிறது. இந்த சிகிச்சை மையங்கள் "**சுக வாழ்வு மையம் "** என்று அழைக்கப்படுகிறது. நோய் அறிகுறிகளைக் கொண்டு தேவையான ஆய்வக சோதனைகளுடன் சிகிச்சை அளிக்கும் முறை (Syndromic Case Management – SCM) எஸ்.டி.ஐ/ஆர்.டி.ஐ கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகிறது. இது உலக சுகாதார அமைப்பால் (WHO) அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறந்த அணுகுமுறையாகும். இந்த அணுகுமுறையில் எஸ்.டி.ஐ/ஆர்.டி.ஐ. தொற்றுகளானது அறிகுறிகளைக் கொண்டு எளிதில் அடையாளம் காணக்கூடிய வகையில் அறிகுறிகளின் குழுவாக வகைப்படுத்தப்படுகிறது.

ஒரேவிதமான நோய் அறிகுறிகளை ஏற்படுத்தும் கிருமிகளுக்கு பொதுவான கூட்டு மருந்து சிகிச்சையை வழங்குகிறது.

**மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகு (DAPCUs):** தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பின் திட்டங்களை முழுமையாக செயல்படுத்திட மாவட்ட அளவில் 29 மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுகள் மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாடு அலுவலர் அவர்களின் மேற்பார்வையிலும் மற்றும் மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாடு அலுவலர் அல்லாத 3 மாவட்டங்களில் துணை இயக்குநர் (காசநோய்) அவர்களின் மேற்பார்வையிலும், சீரான நடைமுறை மற்றும் சரியான தொடர்பில் தேசிய சுகாதார திட்டம் மற்றும் தொடர்புடைய மாநிலத் துறைகளுடன் செயல்படுகிறது. மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகின் பங்கானது

1. NACP உத்திகளை நடைமுறைப்படுத்துதல்
2. NHM திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல்
3. மாவட்டத்திலுள்ள அனைத்து துறைகளுடன் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல்.

**குருதி பரிமாற்றச் சேவைகள்:** குருதியானது திரவ வடிவத்திலுள்ள ஒரு உயிர் காக்கும் மருந்தாகும். குருதிப் பரிமாற்ற சேவை என்பது மருத்துவச் சேவைகளின் ஒருங்கிணைந்த ஒரு அம்சமாகும். இந்த சேவையின் நோக்கம் போதுமான அளவில் பாதுகாப்பான, தரமான இரத்தம் மற்றும் அதன் கூறுகளை தேவைப்படும் நபர்கள் மற்றும் நோயாளிகளுக்கு இலவசமாக அளிப்பதாகும்.

குருதி பரிமாற்றச் சேவையின் நோக்கமானது தன்னார்வ / கைமாறு கருதாத கொடையாளர்களிடமிருந்து 100 % தானமாகப் பெற்று அவைகளை நோயாளிகளின் தேவைக்குகேற்ப பயன்படுத்துவதை உறுதி செய்வதாகும். தமிழகத்தில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் செயல்படும் 89 இரத்த வங்கிகள் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் / மாநில இரத்த பரிமாற்ற குழுமத்தின் ஆதரவுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதில் 38 இரத்த வங்கிகள் இரத்த உட்பொருட்கள் பிரிப்பு மையங்களாகவும் செயல்படுத்தப்பட்டு, உட்கூறுகளை கூடுமான அளவு பயன்படுத்த ஊக்குவிக்கப்படுகிறது. மேலும், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரத்தப் பரிமாற்றத்தை மேம்படுத்தும் வகையில் 383 இடங்களில் இரத்த சேமிப்பு மையங்கள் செயல்பட்டு வருகிறது.

**ஆய்வக சேவைகள்:** ஆய்வக சேவைகள் துறையானது அடிப்படை சேவைகள் துறை (ஐ.சி.டி.சி), கவனிப்பு, ஆதரவு மற்றும் மருத்துவம் (ஏ.ஆர்.டி), குருதிப்பாதுகாப்பு சேவைகள் மற்றும் பால்வினை நோய்த்தொற்று பிரிவு ஆகிய அனைத்துறைகளோடும் ஒன்றிணைந்து செயல்படக்கூடியதாகும்.

எச்.ஐ.வி பரிசோதனையின் தர உறுதியானது வெளிப்புற தர மதிப்பீட்டு திட்டத்தின் மூலம் தேசிய மற்றும் மாநில அளவில் மதிப்பீடு செய்யப்படுகிறது.

தமிழகத்தில் மூன்று தேசிய குறிப்பு ஆய்வகங்களும் மற்றும் 12 மாநில குறிப்பு ஆய்வகங்களும் 32 மாவட்டங்களில் உள்ள அனைத்து எச்.ஐ.வி பரிசோதனை மையங்களோடு ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

**கவனிப்பு, ஆதரவு மற்றும் சிகிச்சை:** எச்.ஐ.வி தொற்றுடன் வாழும் மக்களுக்கு அனைத்து விதமான அடிப்படை பரிசோதனைகளையும் வழங்குதல் சிடி-4 பரிசோதனை, சந்தர்ப்பவாத நோய்த் தொற்றிற்கான மருந்து வழங்குதல் ஆகியவை கவனிப்பு, ஆதரவு மற்றும் சிகிச்சை பிரிவின் முக்கிய குறிக்கோள் ஆகும். இந்த நோக்கத்தை கருத்தில் கொண்ட, தற்போது பல்வேறு சேவை வழங்கும் மையங்களாக, சிறப்பு மையங்கள் (Centre of Excellence) கூடுதல் இணைப்பு கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் (Link ART Plus) ஆகியவை நிறுவப்பட்டுள்ளன.

**கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் (ARTc):** நம்பிக்கை மையங்கள் மூலமாக எச்.ஐ.வி தொற்றுள்ளதாக கண்டறியப்பட்ட நபர்களுக்கு வாழ்நாள் முழுவதற்குமான கவனிப்பு மற்றும் சிகிச்சையினை கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் வழங்கி வருகின்றன. இம்மையங்கள் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூட்டு மருந்து சிகிச்சை மையமும் மருத்துவ அதிகாரியின் தலைமையின் கீழ் செவிலியர், ஆலோசகர், தகவல் மேலாளர், ஆய்வக நுட்புனர், மருந்தாளுநர், சமூக ஒருங்கிணைப்பாளர் ஆகியோருடன் செயல்பட்டு வருகின்றது. பொதுவான பரிசோதனைகள், எச்.ஐ.வி தொற்றுள்ளோரின் நோயெதிர்ப்பு சக்தியை கண்டறிவதற்கான சிடி-4 பரிசோதனை ஆகியவை இம்மையங்களில் செயற்படுத்தப்படுகிறது. வாழ்நாள் முழுவதற்குமான இலவச ஏ.ஆர்.டி மருந்துகள், சந்தர்ப்பவாத நோய்த் தொற்றிற்கான மருந்துகள் ஆகியவை இம்மையங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் ஆலோசனை சேவைகள், பரிந்துரை மற்றும் சமூக நலத் திட்டங்களுடன் இணைக்கும் சேவைகள் ஆகியவை கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றது. தமிழகத்தில் தற்போது 55 கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களுக்கான இடம் மாவட்டத்தின் நோய்த் தாக்கம், பரப்பு, நிலம், மக்களின் பண்பியல்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறது. ஒவ்வொரு கூட்டு மருந்து சிகிச்சை மையமும் அரசு மருத்துவமனைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு , பிறகு மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கும், இறுதியில் அரசு துணை மாவட்ட அரசு மருத்துவமனைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. ஒரு சிறப்பு மையத்தின் (CoE) மூலம் முதல் வரிசை மருந்துடன் கூடுதலாக இரண்டாம் வரிசை மற்றும் மூன்றாம் வரிசை மருந்துகளும் வழங்கப்படுகிறது. ஒரு குழந்தைக்கான பிராந்திய சிறப்பு மையம் (PCoE) மற்றும் 7 கூடுதல் கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் மூலமாக இரண்டாம் வரிசை மருந்துகளும், சிக்கலான

சந்தர்ப்பவாத நோய்த் தொற்றிற்காக சிகிச்சை, சிறப்பு ஆய்வக பரிசோதனை சேவைகள் ஆகியவை எச்.ஐ.வி தொற்றுள்ளோருக்கு வழங்கப்பட்டு வருகிறது. மே 2017-ல் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனம் பரிசோதனை மற்றும் கண்டறிந்தவுடன் சிகிச்சை அளித்தல் என்ற யுக்தியை அமுல்படுத்தியுள்ளது. இதன் மூலம் எச்.ஐ.வி தொற்றுள்ளதாக கண்டறியப்படும் நோயாளிகள் நோயெதிர்ப்பு சக்தியின் அளவு எதுவாக இருப்பினும் ஏ.ஆர்.டி சிகிச்சை உடனே ஆரம்பிக்கப்படுகிறது.

**தகவல், கல்வி மற்றும் தொடர்பு:** தமிழ்நாட்டில் எச்.ஐ.வி /எய்ட்ஸ் குறித்த தகவல் கல்வி மற்றும் தொடர்பு சேவைகளை மாறுபட்ட கலாசாரம், மொழியியல் மற்றும் பல்வேறு சமூக பின்னணிகளை கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. எச்.ஐ.வி /எய்ட்ஸ் பற்றிய தகவல், கல்வி மற்றும் தொடர்பு சேவைக்கான முக்கிய நோக்கம் இலக்கு மக்களின் நடத்தையில் நன்மாற்றத்தினை ஏற்படுத்துதல் ஆகும். மேலும் விழிப்புணர்வு உருவாக்கம் மற்றும் எச்.ஐ.வி / எய்ட்ஸ், பால்வினை நோய் தொற்று (STI) மற்றும் இரத்த தானம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், ஆணுறை பயன்பாடு, தடுப்பு, ஆதரவு மற்றும் பராமரிப்பு பணிகளுக்கான தகுந்த சூழலை உருவாக்குதல், எளிதில் பாதிப்புக்குள்ளாகக் கூடிய மக்களின் அணுகுமுறை மாற்றத்திற்காக வாதிடுதல், மேலும் நம்பிக்கை மையம், கூட்டு மருத்துவச் சிகிச்சை மையம், பால்வினை தொற்று சிகிச்சை மையம், தாய் சேய் பரவுதல் தடுப்பு திட்டம், ஒதுக்குதல் மற்றும் புறக்கணித்தல், தன்னார்வ இரத்த கொடை ஆகியவற்றின் சேவைகளை பொதுமக்கள் மற்றும் இலக்கு மக்களிடையே கொண்டு சேர்த்தல், சரியான நேரத்தில் பிரச்சாரம் மற்றும் செய்திகளின் மூலமாக ஒளிப்பரப்புதல் போன்ற சேவைகளையும் இப்பிரிவு வழங்குகிறது.

வெகுமக்கள் ஊடகங்களான அச்சு, சமூக ஊடகம், வானொலி மற்றும் தொலைக்காட்சிகளின் மூலமாக எச்.ஐ.வி /எய்ட்ஸ் குறித்த சிறப்பு நிகழ்வுகளின்போது, அதற்கேற்ப சொற்பொழிவுகள் மற்றும் விழிப்புணர்வு செய்திகளையும் இப்பிரிவு வழங்குகிறது.

**இலக்கு பணிகள் திட்டம்:** இலக்குப்பணிகள் திட்டம் என்பது எச்.ஐ.வி. மற்றும் பால்வினை நோய் தொற்றுக்குள்ளாகும் ஆபத்து மற்றும் பாதிப்பை உண்டாக்கும் குறிப்பிட்ட பிரிவினர்களின் மத்தியில் நடத்தை மாற்றத்தை கொண்டு வருவதற்காக வடிவமைக்கப்பட்டதாகும். இந்த குறிப்பிட்ட பிரிவினர்கள் முக்கிய இலக்கு மக்கள் மற்றும் இணைப்பு இலக்கு மக்கள் என வகைப்படுத்துப்படுகிறார்கள். பெண் பாலியல் தொழிலாளிகள், ஆண் ஓரினச் சேர்க்கையாளர்கள், போதை ஊசி பயன்படுத்துவோர் மற்றும் திருநங்கைகள் ஆகியோரை முக்கிய இலக்கு பிரிவினர் என்றும், இடம் பெயர்வோர் மற்றும் ஓட்டுநர்கள் ஆகியோரை இணைப்பு இலக்கு மக்கள் எனவும் வகைப்படுத்தப்படுகின்றனர். இத்திட்டமானது 2019-20 ஆம் நிதியாண்டில் 85 தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூகம் சார்ந்த நிறுவனங்களால் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி கொண்டிருக்கிறது.

**தொடர்பு பணியாளர் திட்டம்:** தொடர்பு பணியாளர் திட்டம் தமிழ்நாடு முழுவதும் 15 மாவட்டங்களில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டமானது அதிக ஆபத்து மற்றும் பாதிப்பு உள்ளாகக் கூடிய மக்களை கொண்ட ஊரகப்பகுதிகளில் உள்ள 1500 கிராமங்களைச் சென்றடைகிறது.

**ஆணுறை பயன்பாடு:** பொதுமக்கள் மற்றும் அதிக ஆபத்தை உண்டாகக்கூடிய பிரிவினரின் மத்தியில் ஆணுறை என்பது எச்.ஐ.வி. தொற்று பரவுவதை தடுப்பதில் அதிகம் முக்கியத்துவம் வாய்ந்ததாக திகழ்கிறது. மேற்குறிப்பிட்ட மக்களை ஆணுறை பயன்படுத்த வைப்பதற்கு தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் பல்வேறு வகையான வழிமுறைகளை கடைபிடிக்கிறது.

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் இலவச ஆணுறையை கீழ்கண்ட மருத்துவ மையங்களான பால்வினை நோய் பிரிவு, நம்பிக்கை மையங்கள், ஏ.ஆர்.டி. கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் மற்றும் களப்பணி வாயிலாக தொண்டு நிறுவனங்கள் மூலம் மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

நடத்தை மாற்ற தகவல் தொடர்பு மூலம் பாதுகாப்பான பாலுறவு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

**உத்தியியல் தகவல் மற்றும் மேலாண்மை முறை மற்றும் எச்.ஐ.வி மதிப்பாய்வு (2018-19):** இச்செயலி திட்ட நிலவரங்களை கண்காணிக்கவும் ஒழுங்குபடுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் அனைத்தும் பிரிவுகளின் அறிக்கைகள் இதன் மூலம் பெறப்படுகின்றது.

அதிக பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய பிரிவினர்களிடத்திலும் (HRG) மற்றும் கர்ப்பிணி பெண்கள் இடத்திலும் (ANC) எச்.ஐ.வி தொற்றுத் தடுப்பு பற்றி ஆய்வு செய்ய தமிழ்நாட்டில் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை எச்.ஐ.வி மதிப்பாய்வு (HSS) நடத்தப்படுகிறது. 2018-19 ஆம் ஆண்டிற்கான மதிப்பாய்வானது தமிழ்நாட்டில் 71 கர்ப்பிணி பெண்களின் பரிசோதனை பிரிவுகள், 44 அதிக பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய பிரிவுகள் மற்றும் முதன் முறையாக 3 மத்திய சிறைச் சாலைகளில் நடத்தப்படுகிறது. இந்த ஆய்வு 2019 ஜனவரி 1-ஆம் முதல் தேதி முதல் நடத்தப்பட்டு வருகிறது.

**வேலை நேரம்:** அனைத்து அவரசகால சேவைகள் - 24 x7

**புற நோயாளிகள் சேவை**

| | |
|---|---|
| ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையம், சுகவாழ்வு மையம், இரத்த வங்கி மற்றும் (அரசு மற்றும் ஞாயிறு விடுமுறை தவிர) | – முற்பகல் 8.00 மணி முதல் பிற்பகல் 5.00 மணி வரை |

| | |
|---|---|
| கூட்டு மருந்து சிகிச்சை மையம்<br>(அரசு மற்றும் ஞாயிறு விடுமுறை தவிர) | – முற்பகல் 8.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை |

**5. குறை தீர்ப்பாய சேவை:** தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் முதுநிலை அலுவலர் கொண்டு பொதுமக்கள் மற்றும் பயனாளிகளின் குறை நேர் செய்யப்படுகிறது. மேலும், கட்டணமில்லா தொலைபேசி எண். 1800 419 1800 மூலமாக ஆலோசனை மற்றும் குறைகள் நேர் செய்யப்படுகிறது.

**6. பொதுமக்கள் மற்றும் பயனாளிகள் எதிர்பார்ப்புகள்:** பொதுமக்கள் மற்றும் பயனாளிகளின் குடியிருப்புகளுக்கு அருகாமையில் சிகிச்சை மற்றும் ஆலோசனை மையங்களை செயல்படுத்தும் பொருட்டு எதிர்பார்ப்பு உள்ளது. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் அதற்கேற்ப செயல்பட்டு வருகிறது.

**7. இழப்பீடு மற்றும் கூடுதல் சேவை:** இச்சங்கத்தின் சேவைக் குறைபாட்டால் ஏதும் இழப்பு ஏற்படின் அங்கரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு வகையில் இழப்பீடு வழங்கப்படுகிறது.

## அத்தியாயம் - 14

## தமிழ்நாடு மாநில பார்வை இழப்பு தடுப்பு சங்கம்

**முன்னுரை:** தமிழ்நாடு தேசீய நலவாழ்வு சங்கத்தின் கீழ் இயங்கும் பல்வகை துணை சங்கங்களில் தமிழ்நாடு மாநில பார்வை இழப்பு தடுப்பு சங்கமும் ஒன்றாக செயல் படுகிறது. மாவட்ட அளவில், மாவட்டத்திற்கு ஒன்றாக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் இயங்குகிறது.

**1. இச்சங்கத்தின் குறிக்கோள்கள்:** தேசீய பார்வை இழப்பு தடுப்பு திட்டத்தை திறம்பட செயலாக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்றுகிறது.

i. (மாநிலத்தில்) கண்புரை அறுவை சிகிச்சை, சர்க்கரை நோயினால் ஏற்படும் கண் நோய், கண்நீர் அழுத்த நோய், கருவிழி பாதிப்பு, சிறார்களுக்கு ஏற்படும் கண் பார்வை குறைபாடு மற்றும் இதர கண் நோய்களை களைவதற்கு மாநில அளவில் தக்க நடவடிக்கை எடுத்தல்.

ii. கண் நோய் (டிரக்கோமா) மற்றும் அதனால் ஏற்படும் பின் விளைவுகளை தடுத்தல்.

iii. பார்வைக் குறைபாட்டின் ஆரம்ப நிலை, இரண்டாம் நிலை மற்றும் உயர்நிலை போன்றவற்றை கண்டறிந்து, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், மருந்துக் கட்டுப்பாடு மற்றும் நோய்த் தடுப்பு இயக்ககம், மருத்துவக் கல்வி இயக்ககம் மற்றும் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி இயக்ககம் ஆகிய துறைகளின் துணையுடன் எல்லா நிலைகளிலும் சிகிச்சை அளித்தல்.

iv. அரசு மருத்துவ நிலையங்களில் கண் சிகிச்சை அளிக்க போதிய மருந்துகள், உபகரணங்கள் அளித்தல் மனித திறன் அதிகரித்தல், மருத்துவர்களுக்கும் கண் மருத்துவ உதவியாளர்களுக்கும் தகுந்த பயிற்சி அளித்தல்.

v. மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்ட அரசு சாரா நிறுவனங்களின் பணிகளை கண்காணித்தல் கண்புரை அறுவை சிகிச்சை மற்றும் கண் தானம் பெற்றமைக்கு அரசின் அறிவுரையின்படி அதற்குரிய மானியம் வழங்க ஏற்பாடு செய்தல்.

vi. கண்தானம் பெறவும், அவைகளை கண் மருத்துவர்கள் மூலம் கருவிழி மாற்று அறுவை சிகிச்சை செய்யவும், மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை 2011 ம் ஆண்டின் சட்ட விதிகளின்படி அரசு மருத்துவ நிலையங்களிலும், அரசு சாரா நிறுவனங்களிலும் கண் வங்கிகளை நிறுவுதல்.

vii. மாநிலத்திலுள்ள அனைத்து மருத்துவமனைகளிலும், தொலை தூர பார்வை நோக்கு கருவியின் மூலம் முதிரா சர்க்கரை கண் நோய்க்கு சிகிச்சை அளித்தல் மற்றும்

ஐதராபாத்திலுள்ள ராணி எலிசபெத் அறக்கட்டளை குழுமத்தின் இந்திய பொது சுகாதார நிலைய வழிகாட்டுதலின்படி செயலாற்ற விரிவாக்கம் செய்தல்.

viii. அரசு மருத்துவமனைகளில் வழங்கும் கண் சிகிச்சை குறித்த விபரத்தை பொது மக்களிடையே தெரியப்படுத்தவும், விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவும், வட்டார மொழிகளில் பிரசாரம் மற்றும் விளம்பரப்படுத்துதல்.

ix. மாநிலத்தில் கண் பார்வை இழப்பு தடுப்பு குறித்த ஆய்வு செய்து, அதனை களைவதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளல், தேவையான முயற்சிகளை மேற்கொள்ளல்.

**2. சங்கம் மேற்கொள்ளும் பணிகள்:** தமிழ்நாடு மாநில பார்வை இழப்பு தடுப்பு சங்கமும், அதனை சார்ந்த 32 மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கமும் இணைந்து, தேசீய பார்வை இழப்பு தடுப்பு திட்டத்தினை அனைத்து வகைகளிலும் வலுப்படுத்துவதிலும், செயலாக்கத்திலும் முனைந்து நிற்கிறது.

1. மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்ட அரசு சாரா நிறுவன கண் வங்கிகளுக்கு கண்தானம் பெற்று பராமரிக்கவும், தேவையான மருந்துகளை பெற்றுக்கொள்ளவும் போக்குவரத்து போன்றவைகளுக்காகவும், ஒரு கண்ணுக்கு மானியமாக ரூ.1000/- வழங்கப்படுகிறது. அதே முறையில் கண் வங்கிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட கண்தான நிலையத்திற்கு ஒரு கண்ணுக்கு ரூ.500/- மானியமாக வழங்கப்படுகிறது.

2. பிரதி வருடமும், பள்ளி சிறார்களுக்கு கண் பார்வை பரிசோதனை செய்யப்பட்டு, தேவையானவர்களுக்கு கண் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்படுகிறது. ஒரு கண்ணாடி ரூ.350/- வீதம் அரசு வழங்கும் மானியத்தில் தோராயமாக 1,80,000 குழந்தைகள் ஆண்டுதோறும் பயன்பெறுகின்றனர்.

3. நாற்பது வயதுக்கு மேற்பட்ட கிட்டப் பார்வை உள்ள நபர்களுக்கு தேவையான விதத்தில் கண் கண்ணாடி ஒன்று ரூ.350/- என்ற விலையில் அரசு வழங்கும் மானியத்தில் இலவசமாக வழங்கப்படுகிறது. இதன் மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் 10,000 பயனாளிகள் பலன் பெறுகின்றனர்.

4. அரசுத்துறைகளில் கண் சிகிச்சைப்பிரிவை வலுப்படுத்த நவீன முறையில் சிறந்த சிகிச்சை வழங்க தேவையான அறுவை அரங்குகள் கட்டித்தருதல், புதிய உபகரணங்கள் பெற்றுத்தருதல் மற்றும் அவைகளை தரமான முறையில் பராமரித்தல்.

5. அரசு மருத்துவ மனைகளில் பணிபுரியும் கண் மருத்துவர்களுக்கும், கண் மருத்துவ உதவியாளர்களுக்கும் நவீன முறையில் தகுந்த பயிற்சி அளித்தல்.

6. அரசுத்துறையில் ஆட்கொணர்வுக்காகவும், பயணம் மற்றும் மருந்து போன்ற செலவினங்களுக்கு கண்புரை அறுவை சிகிச்சை ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் மானியம் வழங்கப்படுகிறது.

7. அரசு சாரா நிறுவனங்கள், தனியார் மருத்துவ மனை போன்றவைகளின் பணிகளை ஊக்குவிக்கும் விதத்தில், மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்ட நிறுவனங்களுக்கு தேசீய பார்வை இழப்பு தடுப்பு திட்ட வழிகாட்டுதலின் படியும், 5 விழுக்காடு சரிபார்ப்பு, கேட்புப்பட்டியல் மற்றும் சிகிச்சை பெற்றோரின் பராமரிப்பு பதிவேடு ஆகியவைகளின் அடிப்படையில், கண்புரை அறுவை சிகிச்சை ஒன்றுக்கு ரூ. 2000/- வீதம் மானியம் வழங்கப்படுகிறது.

**3. செயலாக்க விவரம்:** மாநிலத்தில் பார்வை இழப்பு தடுப்பு திட்டம் கீழ்க்காணும் வழிகளில் செயல்படுத்தப்படுகிறது.

1. அரசு மருத்துவக்கல்லூரி - 24
2. அரசு வட்டார மருத்துவமனை - 34
3. அரசு மருத்துவமனைகள் - 52
4. அரசு சாரா நிறுவனங்கள்
   - பெரியவை - 6
   - சிறியவை - 61
5. தனியார் மருத்துவர்கள் - 950

தேசீய கண்பார்வை இழப்பு தடுப்பு திட்டத்தின் கீழ் முறையே 9 அரசு கண் வங்கிகளும், 11 அரசு சாரா கண் வங்கிகளும் நமது மாநிலத்தில் இயங்குகிறது.

நமது மாநிலத்தில் கண் மருத்துவம் சார்ந்த 78 பட்டப் மேற்படிப்பு உள்ள 24 மருத்துவக்கல்லூரிகள் மற்றும் மருத்துவ மனைகளில் 4 DNB படிப்பும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அரசு மருத்துவமனைகளில் கண் சம்பந்தப்பட்ட அனைத்து சிகிச்சையும் மருத்துவமும் இலவசமாக வழங்கப்படுகிறது.

**4. சேவையின் விவரம், தரம் மற்றும் பெறும் வழிகள்**

**பொது தகவல்:** அரசுத்துறையில் கண் சிகிச்சை பெறுவதற்கு கீழ்க்காணும் வகையில் ஏதேனும் ஒன்றை பின்பற்றலாம்.

1. கண் மருத்துவ உதவியாளர்கள் பராமரிக்கும் கண்புரை சிகிச்சையாளர் பதிவேட்டின் அடிப்படையிலும், மக்கள் தொகை கணக்கெடுப்பின் பேரிலும் சிகிச்சை அளித்தல்.

2. அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலேயே கண் மருத்துவர்கள் மூலமாக பார்வை குறை பாட்டினை கண்டறிந்து சிகிச்சை மேற்கொள்ளல்.

3. பிரதி வருடமும் பள்ளி சிறார்களுக்கு கண் மருத்துவ உதவியாளர் மூலமாக பார்வை குறைபாட்டினை கண்டறிந்து தேவையானவர்களுக்கு உரிய கண் கண்ணாடி வழங்குதல்.

4. மாவட்ட கண் சிகிச்சை மருத்துவர்கள் உதவியுடன் இயங்கும் தொலைதூர பார்வை நோக்கு கருவியின் மூலம் கண் உதவி மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் சிகிச்சை பெறுதல்.

5. சர்க்கரை நோயினால் ஏற்படும் கண் சிகிச்சைக்கு கண் மருத்துவ உதவியாளர் மற்றும் தொற்றா நோய் பிரிவு செவிலியர்கள் மூலமும் அறிவுரையின் பேரில் அருகிலுள்ள மருத்துவ மனையில் சிகிச்சை பெறலாம்.

6. பிறந்த குழந்தைகளுக்கு ஏற்படும் விழித்திரை சுழற்சிக்கான கண் நோய்களைக் கண்டறிந்து சிகிச்சையளிக்க, அதற்கான சிறப்பு சிகிச்சை பிரிவுகள் துவங்கப்பட்டுள்ளன.

7. அரசுத்துறை, அரசு சாரா நிறுவனம் மற்றும் தனியார் மருத்துவர்கள் கண் தானம் பெறுவதில் சேவை புரிகின்றனர்.

**இரண்டாம் நிலை (24 மணி நேரமும் இயங்கும் பொது கண் சிகிச்சை பிரிவு):** வட்டார மற்றும் இதர மருத்துவமனைகளில் கண் சிகிச்சைபிரிவு நமது தமிழ்நாட்டில் பரவலாக்கப் பட்டுள்ளது.

1. சாதாரண கண் சிகிச்சை மற்றும் பார்வைக் குறைபாடு போன்றவைகளுக்கு கண் மருத்துவரின் ஆலோசனையின் பேரில் கண் மருத்துவ உதவியாளர் சிகிச்சை அளிக்க இயலும்.

2. சிறிய குறைபாடுகளுக்கு கண் மருத்துவர் சிகிச்சையளிப்பார்.

3. பிறந்த குழந்தைக்கான கண் விழித்திரை சுழற்சிக்கான சிகிச்சையை கண் பிரிவு மருத்துவரே வழங்குவார்.

4. மாவட்ட மருத்துவ மனைகளில் அமைக்கப்பட்ட கண் அவசர சிகிச்சை பிரிவில் குழந்தைகளுக்கு ஏற்படும் கண் நோய்க்கு சிகிச்சை வழங்கப்படுகிறது.

5. அரசு மருத்துவ மனைகளில் கண் சேகரிப்பு, பராமரிப்பு வசதி மற்றும் கண் சேகரிப்பு மையத்துணையுடன் செயல்படுகிறது.

6. பட்டப் படிப்பு வசதி இல்லாத மருத்துவ மனைகளான கடலூர் மற்றும் காஞ்சீபுரம் மாவட்ட மருத்துவ மனைகள் DNB பட்டப் படிப்பில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

7. சில மாவட்டங்களில், தனியார் நிறுவனங்கள், அரசு ஒப்புதல் பெற்ற பயிற்சி நிறுவனமாக, ஒப்பந்த அடிப்படையில் இயங்குகிறது.

**உயர்நிலை (கண் சிகிச்சை சேவை 24 மணி நேரமும்):** மருத்துவக்கல்லூரி இல்லாத இடங்களில், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வட்டார மருத்துவமனை ஆகிய இடங்களில் அறுவை அரங்குடன் கூடிய தனியான கண் சிகிச்சைப்பகுதியில் உயர்நிலை கண் சிகிச்சை வழங்கப்படுகிறது. அது போன்ற இடங்களில் பட்டப் படிப்பிற்கான கல்வியும், சட்டரீதியான மருத்துவ கண் சிகிச்சைப்பகுதியும் அமையப்பெற்றுள்ளது.

1. கண்புரை அறுவை சிகிச்சை, கண்நீர் அழுத்த நோய், கருவிழி பார்வை குறைபாடு, அறுவை சிகிச்சைக்குப் பின் ஏற்படும் பின்விளைவுகள் போன்றவற்றிற்கு சிகிச்சை பெற ஏதுவான அனைத்து வசதிகளும் கொண்ட அறுவை அரங்கம்.

2. சாதாரண மருத்துவபடிப்பு முடித்தோர்க்கு கண் சிகிச்சை குறித்த சிறப்பு பட்டப் படிப்பு கற்றுத்தரல்.

3. பட்டப்படிப்பில் கண் சிகிச்சை குறித்த கல்வியும் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

4. கண் சிகிச்சைக்கான அடிப்படை கல்வி மற்றும் பார்வை குறைபாடுகளை நீக்க கற்றுத்தரப்படுகிறது.

5. கண் தானம்/கண் வங்கி / கண்களை தானமாக சேகரிக்க மருத்துவமனையில் ஏற்பாடு செய்தல்.

6. சட்ட ரீதியான மருத்துவ சேவைகளை வழங்குதல்.

7. பிற மருத்துவ துறையிலிருந்து சிகிச்சைக்காக பரிந்துரை செய்யப்படும் நோயாளர்களுக்கு உரிய சிகிச்சை மேற்கொள்ளல்.

8. தொலைதூர நோக்கு கண் சிகிச்சைக்கு, மருத்துவ மையத்துடன் கூடிய சிகிச்சை மையத்தை உருவாக்குதல்.

9. மாவட்ட ஆட்சியாளரும் / ஆணையருமானவரின் தலைமையில் மாவட்ட நலப்பணிகள் துணை இயக்குநரின் வழிகாட்டுதல்படியும், மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கத்தின் பணிகளையும் சேவைகளையும் முறையே மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்க மேலாளரான மூத்த கண் மருத்துவர் கவனித்துக் கொள்கிறார்.

**5. குறைகளை தீர்க்கும் வழிமுறைகள்:** இத்துறை சம்பந்தப்பட்ட புகார்களும், குறைகளும் மற்றும் ஆலோசனைகளும் கீழ்க்கண்ட வழிமுறையில் தீர்வு காணப்படுகிறது.

1. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மூலமாக அரசால் பெறப்படும் மனுக்கள் அனைத்தும் தக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

2. மாவட்ட ஆட்சியாளரும் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கத்தின் தலைவரால் பெறப்படும் புகார்கள் மற்றும் மாநில நல வாழ்வு சங்கத்தின் குழும இயக்குநரால் பெறப்படும் அனைத்து புகார்களும் தக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

3. மாநில உயர்நீதி மன்றம் மற்றும் மாவட்ட நீதி மன்றங்களிலும் பெறப்படும் புகார்களை விதிமுறைகளுக்குட்பட்டு சட்டரீதியாக புகார்களை விசாரித்து தீர்வு செய்யும்.

4. மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்பு புகார் மையத்தில் (இலவச அழைப்பு எண்.1100) அஞ்சல் வழியாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாக செய்யப்படும் புகார்கள், தக்க நடவடிக்கை எடுக்க இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்படும்.

5. மருத்துவக் கல்வி இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து துறை இயக்குநர், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர், மாவட்ட இணை இயக்குநர் மற்றும் துணை இயக்குநர் ஆகியோருக்கு அனுப்பப்படும் புகார்கள் தங்கள் அளவிலேயே அல்லது இவ்வலுவலகம் மூலமாக தீர்வு வழங்கப்படுகிறது.

6. மாநில மற்றும் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கங்களில் புகார் பெட்டிகள் உள்ளது, இவைகளுக்கு அந்தந்த அலுவலக தலைவர்களால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

7. பத்திரிக்கைகளிலும் வாரப்பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி மூலமாகவும் பெறப்படும் புகார்களுக்கு உரிய அலுவலர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

**6. மக்களின் எதிர்பார்ப்புகள்**

1. கண் சிகிச்சை பொறுத்தவரையில், அரசு சாரா நிறுவனம் மற்றும் தனியார் சிகிச்சை வழங்குவது போல் விரும்புதல்.

2. எந்த நேரத்திலும் சிகிச்சை பெறும் வசதி வேண்டுதல்.

3. நவீன முறையில் சிறந்த சிகிச்சை அளிக்கும் வகையில் வலுப்படுத்த தரத்தினை உயர்த்தி, கண் மருத்துவத்தில் ஒப்புயர்வுடைய மையமாக அனைத்து வசதிகளும் கொண்ட மதுரை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையை மண்டல கண் மருத்துவ மனையாக

உயர்த்துதலும், மாநிலங்களில் நான்கு இடங்களை தேர்வு செய்து ஒப்புயர்வு மையமாக வலுப்படுத்துதல்.

4. கண் பார்வை இழப்பு தடுப்பினை செயலாக்க முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுத்தல், மற்றும் பின் விளைவுகளை தடுக்க உரிய சிகிச்சை அளித்தல்.

5. மிகவும் வசதி குறைவான இடங்களிலும், சிகிச்சை பெற வழி இல்லாத இடங்களிலும், தவிர்க்க கூடிய பார்வை இழப்பு அதிகமாக உள்ள இடங்களிலும் கண் சிகிச்சை பெற சேவை வழங்குதல்.

**7. சேவையில் தவறு ஏற்படும் பட்சத்தில் அதற்குரிய ஈட்டுத் தொகை பெறுதல்:** இப்பகுதி இச்சங்கத்திற்கு பொருந்தாது எனினும், ஈட்டுத்தொகை பெற விண்ணப்பிக்கும் பட்சத்தில், நீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையில், திட்டத்தை செயல் படுத்தும் துறைகளின் மூலமாக (மருத்துவக் கல்வி இயக்குநர் / மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் / பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து) ஈட்டுத்தொகை வழங்கப்படும்.

# அத்தியாயம் - 15

## இதர இனங்கள்

### முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு, நவீன மருத்துவ வசதிகளை அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலமாக வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவும் அனைவருக்கும் சுகாதார வசதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்ட முக்கியமான திட்டங்களில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டம் ஒன்றாகும். குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.72,000/- ரூபாய்க்கும் குறைவாக உள்ள 1.58 கோடி குடும்பங்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இத்திட்டம் சிறப்பாக ஐந்து ஆண்டுகள் செயல்படுத்தப்பட்டு பொது மக்களுக்கு மகத்தான நன்மை அளித்து கொண்டு இருப்பதால் இத்திட்டம் மேலும் ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து செயல்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா திட்டத்தை தற்போது செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்துடன் 23.09.2018-ல் ஒருங்கிணைத்துள்ளது. யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனம் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

11.01.2017 முதல் தொடர்ந்து செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் முக்கிய சிறப்பம்சங்கள் பின்வருமாறு:

- காப்பீட்டுத் தொகை –பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா திட்டத்தை ஒருங்கிணைத்த பின்பு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆண்டு ஒன்றுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் வரை காப்பீடு உள்ளது.

- சிகிச்சை முறைகள் - அனுமதிக்கப்பட்ட 1027- மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை முறைகள் 154 – சிறப்பு சிகிச்சை முறைகள் - 154 – தொடர் சிகிச்சை முறைகள் - 38 – முழுமையான பரிசோதனை முறைகள் –424 பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா திட்டசிகிச்சை முறைகள் மற்றும் 8 உயர் சிறப்பு சிகிச்சை முறைகள் ஆகியன இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

- இம்மாநிலத்தில் 6 மாதங்களுக்கும் மேலாக வசிக்கும் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் (Migrants), தொழிலாளர் நலத்துறை மூலம் சான்றளிக்கப்பட்டு இத்திட்டத்தில் சேர்க்கப்படுகிறார்கள்.

- மாநில அரசாங்கத்தால் அனாதைகள் என வரையறுக்கப்பட்டவர்கள் இக்காப்பீட்டுத் திட்டத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்படுகிறார்கள்.

- ஏற்கனவே உள்ள காப்பீட்டு அடையாள அட்டை தொடரப்படுகிறது. மேலும் மின்னணு முறையில் அடையாள அட்டையினை முதலமைச்சரின் விரிவான மருத்துவக்

காப்பீட்டுத் திட்ட இணையதளம் மூலமாக பதிவிறக்கம் செய்து அச்சடித்துக் கொள்ளலாம்.

- பயனாளிகளின் ஆதார் எண்ணை முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்துடன் இணைக்கும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- மத்திய அரசின் தர அளவுகோல்கள் மற்றும் தேசிய மருத்துவமனைகள் அங்கீகரிப்பு குழு (NABH) வரையறுத்த ஆரம்பநிலை தர நிர்ணயம் அரசு மருத்துவமனைகள் உட்பட அனைத்து மருத்துவமனைகளுக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- குறைந்த மருத்துவ தகவல் ஆவணங்களை (Minimal Electrocnic Health Record) வலைதளத்தில் பயனாளிகள் பார்வையிடலாம்.
- இத்திட்டத்தில் மொத்தம் 977 மருத்துவமனைகள் (244 அரசு மருத்துவமனைகள் மற்றும் 733 தனியார் மருத்துவமனைகள்) அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

**குறைகள் தீர்த்தல்**: இத்திட்டத்தில் குறைகள் தீர்க்கும் வழிமுறைகள் கணினியில் நேரடி தொடர்பு மூலம் கண்காணித்தல் மற்றும் குறும்செய்தி ஒப்புகை உட்பட நன்கு நிறுவப்பட்டுள்ளது.புகார்களுக்கும் மற்றும் இத்திட்டத்தின் விவரங்களுக்கும் 24 மணி நேரமும் செயல்படும் கட்டணமில்லா தொலைபேசி எண்.1800 425 3993-ஐ மக்கள் பயன்படுத்தலாம். மாநில மற்றும் மாவட்ட கண்காணிப்புமற்றும் குறை தீர்க்கும் குழுக்கள் குறைகளை தீர்க்க அமைக்கப்பட்டுள்ளன.

## “108” - அவசரகால ஊர்தி சேவை

தமிழ்நாட்டில் கட்டணமில்லா ‘108’ தொலைபேசி எண் மூலம் அவசரகால ஊர்தி சேவை செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சேவை அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் பொதுமக்களுக்கு இலவசமாக கிடைக்கிறது. இத்திட்டத்தை, தமிழக அரசு, மற்றும் ஜி.வி.கே. இ.எம்.ஆர்.ஐ. நிறுவனத்துடன் இணைந்து, அரசு தனியார் பங்கேற்பு திட்டமாக (PPP) செயல்படுத்தி வருகிறது. ஒவ்வொரு அவசரகால ஊர்தியிலும், ஒரு ஓட்டுநரும் (PILOT) மற்றும் மருத்துவமனையில் சேர்ப்பதற்கு முன் தேவைப்படும் மருத்துவ சிகிச்சைகளை அளிக்க, அவசரகால பயிற்சி பெற்ற மருத்துவ நுட்புனர் (EMT) ஒருவரும் உள்ளனர்.

**இலவச அமரர் ஊர்தி சேவை:** இந்திய செஞ்சிலுவைச் சங்கம் இலவச அமரர் ஊர்தி சேவையை தமிழ்நாடு சுகாதார திட்டத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் அடிப்படையில் வழங்கி வருகிறது. அரசு மருத்துவமனைகளில் நோயாளிகள் இறக்க நேரிட்டால், அவர்கள் உடலை தமிழகத்தில் உள்ள எந்த மாவட்டமாக இருந்தாலும் இலவசமாக அவர்களின் இருப்பிடத்திற்கோ அல்லது இடுகாட்டிற்கோ இத்திட்டம் மூலம் கொண்டு செல்லப்படுகிறது. இச்சேவையை இலவசமாக பெறுவதற்கு அரசு மருத்துவமனையில் உள்ள மருத்துவ அலுவலரோ அல்லது இறந்தவரின் உறவினரோ 155377 என்ற

தொலைபேசி எண் மூலம் 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம். இச்சேவையின் மூலம் விபத்து, இயற்கை பேரிடர் மற்றும் பேரழிவு காலங்களில் இறந்தோரது உடல்கள் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு கொண்டு செல்லப்படுவதோடு, அதற்கு பின்னர் அவர்களின் இல்லத்திற்கும் கொண்டு சேர்க்கப்படுகிறது. இதுவரை மொத்தம் 6,35,569 இறந்தோரது உடல்கள் இலவசமாக அவர்களின் சொந்த ஊர்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. மேலும் 300 கிலோ மீட்டருக்கு மேல் இருக்கும் இடங்களுக்கு இச்சேவையை பயன்படுத்த கட்டணமின்றி இரயில் மூலம் உடல்கள் வெளி மாவட்டத்திற்கும் மற்றும் பிற மாநிலங்களுக்கும் கொண்டு செல்லப்படுகிறது. இதன் எண்ணிக்கை தற்போது 153 ஆக உள்ளது. வரும் காலத்தில் இவற்றின் எண்ணிக்கையை 180 ஆக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.